# திட்டம்

ஏப்ரல் – 2019 வளர்ச்சிக்கான மாத இதழ் ₹ 22


# இந்தியக் கைவினைக் கலைகளும் ஆடைகளும்





கைவினைஞர்களை மேம்படுத்துதல்
ஷாந்த்மனு

கைவினைப் பொருள்கள்
இந்தியப் பொருளாதாரத்தின் முக்கிய அங்கம்
ஹேனாநக்வி

கைவினைப் பொருள்கள், ஜவுளி
தற்போதைய நிலைமையும் எதிர்கால சாத்தியமும்
ரஞ்சித் மேத்தா

பெண்கள், ஹுனார் மற்றும் நம்பிக்கைத் தரும் தறிகள்
சையதா ஹமீத்

கைவினைக் கலைஞர்களுக்கான
நவீனமயமாக்கலும் திறன் மேம்பாடும்
கவுரவ் கபூர்

கோயில் கட்டடக்கலையில் நாயக்கர்களின் பங்களிப்பு
சொ. சாந்தலிங்கம்

சோழர் காலத்துக் கடல் சார் திறன்பாடும்
துறைமுக மேலாண்மையும்.
கே.ஆர்.ஏ. நரசய்யா

மீநுண் அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்
ஜே. குமார்

# Our Books on Women




**Publications Division**
**Ministry of Information & Broadcasting**
**Government of India**
Soochna Bhawan, CGO Complex
Lodhi Road, New Delhi-110003
**website: www.publicationsdivision.nic.in**

For placing orders, please contact:
**Ph: 011-24367260, 24365610,**
**e-mail: businesswng@gmail.com**
To buy online visit: **www.bharatkosh.gov.in**
**e-version of select books**
**available on Amazon and Google Play**

Follow us on twitter **@ DPD_India**

# திட்டம்

மாத இதழ்

மலர்: 50
இதழ்: 20

ஏப்ரல் 2019
வைசாக - சைத்ர 1941
விளம்பி வருடம் பங்குனி - சித்திரை



- ❖ தலையங்கம்
- ❖ கைவினைஞர்களை மேம்படுத்துதல் – ஷாந்த்மனு
- ❖ கைவினைப் பொருள்கள் இந்தியப் பொருளாதாரத்தின் முக்கிய அங்கம் – ஹேனாநக்வி
- ❖ கைவினைப் பொருட்கள், ஜவுளி தற்போதைய நிலைமையும் எதிர்கால சாத்தியமும் – ரஞ்சித் மேத்தா
- ❖ பெண்கள், ஹுனார் மற்றும் நம்பிக்கைத் தரும் தறிகள் – சையதா ஹமீத்
- ❖ கைவினைக் கலைஞர்களுக்கான நவீனமயமாக்கலும் திறன் மேம்பாடும் – கவுரவ் கபூர்
- ❖ இந்தியப் பொருளாதாரத்தில் ஜவுளி மற்றும் கைவினைக்கலைகளின் பங்கு – சிஷிர் சின்ஹா
- ❖ காதியின் பயணம்: காந்தியின் கைத்தறித் துணியில் இருந்து பேஷனின் குறியீடு வரை – வி.கே.சக்சேனா
- ❖ கோயில் கட்டடக்கலையில் நாயக்கர்களின் பங்களிப்பு – சொ. சாந்தலிங்கம்
- ❖ சோழர் காலத்துக் கடல் சார் திறன்பாடும் துறைமுக மேலாண்மையும். – கே.ஆர்.ஏ. நரசய்யா
- ❖ நம் பாரம்பரிய வரவு – சுனில் சேத்தி
- ❖ வடகிழக்கில் நெசவுத் தொழில் மேம்பாடும் வளர்ச்சியும் – ஜே.வி.மணிஷா பஜாஜ்
- ❖ மீநுண் அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் – ஜே. குமார்



முதன்மை ஆசிரியர்
**ஷமிமா சித்திக்**

ஆசிரியர்
**சஞ்சய் கோஷ்**


கட்டுரையாளர்களின் கருத்துகள் அவர்களுடையதே. எல்லாக் கருத்துகளும் அரசின் கருத்துகளை ஒட்டி இருக்கும் என்று கூற இயலாது.

திட்டமிடுதல் மற்றும் நாட்டின் வளர்ச்சியைப் பற்றியது இந்த ஏடு. மொத்தம் 13 மொழிகளில் இது வெளியாகிறது. திட்டத்தினால் ஏற்படும் நன்மைகளை இது விளக்குகிறது என்றாலும் அரசின் கருத்துக்களை மட்டுமே தெரிவிப்பது இதன் நோக்கமல்ல.

**சந்தா விவரம்**

| | | |
|---|---|---|
| தனிப்பிரதி | ... | ரூ. 22.00 |
| சிறப்பிதழ் | ... | ரூ. 30.00 |
| ஓர் ஆண்டு | ... | ரூ. 230.00 |
| இரண்டாண்டு | ... | ரூ. 430.00 |
| மூன்றாண்டு | ... | ரூ. 610.00 |


சந்தா (DD அல்லது MO) அனுப்ப வேண்டிய முகவரி:

உதவி இயக்குநர்
**திட்டம்**
வெளியீட்டுப் பிரிவு
A, Wing ராஜாஜி பவன், பெசன்ட் நகர்,
சென்னை – 600 090.
தொலைபேசி: 044–2446 5382


Log on to **http://publicationsdivision.nic.in/**
in collaboration with **bharatkosh.gov.in**

# கைவினைக் கலைகள்

இந்தியாவின் ஒவ்வொரு பகுதியும் தனக்கே உரித்தான தனிவகையான கைவினைப் பாரம்பரியத்தைப் பெற்றுள்ளது. கைவினைப் பொருள்கள் பெரும்பாலும் ஆங்காங்கே கிடைக்கக் கூடிய பொருள்களைப் பயன்படுத்தியே உருவாக்கப் படுகின்றன. அதிகமான பேர் வேலைபார்க்கும் பிரிவாக இது இருப்பதால் நாடு முழுவதும் இலட்சக்கணக்கான கைவினைக் கலைஞர்களுக்கு இது வேலை வாய்ப்பினை அளிக்கிறது. கைவினைப் பொருள்களை உருவாக்கும் பல கைவினைஞர்களுக்கும், பணியாளர்கள் பலருக்கும் இது ஒரு முழுநேர வாழ்வாதாரமாக இருக்கிறது. விவசாயத் தொழி லாளர்களுக்கு வருவாய்க்கான மாற்று மூலமாகவும் இது திகழ்கிறது. விவசாய வேலைகள் இல்லாத சமயங்களில் இவர்கள் இதில் ஈடுபடுகின்றனர். விவசாயக் குடும்பங்களில் உள்ள பெண்கள் ஆடவர்கள் வயல் வேலைகளுக்குச் சென்றதும், இதனை இலாபம் தரும் ஒரு வேலையாகக் கருதிச் செய்கின்றனர். இந்தியாவின் கிராமப்புற பகுதிகள் அனைத்திலும் முக்கியமான வாழ்வாதரமாக கைவினைக்கலை விளங்குகிறது.

இந்தப் பிரிவு மிக முக்கியமான அந்நிய செலாவணி ஈட்டும் பிரிவாகும். ஏற்றுமதிக்கான வாய்ப்பு இதற்கு அதிக மாக உள்ளது. இந்திய கைவினைப் பொருள்களுக்கும், துணிகளுக்கும் அயல் நாடுகளில் ஏகப்பட்ட கிராக்கி நிலவுகிறது. இந்தியக் கைவினைக் கலைகளின் மையமான கருத்தோட்டமும், வண்ணமயமான அதன் இழை நயங் களும் இதற்குக் காரணமாகும். இந்திய கைவினைப் பொருள்களான சால்வைகள், ஆபரணங்கள், பைகள், மர வேலைப்பாடுகள், பின்னல் வேலைகள் ஆகியவை சர்வதேச அளவில் பிரசித்தமானவை.

இந்திய வரலாறு பயிலும் ஒவ்வொரு மாணவனும் புகழ் மிக்க மொகஞ்சதாரோ, ஹரப்பா நாகரிகங்கள் செழித்தோங்கி யிருந்த இடங்களில் காணப்பட்ட கலைப் பொருள்களைப் பற்றி நன்றாக அறிவார்கள். நடனமாடும் பெண்ணின் சிலை, ஆபரணங்கள் ஆகியவை இதற்கு சான்றுகளாகும். சிந்து சமவெளி நாகரிக காலம் தொட்டே கைவினைக் கலைகள் இந்தியப் பாரம்பரியத்தின் ஒரு பகுதியாகவே இருந்து வந்திருக்கின்றன என்பது தெளிவாகத் தெரிகிறது. பின்னால் வந்த மக்கள் இனங்களும், அரச வம்சத்தினரும், தங்களது தனித்தன்மையான பாணியை கைக்கொண்டு, பிரத்யேகமான சில பொருள்களைப் பயன்படுத்தி இந்தக் கலைக்குப் பங்களிப்பு செய்து ,பெருமைக்குரிய இந்தப் பாரம்பரியத்தை தொடர்ந்தனர். சஹரான்பூர் மரவேலைப்பாடுகள், ஆந்திராவில் பித்ரி வேலைப்பாடுகள், இந்தோ பாரசிக பாணியிலான மலர் வடிவங்கள், காஞ்சிபுரம் பட்டுப்புடவைகளில் காணப்படும் செழிப்புமிக்க ஜரிகைகள், ராஜஸ்தானத்தின் கைப்பாவைகள் போன்றவை இதற்கான எடுத்துக்காட்டுகளாகத் திகழ்கின்றன.

இந்தியத் துணிகளின் பாரம்பரியம், வீடுகளில் நூற்கப்பட்ட பருத்தியைக் கொண்டு ஆடைகளை நெய்து வந்த சிந்து சமவெளி காலம் வரை பின்னோக்கி நீள்கிறது. இந்தியாவின் ஒவ்வொரு பகுதிக்கும் அதற்கே உரித்தான தனி வகை ஆடைப் பாரம்பரியம் இருக்கிறது. தென்னகத்தின் செழுமையான காஞ்சிபுரம் பட்டுப் புடவைகள், வடகிழக்கின் முகா, டுஸ்ஸார் பட்டுக்கள், கம்பீரமான பனாரசி புடவைகள், சந்தேரி பருத்தி, பட்டுத்துணிகள், காஷ்மீரின் பஷிமினா, ஷாடுஷ் சால்வைகள், பளிச்சிடும் பின்னல் வேலைப்பாடுகளைக் கொண்ட ராஜஸ்தான், கட்ச் ஆடைகள், பஞ்சாபின் புல்காரி வேலைப்பாடுகள் இவை அனைத்துமே இந்திய ஆடைப் பாரம்பரியத்தின் செழுமையை உருவகப்படுத்துகின்றன. இந்தியாவின் பட்டு, சணல் ஆடைகள் உலகப்புகழ் பெற்றவை. இவற்றிற்கு உலகெங்கும் கிராக்கி இருந்துவருகிறது.

கைவினைக் கலைஞர்களின் திறன்களை மேம்படுத்துவதில் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. திறன்களை வளர்த்துக் கொள்வதன் மூலம் இவர்கள் புதிய தொழில்நுட்பங்கள், வடிவமைப்புகள் பற்றி தெரிந்து கொள்ள முடிகிறது. தங்களின் உற்பத்திப் பொருள்களை சர்வதேசத் தரத்திற்கு தரம் உயர்த்தவும் இது உதவுகிறது. இதன் மூலம் இந்தப் பிரிவின் உள்ளார்ந்த வலிமை பெருகி, பெருத்த அளவிலான பொருளாதார ஊக்கம் கிடைத்திட வழிவகை செய்கிறது. இவர்களை பொருளாதா ரீதியுலும், சமூக ரீதியிலும் வலுப் பெறச் செய்வது முக்கியமானதாகிறது.

இந்தப் பிரிவில் பெண்கள் பெருமளவில் பணிபுரிகின்றனர். மிகவும் நுண்மையான கைவினைப் பொருள்களையும், ஆடை களையும் உற்பத்தி செய்வதற்கு இவர்களின் கைத்திறம் மிகுந்த கரங்கள் உதவி செய்கின்றன. மர பொம்மைகள், துணிகளில் பூவேலைகள், தரைவிரிப்புகளை நெய்தல் ஆகிய வற்றில் பெண்களே இந்தத்துறையில் முதுகெலும்பாகத் திகழ்கின்றனர்.

இந்தக் கைவினைக் கலை பழங்காலப் பாரம்பரியத்தைச் சேர்ந்ததாக இருப்பதால், இதில் ஈடுபட்டிருக்கும் பல கலை ஞர்கள் தங்களின் மூதாதையர்களிடமிருந்து இதனைக் கற்றுக் கொண்டு, இந்தக்கலையில் மிக உயரிய திறன்களையும், சிறப்பான பயிற்சியையும் பெற்றிருக்கின்றனர். இதுதான் இந்தத் துறையை தனித்தன்மை கொண்டதாக வைத்திருக்கிறது. இத்தகைய பாரம்பரியக் கலை அழிந்துவிடாமல் காப்பாற்றுவது மிகவும் முக்கியமானதாகும். இந்தப் புராதனக் கலை செழித்தோங்குவதையும், கைத்திறமிக்க கரங்கள் பொருளாதார ரீதியாக தன்னிறைவு பெறுவதையும் உறுதிப்படுத்த வேண்டிய தேவை இதில் தொடர்புடைய அனைவருக்கும் இருக்கிறது.

*- ஆசிரியர்.*

# உயர் திறன் வாய்ந்த கைகளின் மாயவித்தை: கைவினைஞர்களை மேம்படுத்துதல்

- ஷாந்த்மனு

இந்தியாவில் கைவினைக் கலைகளின் தோற்றம் குகைகளில் வாழ்ந்த ஆதி மனிதனின் காலத்தில் இருந்தே தொடங்குகிறது. ஆதிமனிதன் தனது உணர்ச்சிகளுக்கு படைப்பாக்க வடிவம் கொடுத்து பாறைகளில் உருவங்களாக வரைந்து வெளிப்படுத்தினான். நாட்டுப்புற பண்பாடுகளிலும், அழகியல் வெளிப்பாடுகளிலும் பாதுகாக்கப்படுகிற பல்வேறு திறன்கள் நுட்பங்கள், கலை வடிவங்கள் வாயிலாக காலங்கள் தோறும் இந்தக் கலை பயணித்து வந்திருக்கிறது. கைத்திறம், வடிவமைப்பு உத்திகள், வண்ணங்கள் வழங்கும் உத்திகள் ஆகியவற்றிற்காக இந்தியக் கைவினைஞர்கள் எப்போதுமே அங்கீகாரம் பெற்று வந்துள்ளனர். மொஹஞ்சதாரோ, ஹரப்பா அகழ்வாய்வுகள் கிறிஸ்து பிறப்பதற்கு இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்பே இந்தியக் கைவினைக் கலைகள் சிறப்பாக இருந்தமையையும், உலகத்தால் அவை ஏற்றுக்கொள்ளப்பட்டமையையும் நிறுவுகின்றன. கிராமப்புற கைவினைஞர்களுக்கு அந்தக் காலத்தில் வேலைவாய்ப்புகளை அளித்து வந்ததோடு, இணையானதொரு கிராமப் பொருளாதாரத்தைக் கட்டி எழுப்புவதிலும் முக்கியமான பங்கினை குடிசைத் தொழில்கள் செய்தன. இப்போது கூட சிறு அளவிலான குடிசைத்தொழில்கள் பிரிவு ஏராளமான பெண்களைக் கொண்ட நலிந்த பிரிவு மக்களுக்கு வேலைவாய்ப்புகளை அளிப்பதன் மூலம் கைவினைஞர்களின் சமூகப் பொருளாதார பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கு உதவுகின்றது.

கைவினைக்கலைகள் மக்களின் கைத்திறம் என்று சரியாகவே வருணிக்கப்படுகின்றது. இந்த வார்த்தை ஒரு தொழிலாகப் புரிந்து கொள்ளப்படுவதோடு மட்டுமின்றி, அன்றாடத் தேவைகளையும், அழகியல் ஆர்வத்தையும் நிறைவேற்றி வைக்கும் ஒன்றாகவும் திகழ்கிறது. கைவினைஞர்களின் அழகியல் வெளிப்பாடுகளாகவும் இவை புரிந்து கொள்ளப்படுகின்றன. 1995ஆம் ஆண்டில் லூயி ஷோப்பி வழக்கில் உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்பில் கைவினைக்கான வரையறை விளக்கி உரைக்கப்பட்டுள்ளது. “பெரும்பாலும் இது கைகளால் உருவாக்கப்படுவது. இதன் வழிமுறையில் சில கருவிகள் பயன்படுத்தப்பட்டாலும் குற்றமில்லை. அலங்கரிப்பு, கல் முதலானவற்றைப் பதித்து அழகுபடுத்துவது அல்லது இதைப்போன்ற வேலைப்பாடுகளில் கலைத் திறத்தைக் கொண்டிருந்து பார்வைக்கு அலங்காரமான தோற்றத்தை அது வழங்கவேண்டும். இத்தகைய நோக்கு நிலை உண்மையான இயல்புடன் கூடியதாக இருக்க வேண்டுமே அன்றி பாசாங்கானதாக இருக்கலாகாது” அன்று அந்தத் தீர்ப்பு விவரிக்கிறது.

கைவினைக் கலைப்பிரிவு தேசத்தின் பொருளாதாரத்தில் மிகவும் குறிப்பிடத்தக்க முக்கியமான ஒரு பங்கினை ஆற்றுகிறது. கிராமங்கள், சிறு நகரங்களில் வசித்துவரும் மிக விரிவான ஒரு பகுதியினரான கைவினைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குவதுடன், கணிசமான அந்நிய செலாவணியையும் ஈட்டித் தருகிறது. பண்பாட்டுப் பாரம்பரியத்தையும் பாதுக்கக்கிறது. நாடு முழுவதும் பரவிக்கிடக்கும் ஏராளமான கைவினைஞர்களுக்கு மட்டுமின்றி, இந்தக் கலைகளை கற்றுக் கொள்ள விரும்பி புதிதாக வந்து கொண்டிருக்கும்





எண்ணற்றவர்களுக்கும் வாழ்வாதரமாக கைவினைக்கலை திகழ்கிறது.

தோராயமாக 70 இலட்சம் கைவினை ஞர்கள் இந்தியாவில் உள்ளனர். இவர்களில் தரைவிரிப்பு பிரிவிலும், உலோக வேலைப்படுகள், ஜரிகை வேலைப்பாடுகள், டெரகோட்டா, கற்சிற்பங்கள் செதுக்குதல், புல்காரி, மர வேலைப்பாடு, சிக்கங்கிரி, பிரம்பு மூங்கில் வேலைப்பாடுகள், நீல மண் பானைகள், கட்ச் பூத்தையல்கள் ஆகிய 500க்கும் மேற்பட்ட கைவினைக் கலை வகைகளில் ஈடுபட்டு வரும் 20 இலட்சம் பேர்களும் அடங்குவர், இவைகளில் 35 கைவினைக் கலைகள் அழியக்கூடிய நிலையில் இருக்கும் கைவினைக் கலைகளாக அடையாளம் காணப்பட்டுள்ளன. அஸ்ஸாமிய அணிகலன்கள், ரோகன் ஓவியங்கள், கஞ்சீபா அட்டை, கல்சம்பா ரூமல். மைசூரின் கஞ்சிபா அட்டைகல், காஷ்மீரின் பேப்பர் மாக்கி, மதுபாணி ஓவியங்கள், ராஜஸ்தானின் கத்புட்லிஸ், ஒடிசாவின் பட்டசித்ரா, வாரணாசியின் கண்ணாடி மணிகள் போன்ற மற்ற 92 வகைப்பட்ட கைவினைக் கலைகள் புவிசார் குறியீடு சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன. இந்தப்பிரிவுகளில் பணிபுரிபவர்களில் 56 சதவீதம் பேர் பெண்கள்.

கைவினைஞர்கள் முறைசாராத பிரிவுகளில் அதிகம் பணிபுரிகின்றனர். இதனால் இடைத்தரகர்களால் சுரண்ட லுக்கு உள்ளாகின்றனர். மூலதனம் இல் லாமை, புதிய தொழில்நுட்பங்கள் இல் லாத நிலை, சந்தைகள் பற்றிய தகவல் போதாமை, நிறுவனக் கட்டமைப்பு இன்மை போன்றவை சவால்களாகும். இத்தகைய பிரச்சினைகளைத் தீர்ப் பதற்கு வரிசையான பல முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன. உற்பத்திப் பொருள்களின் தரம், உள்நாட்டு விற்பனை ஏற்றுமதி ஆகியவற்றில் 12ஆவது திட்ட காலத்தில் நல்ல வளர்ச்சி தென்பட்டு வருகிறது.

இந்திய அரசாங்கத்தில் கைவினை அடிப்படையிலான செயல்பாடுகளுக்கு ஒப்புதல் அளிக்கும் முகமையாக மேம் பாட்டு ஆணையர் (கைவினைகள்) அலுவலகம் அமைந்துள்ளது. கைவினைக்கலை வளர்ச்சி, மேம்பாடு, சந்தைப்படுத்துதல், ஏற்றுமதி, கைவினை வடிவங்கள், திறன் மேம் பாடு ஆகியவற்றிற்கு இந்தத் துறை உதவுகிறது. தொழில்நுட்ப, நிதி உதவிகள் வழங்கப்படுகின்றன. கள அலுவலகங்களின் மூலம் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

கைவினைக்கலைகளை மேம் படுத்தும் தேசத்தின் முயற்சிகளுக்கு இந்தத் துறை முன்நின்று பல்வேறு முயற்சிகளை மேற்கொள்ளுகிறது. கைவினைஞர்களுக்கும் ஆதரவு அளிக்கிறது. மும்பை, கொல்கத்தா, சென்னை, லக்னோ, குவஹாட்டி, தில்லி ஆகிய இடங்களில் இதன் மண்டல அலுவலகங்களும், இவை தவிர 53 கள அலுவலகங்களும் இருக்கின்றன.

தேசத்தின் பல்வேறு பகுதிகளிலும் ஆண்டுதோறும் பல்வேறு உள் நாட்டு, பன்னாட்டு சந்தை இணைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுகின்றன. காந்தி சிற்பக் கடைவீதி, கைவினைக் கடைவீதி போன்றவற்றின் மூலம் உள்நாட்டு விற்பனை மேடை அமைத்து தரப்படுகிறது. தேசத்தின் முக்கியமான பகுதிகளில் கைவினைக் கண்காட்சிகள் நடத்தப்படுகின்றன. சர்வதேச சந்தை செயல்பாடுகளில் பரிசு பெற்ற கைவினைஞர்கள் பங்கேற்கச் செய்யப்படுகின்றனர்.

சிற்ப குரு விருது, தேசிய விருது, தேசிய தகுதிச் சான்றுகள், வடிவமைப்பில் புதுமைக்கான விருதுகள் ஆகியவை தேர்ந்த கைவினைஞர்களுக்கு வழங்கப்படும் உயரிய விருதுகளில் அடங்கும். பழம் பெரும் பாரம்பரியத்தை உயிர்போடு வைத்திருப்பதும், திறமையான கைவினைஞர்களுக்கு அங்கீகாரமும், ஊக்கமும் அளிப்பதும் இதன் நோக்கமாகும். 10 சிற்பகுரு விருதுகளும், 30 தேசிய விருதுகளும் (பெண்களுக்கான 5 தேசிய விருது களும், அழியும் நிலையில் உள்ள கைவினைக் கலைகளை ஊக்கப்படுத்து வதற்கான 5 தேசிய விருதுகளும் இவற்றில் அடங்கும்), 40 தேசிய தகுதிச் சான்றுகளும், புதுமையான வடிவமைப்புக்கான 3 விருதுகளும் ஆண்டு தோறும் வழங்கப்படுகின்றன. அழியும் நிலையில் உள்ள கைவினைக் கலைகளுக்கான விருதுகள் 2016 முதல் வழங்கப்பட்டு வருகின்றன.

உலகச் சந்தையில் கைவினைப் பொருள்களை உற்பத்தி செய்து வழங்கும் ஒரு முக்கியமான நாடாக இந்தியா இருக்கிறது. மாறி வரும் உலகச் சூழலில் உலக நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் கைவினைப்

பொருள்கள் சர்வதேச சந்தைகளில் நவீன வாழ்க்கை பாணியின் ஒரு அங்கமாக இருக்கின்றன. நுகர்வோரின் மாறி வரும் சுவைகள், போக்குகளின் காரணமாக இந்தத் தாக்கம் ஏற் பட்டுள்ளது. திறமையான 70இலட்சம் இந்தியக் கைவினைஞர்களும் இதற்கு காரணமாகிறார்கள். இருப்பினும் மாறி வரும் உலகச் சந்தையில் பொருள்களுக்கான மதிப்புக் கூட்டுதல் தேவைப்படுகிரது. சீனா, கொரியா, தாய்லாந்து ஆகிய நாடுகளுடன் போட்டி போடவும் வேண்டியிருக்கிறது. உள்நாட்டிலும், உலக அளவிலும் இந்தியாவின் கைவினைப் பொருள் களுக்கு மிக அதிகமான தேவை இருந்து வருகிறது. 199 வகைப்பட்ட கைவினைப் பொருள்கள் இப்போது இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப் படுகின்றன. கைவினைப் பொருள்களின் மிகப் பெரிய ஏற்றுமதியாளர் இந்தியா வாகும். ஆண்டுக்கு ஆண்டு ஏற்றுமதி அதிகரிக்கும் போக்கும் தெரிகிறது. கைவினைப் பொருள்கள் ஏற்றுமதியில் கடந்த ஐந்து ஆண்டுகளில் முன்னணி வகிக்கும் முதல் பத்து நாடுகள் அமெரிக்கா, ஐக்கிய அரபு நாடுகள், இங்கிலாந்து, ஜெர்மனி, நெதர்லாந்து, பிரான்ஸ், ஆஸ்திரியா, இத்தாலி, கனடா, லத்தீன் அமெரிக்க நாடுகள், ஜப்பான், சுவிட்சர்லாந்து ஆகியவையாகும்.

உலகிலேயே அதிகமாக கைவினைப் பொருள்கள் உற்பத்தியும் ஏற்றுமதியும் செய்துவரும் நாடு இந்தியா ஆகும். உலக நாடுகளின் மொத்த ஏற்றுமதியில் 35 சதவீதம் இந்தியாவினுடையது. இந்தியாவில் உற்பத்தியாகும் கைவினைப்பொருள்களில் 85 சதவீதம் நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றன. அமெரிக்கா தனது உற்பத்தியில் 45 சதவீத ஏற்றுமதியையும், ஜெர்மனி, இங்கிலாந்து ஐக்கிய அரபு எமிரேட்ஸ் ஆகியவை சேர்ந்து தமது உற்பத்தியில் 20 சதவீத ஏற்றுமதியையும் செய்துவருகின்றன. சீனா, தென் அமெரிக்க நாடுகளான பிரேசில், மெக்சிகோ, சிலி, ஈக்வடார் ஆகியவை முகிழ்த்துவரும் சந்தைகளாகும். இந்தியாவின் கைவினைப் பொருள்கள் அவற்றின் அழகான வடிவங்கள், தொழில் நேர்த்தி, விதவிதமான வகைகள், சூழலுக்கு உகந்த சாயங்கள், தரமான சேவைகள், மலிவான விலை ஆகியவற்றிற்காக பெயர் பெற்றவை. ஒரு சதுர அங்குலத்தில் 16 முடிச்சுகள் முதற்கொண்டு 2500 முடிச்சுகள் வரை கொண்டிருக்கும் கைகளால் செய்யப்பட்ட தரைவிரிப்புகளை உற்பத்தி செய்யும் ஒரே தேசம் இந்தியா தான். இவற்றில் 10 வகைப்பட்ட மூலப்பொருள்கள் பயன்படுத்தப்படுகின்றன. எல்லா வடிவங்களிலும், அளவுகளிலும், நிறங்களிலும் இவை கிடைக்கின்றன.

இந்தியாவின் பங்களிப்பிற்கு அங்கீகாரம் அளிக்கும் விதத்தில், உலக அளவில் நடைபெறும் பழமையான, ஒரு மிகச் சிறந்த கைவினைக் கண்காட்சியில் இந்தியா பங்களிப்பு நாடாக சேர்த்துக் கொள்ளப்பட்டது. 'Ambiente 2019' என்ற இந்தக் கண்காட்சியை பிப்ரவரி 12, 2019 முதல் ஜெர்மனி நடத்தியது. இந்தியா இதில் பங்களிப்பு செய்துள்ளது. 80 நாடுகளைச் சேர்ந்த 4500 கம்பெனிகள் இதில் பங்கேற்றன. 517 இந்திய கம்பெனிகள் தங்களது அழகிய கிறிஸ்துமஸ் அலங்கரிப்புகள், நவீன அணிகலன்கள், மரக் கைவினைப் பொருள்கள், துணிகள், தோல் பொருள்கள், விளக்கு கள், மண்பாண்டங்கள் ஆகியவற்றைக் காட்சிப் படுத்தியதுடன், பார்வை யாளர்களின் கண் முன்னாலேயே கைதேர்ந்த கைவினைஞர்கள் உற்பத்தி செயல்விளக்கம் செய்து காட்டும் நிகழ்வு களும் இடம்பெற்றன. இந்தியாவில் உற்பத்தியான சுற்றுச்சூழலுக்கு உகந்த கைவினைப் பொருள்கள் இங்கு நேர்த்தியாக காட்சிப்படுத்தப்பட்டன.

புதுதில்லி பிரகதி மைதானில் உள்ள தேசிய கைவினை, கைத்தறி அருங் காட்சியகம் கைவினைக் காட்சியகம் என்று பிரபலமாக அறியப்படுகிறது. இந்தக் காட்சியகக் கட்டடத்தின் கட்டுமானக் கலை காரணகர்த்தா புகழ்பெற்ற கட்டடக் கலை நிபுணர் சார்ல்ஸ் கோரியா என்பராவார். கைவினைஞர்கள், நெசவாளர்கள் ஆகியோரின் கைவண்ணங்களையும், கலைவண்ணங்களையும் கண்டு களிப்பதற்கு ஏற்ற இடம் இதுவாகும். இங்கு தலைசிறந்த கைவினைஞர்களை நேரடியாக சந்திக்கவும், கைவினைப் பொருள்களை வாங்கவும், கைவினைப் பொருள்கள் பற்றிய நேரடி விளக்கங் களைக் காணவும் முடியும். இந்தக் காட்சியகம் மிகவும் விஸ்தாரமானது. இங்குள்ள கலைக்காட்சிக் கூடங்கள் கைவினை, கைத்தறிப் பாரம்பரியம் பற்றிய விரிவான விளக்கங்களைத் தருகின்றன. ●



- **ஷாந்த்மனு**, இந்திய அரசாங்கத்தின் ஜவுளித் துறையில் கைவினைப் பொருள் களுக்கான வளர்ச்சி ஆணையர்.


# கைவினைப் பொருள்கள்
# இந்தியப் பொருளாதாரத்தின் முக்கிய அங்கம்

- ஹேனாநக்வி

**ந**ம்நாட்டில் பலவகையான அழகிய கைவினைப் பொருள்கள் உருவாக் கப்படுகின்றன. ஒவ்வொரு மாநிலத்திலும் அந்தப்பகுதியில் வாழும் மக்களின் பண் பாட்டையே இது விளக்குகிறது. தனித் தன்மையான கைவினைப்பொருள்கள் உண்டு. பரம்பரையாகவரும் இக் கைவினைப்பொருள் உற்பத்தியில் பல கைவினைஞர்களின் வாழ்வு அமைந் துள்ளது. ஆகவே இந்தியப் பொரு ளாதாரத்திற்கு இத்துறையின் பங்களிப்பு மிகப் பெரிய அளவில் உள்ளது. இந்தக் கட்டுரையில், இந்தியப் பொருளாதாரத்தில் கைவினைப் பொருள்களின் பங்கு பற்றியும் சமீபத்தில் இத்துறையை வலுப்படுத்த அரசு மேற்கொண்டுள்ள முயற்சிகளும் விளக்கப்பட்டுள்ளது.

'சிறியவை, அழகானவை' என்ற பிரபல புத்தகத்தை எழுதிய E.F. ஷூமாக்கர் சிறியனவற்றின் அழகை அருமையாக விவரிக்கிறார். சிறியவை அழகானவை மட்டுமல்ல. சிலசமயங்களில் மிகவும் திறமை வாய்ந்தவைகளாகவும் உள்ளன. அதைப் போலத்தான் கைவினை ஞர்களால் உருவாக்கப்படும் அழகிய சிறிய கைவினைப் பொருள்ளும். இந்த சிறுதொழில் கைவினை நிறு வனங்கள் அழகானவை, வலிமை வாய்ந்தவை. அவை, குறு தொழிலாக இருந்தாலும்,நம் பொருளாதாரத்திற்கு






***ஆதாரம்: கைவினைப்பொருள்கள் மேம்பாட்டு ஆணையரக வலைதளம், ஜவுளித்துறை அமைச்சகம், இந்திய அரசு.***

குறிப்பாக கிராமப்புற பொருளாதாரத்திற்கு இன்றியமையாதவை.

இந்தியப் பண்பாட்டின் ஒருமுக்கிய அங்கமாக, பலதரப்பட்ட அழகிய கைவினைப் பொருள்கள் விளங்குகின்றன. குஜராத்தின் கட்ச் எம்ப்ராய்ட்ரி ஆகட்டும், உத்திரபிரதேசத்தின் ஜர்தோசி மற்றும் சிக்கன்காரி ஆகட்டும், கர்நாடகத்தின் மர பொம்மைகளாகட்டும், அஸ்ஸாமின் மூங்கில் கலைப்பொருள்களாகட்டும், ராஜஸ்தானின் பொம்மலாட்டப் பொருள்களாகட்டும், பீஹாரின் சிக்கி, திக்குல்லி மற்றும் மதுபனி கலைப் பொருள்களாகட்டும் இவை அந்தந்தப் பகுதிகளில் பாரம்பரிய கலைகளாக மட்டும் விளங்காமல், கைவினைஞர்களின் பிறவருமானங்களுக்கு முக்கிய ஆதார மாகவும் விளங்குகின்றன. இந்தத் துறை யில் இந்தியா பன்னாட்டுச் சந்தையில் தனி முத்திரையைப் பதித்துள்ளது.

கைவினைப் பொருள்கள் என்பவை கைகளால் செய்யப்படும் பொருள்கள் மட்டுமல்லாமல் சிறிய தொழில் நுட்பத்தோடு செய்யப்படும் பொருள்களுமாகும். இந்தியாவின் பன்முகத் தன்மையைப் போலவே, நம் கைவினைப்பொருள்களும் பன்முகம் கொண்டு, பலதரப்பட்டவையாகும். சில அழகுப்பொருள்களாகவும், மதம் சார்ந்த பொருள்களாகவும், சரித்திரம் மிக்க பொருள்களாகவும், கலைப் பொருள் களாகவும், அழகுபொருள்களாகவும், அன்றாடம் பயன்படுத்தப்படக்கூடிய பொருள்களாகவும், சிலமாதிரிகளாகவும் விளங்குகின்றன. இந்தத் துறையில், கிராமப்புற குடிசைத் தொழில்கள், கைத்தறி மற்றும் தரைவிரிப்பு உற்பத்தித் துறைகளும் அடங்கும். கைவினைப் பொருள்கள், அந்தந்தப் பகுதிகளில் கிடைக்கும் மூலப் பொருள்களைக் கொண்டு தயாரிக்கப்படுகின்றன. இவற்றை தயாரிக்க பலதரப்பட்ட மூங்கில்கள், களிமண், நூல்கள், பிரம்புகள், துணிகள்,

மணிகள், கண்ணாடி, இயற்கை மற்றும் செயற்கை வண்ணங்கள், முத்திரைகள், உலோகங்கள், பீங்கான்கள் போன்றவை பயன்படுத்தப்படுகின்றன.

கிராமப்புறங்களில் வாழும் மக்களில் சுமார் 70 சதவிகித மக்கள் நேரடியாகவோ, மறைமுகமாகவோ, விவசாயத்தை தங்களுடைய அடிப்படை வாழ்வாதாரமாகக் கொண்டவர்கள். விவசாயம் அல்லாத அல்லது குறைந்த விவசாயம் உள்ள காலகட்டங்களில் இவர்களின் உணவு மற்றும் பிற பாதுகாப்புக்கு கைவினைப் பொருள்கள் உற்பத்தி ஒரு மாற்று வாழ்வாதாரமாக உள்ளது. 11வது ஐந்தாண்டுத் திட்டத்தின் போது மேற்கொள்ளப்பட்ட மக்கள்தொகைக் கணக்கெடுப்பில் 68.86 இலட்சம் கைவினைஞர்கள் இருந்ததாக கண்டறியப்பட்டுள்ளது.

இதனால் இந்தத் துறையின் அளவும், வலிமையும் நன்கு விளங்கும். இந்தத் துறையில் கைவினைஞர்களுக்கு பலதரப்பட்ட வேலைவாய்ப்புகள் கிடைக்கின்றன. கைவினைப் பொருள்கள் தயாரிக்கத் தேவையான மூலப்பொருள்கள் உற்பத்தி, கைவினைபொருள்கள் தயாரிப்பு மற்றும் அவற்றின் வியாபாரம் ஆகியவை வேலைவாய்ப்புகளை வழங்குகின்றன.

இந்தத் துறையில், மற்றொரு பிரிவில் மற்ற சில மக்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். இவர்கள் நேரடியாகவோ, மறைமுகமாகவோ ஏற்றுமதி வியாபாரத்தில் ஈடுபட்டிருப்பவர்கள். கைவினைப் பொருள்களின் ஏற்றுமதியால் இந்தியாவில் கணிசமான அளவிற்கு அந்நிய செலாவணி கிடைக்கிறது. கைவினைப்பொருள்கள் ஏற்றுமதி தொடர்ந்து உயர்ந்து மொத்த ஏற்றுமதியில் முக்கிய பங்கு வகிக்கிறது.

பத்திரிகை தகவல் அலுவலகத்தின் குறிப்பின்படி 2015ஆம் ஆண்டில் கைகளால் நெய்யப்பட்ட தரைவிரிப்புகள் உட்பட கைவினைப் பொருள்களின் உற்பத்தி அளவு ரூ.41418 கோடியாகவும் இவற்றின் ஏற்றுமதி அளவு ரூ.30939 கோடியாகவும் இருந்ததாக மதிப்பிடப்பட்டுள்ளது. இதனால், இந்தத் துறை இந்தியப் பொருளாதாரத்திற்கு ஆற்றும் பங்கு தெளிவாகிறது.

இந்திய மற்றும் பன்னாட்டு சுற்றுலா பயணிகள் ஞாபகப் பொருள்களாக இந்திய கைவினைப் பொருள்களை வாங்குகிறார்கள். இந்த கைவினைப் பொருள்கள் சுற்றுலாத் தளங்களுக்கு கூடுதல் மதிப்பைக் கூட்டி அதன் அருகே வாழும் கைவினைஞர்களுக்கும், சிறு வியாபாரிகளுக்கும் சேவை நிறுவனங்களுக்கும் வருமானம் கொடுக்கின்றன. கைவினைப் பொருள்கள் துறை மூலம் மறைமுகமாக இவர்களுக்கு வருமானம் கிடைக்கிறது. பெரும்பாலும் அவர்கள் முறைப்படுத்தப்படாத துறைகளில் பணியாற்றுவதால் அவர்கள் பற்றிய தகவல்கள் முழுமையாக இல்லை. இருந்தாலும், கைவினைப் பொருள்கள் சுற்றுலாத் துறைக்கு முக்கிய பங்காற்றுவது தெள்ளத் தெளிவாகிறது.

### கைவினைஞர்களுக்கு கிடைக்கும் கௌரவம்

சமீபத்தில் மதுபனி மற்றும் மிதுலா வகை ஓவியங்களை வரையும் முது பெரும் கைவினைஞர் திருமதி. கோதா வரிதத்தா அவர்களுக்கு பிஹாரின் இந்த பாரம்பரியமிக்க ஓவியத் துறையை அங்கீகரிக்கும் வண்ணம், பத்மஸ்ரீ விருது வழங்கப்பட்டுள்ளது. திருமதி. கோதாவரிதத்தா அவர்கள், இந்த ஓவியக் கலையில் கடந்த 50 ஆண்டுகளாக ஈடுபட்டு வருகிறார். அவர்களுடைய படைப்புகள் பல நாடுகளில் காட்சியாக வைக்கப்பட்டுள்ளன. திருமதி. தத்தா மற்றும் இவரைப் போன்ற பிற ஓவியர்களின் அரும் பணியால், பிஹார் மாநிலத்தில் மதுபனி ரயில்நிலையம் முதல் பாட்னாவின் பல இடங்களில் இந்த ஓவியங்கள் சுவர்களை அலங்கரிக்கின்றன.

இந்த அரிய பொருள்களின் வியாபாரத்திற்கும் தகுந்த கவனம் செலுத்தப்பட்டிருக்கிறது. கைவினைப் பொருள்கள் ஏற்றுமதி மேம்பாட்டு கவுன்சில் குறிப்பிட்ட கைவினைப் பொருள்களுக்கும் "இந்தியகைவினைப் பொருள்கள் மற்றும் பரிசுபொருள்கள் விழாக்களை" நடத்துகிறது. ஒவ்வொரு பொருளுக்கான தனியான கண்காட்சிகளும் அந்தப் பொருள்களை கைவினைஞர்கள் நேரடியாகத் தயாரிப்பதும் இந்தக் கண்காட்சிகளில் இடம் பெறுகின்றன.

சந்தை மேம்பாட்டு உதவி மற்றும் சந்தை அணுகு திட்ட முயற்சிகளின் மூலம் இந்தப் பொருள்களை சிறப்பாக வியாபாரம் செய்ய கண்காட்சிகள், விற்பனை விழாக்கள், உற்பத்தியாளர் வாங்குவோர் கூட்டங்கள் ஆகியவை நடத்தப்படுகின்றன. "இந்திய கைத்தறி சந்தை என்ற பெயரில் வலைதளம்சார் வியாபாரதளம் ஒன்று செயல்பட்டு உற்பத்தியாளர்களும் நுகர்வோரும் நேரடியாக இணைப்பை மேற்கொள்ள வசதிகள் செய்யப்பட்டுள்ளன. கைத்தறி நெசவாளர்களுக்கும், கைவினைஞர்களுக்கும் உதவியாகவும், அவர்களுக்கும் அவர்களுடைய குறு தொழில் முனைவுக்கும் ஆதரவாகவும் அக்டோபர் 2017இல் சுமார் 400 முகாம்கள் மூலம் 200 மாவட்டங்களில் உதவிகள் வழங்கப்பட்டன.

இந்த வசதிகளையெல்லாம் கைவினைஞர்களும், அவர்களுடைய தொழில் முனைவுகளும் பயன்படுத்திக் கொண்டு, நம்முடைய பொருளாதார மேம்பாட்டிற்கு பங்களிப்பதோடு, தங்களுடைய சமூகப் பொருளாதார மேம்பாட்டையும் அவர்கள் வளர்த்துக் கொள்ளவேண்டும். அவர்களுடைய பொருள்களுக்கு மேலும் மதிப்பும் நம்பகத்தன்மையையும் ஏற்படுத்த தங்களுடைய பொருள்களுக்கு அவர்கள், புவிசார் குறியீட்டையும் பெறவேண்டும். புவிசார் குறியீடு என்பது, ஒருபொருள் எந்தப் பகுதியிலிருந்து உற்பத்தியாகிறது என்பதை அடையாளம் காட்டுவதாகும். புவிசார் குறியீடு பெற்றுள்ள சில கைவினைப் பொருள்களாவன காங்ரா ஓவியங்கள், வாரனாசி ஜவுளி மற்றும் சேலைகள், பஸ்தர் மரவேலைப்பாடுகள், வில்லியனூர் மண் பொம்மைகள் ஆகியனவாகும்.

கொள்கையளவில் பார்க்கும் போது கைவினைப் பொருள்கள் துறைக்கு அளிக்கப்படும் திட்டங்கள் இந்தியாவின் பாரம்பரியமிக்க பண்பாட்டைப் போற்றவும் அதனை அடுத்த தலைமுறைக்கு வாழ்வாதாரமாக அளிக்கவும் உதவும். அடிமட்டத்தில் வேலைவாய்ப்பின்மை, ஏழ்மை மற்றும் கைவினைஞர்கள் கடனில் மூழ்கியிருப்பது ஆகிய பிரச்சினைகள் களையப்படும். இதனால், இந்தியப் பொருளாதாரம் வலுப்பெற்று, இந்திய சமுதாயம் மேம்படும். ●

- **ஹேனாநக்வி**, ஆராய்ச்சி தகவல் தொடர்பு மேலாளர், சக்ஷம், சமூக நலத்துறை, பிகார் அரசு.

# கைவினைப் பொருட்கள், ஜவுளி ஏற்றுமதிக்கான வாய்ப்புகள்: தற்போதைய நிலைமையும் எதிர்கால சாத்தியமும்

- ரஞ்சித் மேத்தா

இந்தியா என்பது கலாச்சாரம், வரலாறு மற்றும் பாரம்பரியத்தில் செழுமை மிகுந்த நாடாகும். கைவினைப் பொருள்களை அதிக அளவு உற்பத்தி செய்து விநியோகிக்கும் உலக நாடுகளில் ஒன்றாக இந்தியா பல பத்தாண்டுகளாக விளங்கி வருகிறது. கடந்த சில ஆண்டுகளில், கைவினைப் பொருள்களின் முக்கியத்துவமானது அவற்றின் கலாச்சார, பொருளாதார மதிப்பீடுகளால் கவனம் பெற்று வருகிறது. கைவினைப் பொருள்கள் உற்பத்தி உள்ளிட்ட சிறுதொழில்கள் வளர்ந்த நாடுகள், வளரும் நாடுகள் இரண்டிலும் சமஅளவில் பொருளாதார மேம்பாட்டுக்கு மிக முக்கியமான பங்கினை ஆற்றி வருகின்றன. முழுக்க முழுக்க கைகளால் மட்டுமோ அல்லது கருவிகள் உதவியுடனோ தயாரிக்கப்படும் உற்பத்திப் பொருள்களே கைவினைப் பொருள்கள் என வரையறுக்கப்படுகின்றன. இந்தியாவின் கைவினைப் பொருள் தொழிலானது பழமை வாய்ந்த இந்திய நாகரிகத்தின் அம்சங்களைப் பிரதி பலிக்கிறது. "வேற்றுமையில் ஒற்றுமை" என்ற தொடர் நமது நாட்டுக்கு முற்றிலும் பொருத்தமானது என்பதில் ஆச்சரியம் ஏதும் இல்லை.

ஒவ்வாரு மாநிலமும் தனக்கே உரித்தான கைவினைப் பொருள்களைப் பெற்றுள்ளன. இவை இந்திய கைவினைக் கலைத்தொழிலின் பன்முகத் தன்மையைப் பிரதிபலிக்கின்றன. இந்த ஒட்டுமொத்தத் தொழிலும் அதிகாரப் பரவலுக்குப் பிறகு இந்த மிகப்பெரிய தீபகற்பத்தின் அனைத்துப் பகுதிகளிலும் பரவி வருகின்றன. ஊரகம் மற்றும் நகரப் பகுதிகள் என இரண்டிலுமே இந்தத் தொழிலின் வளர்ச்சி பெருகியுள்ளது. இந்தியக் கைவினைக்கலைத் தொழில் என்பது முதன்மையாக குடிசைத்தொழில் என்ற பிரிவின் கீழ்தான் வருகிறது. இந்த




உண்மையைத் தாண்டியும், இந்தத் தொழில் அதிக வேலைவாய்ப்பைத் தருகின்ற தொழில் பிரிவாகவே விளங்குகிறது. ஆறு மில்லியனுக்கும் அதிகமான பகுதி நேர மற்றும் முழு நேர கைவினைக் கலைஞர்கள் (தரை விரிப்பு உற்பத்தி தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களையும் சேர்த்து) இந்தத் தொழில் பிரிவில் வேலை செய்கின்றார்கள். இதில் பெண்களும் சமுதாயத்தின் பின்தங்கிய பிரிவைச் சேர்ந்த பெரும்பான்மையோரும் உள்ளடங்குவர். வேலைவாய்ப்பை உருவாக்கும் தொழில்பிரிவு என்பதோடு, இந்தக் கைவினைக் கலைத்தொழிலானது பொருளாதார ரீதியாக நிலைத்து நிற்கும் தொழிலாகவும் உள்ளது. இதற்கு முக்கிய காரணம் இந்தத் தொழிலுக்கு குறைந்த அளவிலான மூலதன முதலீடுகள் போதும் என்பதே ஆகும். மேலும் பலவேறு கைவினைக் கலைப்பொருள்களுக்கான ஏற்றுமதி வாய்ப்பும் குறிப்பிடத்தக்க அளவில் அதிகமாகவே உள்ளது. எனவே நமது நாட்டுக்கு அந்நிய செலவாணி ஈட்டித் தரும் மிக முக்கியமான தொழிலாக இது விளங்குகிறது.

உலகில் உற்பத்தி செய்யப்படும் மொத்த தொழிற்சாலை தயாரிப்புப் பொருள்களில் சுமார் 95 சதவிகிதப் பொருள்கள் 100 பணியாளர்களுக்கும் குறைவாக உள்ள சிறிய தொழிற்சாலைகளில் தான் தயாரிக்கப்படுகின்றன. உதாரணமாகச் சொல்ல வேண்டுமென்றால், ஜப்பான் ஒரு வளர்ந்த நாடாக உள்ளது. ஆனால் இந்த நாட்டில் 84 சதவிகிதம் அளவிற்கு சிறிய மற்றும் நடுத்தரத் தொழிற்சாலைகள்தான் உள்ளன. நாம் இந்தியக் கைவினைக் கலைத்தொழிலைப் பார்த்தோமேயானால், அது தொழிலாளர் அதிகம் உள்ள தொழில் பிரிவாக, குடிசைத் தொழிலாக, அதிகாரக் குவிப்பு இல்லாத தொழிலாக இருப்பது தெரியும். பெரும்பாலான உற்பத்தித் தொழில்கள் ஊரகப்பகுதிகளிலும் சிறுநகரங்களிலும் தான் இயங்குகின்றன. அனைத்து இந்திய நகரங்கள் மற்றும் வெளிநாடுகளில் இந்தப் பொருள்களுக்கு மிகப் பெரிய சந்தை வாய்ப்பு உள்ளது.

இந்தியக் கைவினைக் கலைத் தொழில்களுக்கு என்று உள்ள முக்கியமான மையங்களாக சிலவற்றைக் குறிப்பிடலாம்: அவை மொராதாபாத் (பீட்டல் நகரி என்றும் இதனை அழைப்பார்கள் பித்தளைக்கான நகரம். பித்தளைக் கைவினைக் கலைப்பொருள்களுக்காக புகழ்பெற்ற நகரம்),

சஹரன்பூர் (மரத்தாலான கைவினைப் பொருள்களுக்குப் புகழ் பெற்றது), மற்றும் ஃபெரோஜாபாத் (விசேஷமான கண்ணாடி கைவினைப் பொருள்களுக்குப் புகழ் பெற்றது). இந்த நகரங்கள் யாவும் உத்திரப்பிரதேசத்தில் உள்ளவை ஆகும். மற்ற முக்கியமான கைவினைக் கலைப் பொருள்கள் உற்பத்தி மையங்கள்: ஜெய்ப்பூர் (கம்பளி மெத்தை உறைக்கு பெயர் பெற்றது), பாக்ரு மற்றும் சங்கனெர் (அச்சிட்ட ஜவுளி), ஜோத்பூர் (விசேஷமான மரம் மற்றும் இரும்புச் சாமான்களுக்குப் பெயர் பெற்றது). இவை எல்லாம் மேற்கு ராஜஸ்தானில் உள்ளவை ஆகும். மேலும் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டியது கட்ச் (குஜராத்தின் கடற்கரை நகரம்) ஆகும். இங்கு கவர்ச்சிகரமான கைவினைப் பொருள்கள் கிடைக்கும். அதே போன்று நர்சாப்பூர் (ஆந்திரப் பிரதேசம்) சரிகை கைவினைப் பொருள்களுக்குப் புகழ் பெற்றது ஆகும். இவை இந்தியாவில் மிகவும் புகழ்பெற்ற கைவினைப் பொருள்கள் சிலவற்றுக்கான பட்டியல் மட்டுமே ஆகும். உண்மையான பட்டியல் என்பது மிக நீண்டதாகவே இருக்கிறது.

தேசிய மற்றும் சர்வதேச சந்தை இரண்டிலும் இந்திய கைவினைப் பொருள்களுக்கான தேவை என்பது அதிக அளவிலேயே உள்ளது. தரமான பொருள்களுடன் தேவையையும் விநியோகத்தையும் சரிசமமாக பூர்த்தி செய்வதற்கு சிறந்த தொழில்நுட்ப ஆதரவும் கலாச்சாரப் புத்தாக்கமும் தேவைப்படுகிறது. இந்தியாவில் கைவினைப் பொருள்கள் தொழில் பிரிவின் முக்கியத்துவத்தைக் குறைத்து மதிப்பிட்டு விடக்கூடாது. ஏனெனில் இது அதிக அளவு வேலை வாய்ப்பை உருவாக்கித் தரும் தொழில் பிரிவாகும். மேலும் நாட்டின் ஏற்றுமதித் துறையிலும் முக்கியமான பங்கை வகிக்கிறது. மாநில மற்றும் பிராந்திய தொழிலகத் தொகுப்புகள் குறிப்பிடத்தக்க அளவு கைவினைப் பொருள்கள் ஏற்றுமதியில் முக்கிய பங்கு வகிக்கின்றன. இந்தத் தொழில்பிரிவு அங்கும் இங்குமாக சிதறுண்டு இருந்தாலும்கூட, 70 இலட்சத்திற்கும் அதிகமான பிராந்திய கைவினைக் கலைஞர்கள் மற்றும் 67,000க்கும் அதிகமான ஏற்றுமதியாளர்கள்/ஏற்றுமதி நிறுவனங்கள் ஆகியன இணைந்து உள்நாட்டு மற்றும் சர்வதேச சந்தைகள் இரண்டிலும் பிராந்திய கலை மற்றும் கைவினைத் திறனை மேம்படுத்தி வருகின்றன. ஏப்ரல் முதல் நவம்பர் 2018 வரையிலான காலகட்டத்தில் இந்தியாவில் இருந்து ஏற்றுமதி செய்யப் பட்ட கைவினைப் பொருள்களின் மதிப்பு 2.42 பில்லியன் அமெரிக்க டாலர் ஆகும். இதே காலகட்டத்தில் பல்வேறு கைவினைப் பொருள்களின் ஏற்றுமதியானது சாதகமான வளர்ச்சியைக் கண்டுள்ளது. உதாரணமாக சால்வைகள் மற்றும் அழகும் பயன்பாடும் உள்ள கலைப்பொருள்கள் (77.50 சதவிகிதம்), மரப்பொருள்கள் (23.57 சதவிகிதம்) மற்றும் இதர கைவினைப் பொருள்கள் (19.74 சதவிகிதம்) ஏற்றுமதி செய்யப் பட்டுள்ளன. இந்திய கைவினைப் பொருள்கள் உலகம் முழுவதும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இந்தியக் கைவினைப் பொருள்கள் ஏற்றுமதி செய்யப்படும் முதல் பத்து நாடுகளின் பட்டியல்: அமெரிக்கா, ஜெர்மனி, பிரான்ஸ், லத்தீன் அமெரிக்க நாடுகள் (LAC), இத்தாலி, நெதர்லாந்து, கனடா மற்றும் ஆஸ்திரேலியா ஆகியவையாகும்.

எதிர்காலத்தில் கைவினைப் பொருள் கள் தொழில்பிரிவின் தேவையானது அதிகரிக்கச் செய்யும். பேஷன் தொழிலின் வளர்ச்சி, சில்லறை விற்பனை மற்றும் ரியல் எஸ்டேட் தொழில் பிரிவுகளுக்கு அதிக அளவில் கைவினைப் பொருள்கள் தேவைப்படுவது ஆகிய காரணங்களால் இந்தப் பிரிவின் தேவை அதிகரித்து வருகிறது. கைவினைப் பொருள்களை சந்தைப்படுத்தவும் விற்கவும் தேவையான முக்கிய விநியோக வழிமுறைகளாக இவர்த்தகம் மற்றும் இணையம் ஆகியன உருவாகியுள்ளன. அஸ்ஸோசம் (ASSOCHAM) மேற் கொண்ட ஆய்வின்படி, 202021ஆம் ஆண்டுக்கான நிதி ஆண்டில் இந்தியாவின் கைவினைப் பொருள்களின் ஏற்றுமதி ரூ.24,000 கோடியாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. பிராண்ட் நன்மதிப்பை உருவாக்குதல், சாலைக் காட்சிகள் நடத்துதல். இலக்கு நாடுகளில் கைவினைப் பொருள்கள் கண்காட்சி நடத்துதல் போன்றவற்றை அரசும் இதர கவுன்சில்களும் மேற்கொள்ள வேண்டும். அதே போன்று விற்பனை நடக்கும் இடத்தில் கவர்ச்சிகரமான பதாகைகள் மற்றும் விளக்கப்பலகைகள் மூலம் பிரச்சாரம் மேற்கொள்ளப்பட வேண்டும். அரசானது தனியார் துறையுடன் சேர்ந்து ஒருங்கிணைந்த தொழில் மேம்பாட்டை ஊக்கப்படுத்தும் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். தொழில்திறன் பயிற்சிக்கான உள்ளூர் மையங்களை உருவாக்குதல், உற்பத்திப் பொருளை சூழலுக்கு ஏற்றவாறு தயாரித்தல், தொழில்பயிற்சி மற்றும் தொழில்முறை பயிற்சி ஆகியவற்றின் மூலம் இந்தத் தொழில்பிரிவு மேம்படுத்தப்பட வேண்டும்.

## இந்திய ஜவுளித்தொழில்

இந்திய ஜவுளித்தொழில் என்பது உலகில் மிகப் பெரிய ஜவுளித் தொழில்களில் ஒன்றாக விளங்குகிறது. இந்தியாவில் கச்சாப் பொருள்களுக்கான தேவை மிகப் பெரிய அளவில் உள்ளது. மேலும் மதிப்புக்கூட்டல் பணியின் சங்கிலித் தொடரோடு உற்பத்தித் தொழில் களும் அதிகமாக உள்ளன. உலக அளவில் அதிக அளவு பருத்தி உற்பத்தி செய்யும் நாடாக இந்தியா உள்ளது. அதே போன்று உலக அளவில் பருத்தி ஏற்றுமதி செய்யும் நாடுகளின் பட்டியலில் இந்தியா இரண்டாவது இடத்தில் உள்ளது. உள்நாட்டு ஜவுளி மற்றும் ஆடைத்தொழிலானது இந்தியாவின் உள்நாட்டு மொத்த உற்பத்தியில் (GDP) இரண்டு சதவிகிதம் பங்கு வகிக்கிறது. அதே போன்று இது தொழிலக உற்பத்தியில் 14 சதவிகிதப் பங்கும், அந்நியச் செலவாணி ஈட்டுவதில் 27 சதவிகிதப் பங்கும், நாட்டின் மொத்த ஏற்றுமதி வருவாயில் 13 சதவிகிதப் பங்கும் வகிக்கிறது. இந்தியாவில் ஜவுளி மற்றும் ஆடைத்தொழில் 45 மில்லியன் நபர்களுக்கு இந்தியாவில் வேலைவாய்ப்பை அளிக்கிறது. வேலைவாய்ப்பைப் பொறுத்த அளவில் விவசாயத்திற்கு அடுத்து இரண்டாவது நிலையில் இந்த ஜவுளி மற்றும் ஆடைத்தொழில் விளங்குகிறது. இந்தியாவில் ஜவுளித்தொழிலில் அதிக அளவு பெண் பணியாளர்களே உள்ளனர். இதில் 70 சதவிகித பணியாளர்கள் பெண்கள் ஆவர். இந்திய ஜவுளி மற்றும் ஆடைத் தொழிலில் நெசவு, படிப்படியான செயலாக்க முறைகள் மற்றும் ஆடை தயாரிப்பு ஆகிய உப பிரிவுகள் அங்கும் இங்குமாக ஒருங்கிணைக்கப்படாமல் செயல்படுகின்றன. சர்வதேச சந்தைகளில் வெற்றியை ஈட்டுவதற்குப் போதுமான தரநிலை இல்லாமல் இவை இருக்கின்றன. பல உற்பத்தித் தொழிலகங்கள் சிறிய

அளவு கொள்திறன் மற்றும் குறைந்த உற்பத்தித் திறன் கொண்டவை. எனவே அந்த உற்பத்தித் தொழிலகங்கள் சர்வதேச சந்தைகளோடு போட்டி இடுவது சிரமமாக உள்ளது.

உலக உற்பத்தியில் 50 சதவிகிதம் என்ற அளவில் இந்தியா கச்சா சணல் மற்றும் சணல் பொருள்கள் உற்பத்தியில் உலகில் முதல் இடத்தில உள்ளது. அதே போன்று அதிக அளவு பட்டு உற்பத்தியில் இந்தியா உலகில் இரண்டாம் இடத்தில் உள்ளது. மில்கள் பிரிவை எடுத்துக் கொண்டால் 3400 ஜவுளி மில்கள் உள்ளன. இவற்றின் நிறுவுதிறன் 50 மில்லியன் நூலைத் திரிக்கும் உருளைகள் (ஸ்பின்டில்) என்ற அளவுக்கு அதிகமானதாகவும் மற்றும் 8,42,000 சுழல்கள் (ரோட்டார்) என்பதாகவும் உள்ளது. அதிக அளவு மில்கள் என்ற நிலையில் இந்தியா உலகில் இரண்டாவது இடத்தில் உள்ளது.

இந்தியா உலகில் அதிக அளவு பருத்தி உற்பத்தி செய்யும் நாடுகளில் இரண்டாம் இடத்தில் உள்ளது. மொத்த வர்த்தகம் 6.3 பில்லியன் அமெரிக்க டாலர் என்ற நிலையில் இந்தியா சீனாவை விட நூலிழை வித்தியாசத்தில் பின்தங்கி இருக்கிறது. 2016-17ஆம் ஆண்டில் 345 இலட்சம் உருளைகள் (பேல்) என்ற உற்பத்தியோடு இந்தியா உலகில் அதிக அளவு பருத்தி உற்பத்தியாளராக முதல் இடத்தில் நிற்கிறது. ஏற்றுமதியில் சீனாவுக்கு அடுத்தபடியாக இந்தியா இரண்டாம் இடத்தில் உள்ளது. தற்போது பருத்தித் தொழில் 5.8 மில்லியன் விவசாயிகளுக்கு நீடித்த வாழ்வாதாரத்தை வழங்கி வருகிறது. படிப்படியான செயலாக்க முறைகள் மற்றும் வர்த்தகம் போன்ற இதர நடவடிக்கைகளில் 40 முதல் 50 மில்லியன் பேர் ஈடுபட்டுள்ளனர்.

உலகில் அதிக அளவு பட்டு உற்பத்தி செய்யும் நாடுகளில் இந்தியா இரண்டாவது பெரிய நாடாக உள்ளது. உலகத்தில் உற்பத்தி செய்யப்படும் மொத்த பட்டுத் துணியில் சுமார் 18 சதவிகிதம் இந்தியாவில் உற்பத்தி செய்யப்படுகிறது. நம் நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பட்டில் முல்பெர்ரி, ஈரி, டசார், மற்றும் முகா ஆகியன முதன்மை வகைகள் ஆகும். இந்தப் பட்டுத்தொழில் அதிக அளவு தொழிலாளர்கள் தேவைப்படும் தொழிலாக உள்ளது. இந்தியாவில் ஜவுளித் தொழிலானது ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாக உருவாகி வளர்ந்து வந்துள்ளது. எனவே இந்தத் தொழிலானது கலாச்சாரத்தோடு மிகவும் நெருக்கமானதாக உள்ளது. இதுவே இந்திய சமுதாயங்களை நூற்றுக் கணக்கான ஆண்டுகளாக வடிவமைத்து வருகிறது. ஜவுளித்தொழிலின் வரலாறை நாம் திரும்பிப் பார்த்தால், அதன் தோற்றம் இந்தியத் துணைக்கண்டத்தின் காபூல், பால்கன் மற்றும் ஐரோப்பிய நாடுகளோடு வர்த்தகம் மேற்கொண்டதில் இருந்து தொடங்குகிறது.

மார்க்ஸ் - ஸ்பென்சர், ஜேசி பென்னி, கேப் போன்ற சர்வதேச பிராண்டுகள் தங்களுக்குத் தேவைப்படும் பெரும் பாலான துணியை இந்தியாவில் இருந்தே இறக்குமதி செய்கின்றன. இந்தியாவின் ஜவுளி ஏற்றுமதியில் பருத்தி நூலின் பங்கு மட்டும் 70 சதவிகிதம் ஆகும். ஏற்றுமதி செய்யப்படும் அனைத்து வகையான ஆடைகளிலும் பின்னலாடையின் பங்கு சுமார் 32 சதவிகிதம் ஆகும். ஒரு அறிக்கையின்படி, இந்திய ஜவுளித் தொழிலானது சர்வதேச ஜவுளிச் சந்தையில் 61 சதவிகிதத்தை வகிக்கிறது. அதே போன்று சர்வதேச சந்தையில் 20 சதவிகிதத்துக்கும் அதிகமான பங்கை வகிக்கிறது.

ஜவுளிக்கான உள்நாட்டுத் தேவை என்பது மிக வலுவானதாக உள்ளது. இறுதி நிலைப் பயனாளர்கள் மூலம் இந்த அடித்தளம் அமைந்துள்ளது. 2019ஆம் நிதி ஆண்டில் மீதி உள்ள மாதங்களின் தனிநபர் நுகர்வுச் செலவு வலுவாக அதிகரித்து வருவது ஆதரவான அம்சமாக உள்ளது. அதே போன்று ஜவுளி ஏற்றுமதியும் அதிகரிப்பதற்கான வாய்ப்பு உள்ளது. அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு குறைவாக இருக்கிறது என்ற விஷயம் ஆயத்த ஆடை ஏற்றுமதி செய்யும் நாடுகளின் பணத்தோடு ஒப்பிட, ஏப்ரல் முதல் ஆகஸ்ட் 2018 வரையிலான கால கட்டத்தில் இந்திய ரூபாயானது அமெரிக்க டாலரின் மதிப்போடு ஒப்பிட, அதிக அளவிற்கு மதிப்புக் குறைந்துள்ளது. இந்திய ரேட்டிங்ஸ் அண்ட் ரிசர்ச் அமைப்பு இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளது. இந்தத் தொழில் பிரிவுக்கான ஒட்டுமொத்த கடன் நிலைமை படிப்படியாக மேம்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. விலை அதிகரித்த கச்சாப் பொருளை இறுதி நிலைப் பயனாளர்களிடம் வழங்குதல், ஆரோக்கியமான தேவையை உருவாக்குதல், மதிப்பு குறைந்து வரும் இந்திய ரூபாய் மற்றும் அமைப்பாக்கப் பிரச்சினைகளின் தாக்கம் குறைந்து வருவது ஆகியவற்றால் இந்தத்தொழில் பிரிவில் படிப்படியாக இலாபம் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எனினும், அதிகரித்து வரும் தேவை மற்றும் இலாபத்தின் சாதகமான தாக்கத்துக்கு எதிர் சக்தியாக நடைமுறை மூலதனத் தேவைகள் இருக்கும்.

**முடிவுரை மற்றும் முன்னுள்ள எதிர்காலப் பாதை**

அளப்பரிய கச்சாப் பொருள்களும், ஜவுளியில் மதிப்புக் கூட்டல் சங்கிலித் தொடரின் அனைத்துப் பிரிவுகளிலும் உற்பத்தித் தொழிலகங்கள் இருப்பதும் இந்தியாவுக்கான தனிப்பட்ட அம்சம் ஆகும். தற்போது வழக்கொழிந்த





தொழில்நுட்பத்தை புறம் ஒதுக்க வேண்டிய நேரமும் இந்தத் தொழிலுக்கு வந்துவிட்டது. அவ்வாறு ஒதுக்கி விட்டு இயந்திரங்களை நவீனப்படுத்துவதே சர்வதேச அளவில் போட்டியிட சரியான வழிமுறையாக இருக்கும். இந்திய ஜவுளி களுக்கும் ஆயத்த ஆடைகளுக்கும் உள்ள சர்வதேச போட்டியை சமாளிக்க இந்தத்தொழிலானது புத்தாக்கத்திலும் மதிப்பு கூட்டலிலும் கவனம் செலுத்த வேண்டும். புதிய தொழில்நுட்பங்களைக் கடைபிடித்து தண்ணீர் இல்லாமல் சாயம் தோய்ப்பது போன்ற புத்தாக்க முறைகள் தேவைப்படுகின்றன. சர்வதேச அளவில் நமது காலடித்தடத்தைப் பதிக்க வேண்டுமென்றால், புதிய மற்றும் தனித்த விசேஷமான விற்பனைப் பொருள் களை நாம் உருவாக்கியாக வேண்டும். ஜவுளித்தொழிலில் தொடர்ச்சியான வளர்ச்சி மற்றும் சர்வதேச போட்டித் தன்மை ஆகியன பொருளாதாரத்தைப் புதிய உச்சங்களுக்கு எடுத்துச்செல்லும் உந்துசக்தியாக இருக்கும் என்றாலும்கூட, விநியோகச் சங்கிலித் தொடர்களையும் உள்முக அமைப்புகளையும் மேம் படுத்தியாக வேண்டிய தேவையில் இந்தத்தொழில் பிரிவானது உள்ளது. ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி, சரியான அளவில் செலவிடுதல் (மேலிருந்து கீழான வரிசையில் பொருள் உற்பத்தியை ஒருங்கிணைப்பு செய்வதன் மூலம் சேமித்தல் முதலான செயல்பாடுகள்), போட்டியை சந்தித்து அதிக அளவு சாதிப்பதற்கு முன்னோக்கி நகர்தல், சர்வதேச சந்தைகளில் விற்கப்படும் உற்பத்திப் பொருள்கள் மற்றும் ஏற்றுமதி செய்யப்படும் உயர்தர பொருள்கள் ஆகியவற்றில் அதிக அளவு பங்கை செலுத்துதல் போன்றவற்றில் இந்தப் பிரிவு கவனம் செலுத்தவேண்டும். சூழ் நிலைக்கு ஏற்ப இந்தத் தொழிலானது தன்னை தகவமைத்துக் கொள்ள வேண்டும். வித விதமான விற்பனைப் பொருள்களைத் தயாரித்தல் மற்றும் புதிய சந்தை வாய்ப்புகளைக் கண்டறிந்து பயன்படுத்துதல் ஆகியவற்றின் மூலம் இந்தியாவின் ஏற்றுமதி பங்கு அதிகரிப் பதை உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும். வங்கதேசம் மற்றும் வியட்நாம் போன்ற நாடுகளில் இருந்து தீவிரமான போட்டியை நாம் சந்தித்து வருகின்ற வேளையில் சர்வதேச சந்தையில் நமது ஏற்றுமதியை நிலையாக, நீட்டித்து வைத்திருக்க தரம் என்பதை தாரக மந்திரமாக நாம் கடை பிடிக்க வேண்டும். மக்களின் வருமான நிலையானது உயர்ந்து வருகிறது. வலுவான உள்நாட்டுத் தேவை மற்றும் சர்வதேச சந்தைகளில் தேவை அதிகரிப்பு ஆகியவற்றின் காரணமாக ஜவுளித் துறையானது அதிக வளர்ச்சிக்கான வேகத்தை எதிர்காலத்தில் எட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

உலகில் உள்ள வர்த்தகத் தலை வர்கள் இந்தியாவை உற்று நோக்கிக் கொண்டு இருக்கிறார்கள். அதுவும் ஒரு நல்ல காரணத்துக்காகப் பார்த்துக் கொண்டு இருக்கிறார்கள். பல்வேறு முக்கிய சர்வதேச ஆயத்த ஆடை தயாரிப்பவர்களும், உற்பத்தியாளர்களும் இந்தியாவில் ஏற்கனவே முதலீடுகளைச் செய்துள்ளனர். ஜவுளித் தொழிலுக்கான இயந்திரங்கள் செய்யும் ரீயெட்டர் அன்ட் ட்ரூட்ஸ்லெர், மேல் இருந்து கீழான ஒருங்கிணைப்பில் செயல்படும் பேஷன் பிராண்டுகளான ஜாரா அன்ட் மேங்கோ (ஸ்பெயின்), புரோமோத் (பிரான்ஸ்), பெனெட்டன் (இத்தாலி), எஸ்பிரிட், லீவிஸ், ஃபார்எவர் 21 (அமெரிக்கா) ஆகியவை இதில் அடங்கும். சிக்கன விலையிலான கச்சாப்பொருள்கள் மற்றும் தொழிலாளர், ஜவுளித் தொழில்நுட்பத்தில் ஏற்பட்டுள்ள மிகப்பெரிய மாற்றங்கள் ஆகியன ஒன்று சேர்ந்து இந்தியாவை பிறநாடுகள் விரும்பும் நாடாக மாற்றி யிருப்பதோடு ஜவுளி மற்றும் ஆயத்த ஆடை வர்த்தகத்தில் அந்நிய முதலீட்டுக் கான ஒரு வல்லமை மிகுந்த மையமாகவும் மாற்றியுள்ளன.

சொகுசான பேஷன் பிரிவின் கண் ணோட்டத்தில் பார்த்தால், நமக்கு மிகவும் ஆர்வம் தரக்கூடிய விஷயமாக இதில் இருப்பது என்னவென்றால், இந்திய ஜவுளித்துறையின் மீதி பாதிக்கதையாக கைத்தறிகள் குறித்த கதை இருப்பதுதான். எதிர்காலத்தில் சர்வதேச சொகுசுத் தொழிலை வடிவமைப்பதில் கைத்தறிகள் என்ற இந்த துணைத்தொழில் பிரிவானது மிகப் பெரிய பங்கினை ஆற்றும். இந்திய நெசவாளர்களின் உள்ளார்ந்த திறமைகளை மறுஉருவாக்கம் செய்வதில் இந்தத் தொழிலானது கவனம் செலுத்தி யாக வேண்டும். பிரிட்டிஷ் ஆட்சியின் போது கையால் நெய்யப்படும் துணியான காதி சுயதன்னிறைவான குறியீடாக காந்திஜிக்கு எப்படி மாறியது என்பதை எப்போதும் மறந்து விடக்கூடாது. அர்த்தமுள்ள சொல்லாடலுக்கு மிகவும் பொருத்தமான சூழ்நிலையை இது தருகிறது. மிகவும் மேலோட்டமாக்வும், மிக விரைவாகவும் எல்லாமும் நடக்கும் இன்றைய சூழலில், கையால் நெய்யப்பட்ட துணியானது ஆன்மாவுக்கு எப்படி உத்வேகம் கொடுக்கிறது என்பதை இது எடுத்துச் சொல்கிறது. கச்சாப் பொருள்கள் முதல் இறுதி விற்பனை நிலைப் பொருள்கள் மற்றும் கைவினைப் பொருள்கள் என்ற பலதரப்பட்ட ஜவுளித் தயாரிப்புகளுக்கான முதன்மை ஆதார மையமாக இந்தியாவை திறம்பட நிலைநிறுத்துவதற்கு இந்தத்தொழிலும், அதன் பங்குதாரர்களும் தாங்கள் எடுத்து வரும் நிலைத்த முயற்சிகளைத் தொடர்ந்து மேற்கொண்டு வரவேண்டும்.

- **டாக்டர் ரஞ்சித் மேத்தா,** பிஎச்டி வர்த்தகம் மற்றும் தொழில்சபையின் முதன்மை இயக்குநர்.

# பெண்கள், ஹுனார் மற்றும் நம்பிக்கைத் தரும் தறிகள்

- சையதா ஹமீத்

இந்தியாவின் திட்டக்குழுவில் நான் பத்து ஆண்டுகள் பணி செய்துள்ளேன். அப்போது கைத்தறிகள் மற்றும் கைவினைக் கலைகள் பிரிவுக்கு பொறுப் பாளராக இருந்தேன். கைத்தறிகள், கைவினைக் கலைகள் பிரிவில் நான் பெற்ற அனுபவத்தை இரண்டு சம்பவங் களின் வாயிலாக, அதாவது இரண்டு கதைகளின் மூலம் சுருக்கமாகச் சொல்லி விடலாம். என்னுடைய வாழ்நாள் முழு வதும் இந்தப் பிரிவோடு எனக்கிருந்த உறவை இந்த இரண்டு சம்பவங்களே விளக்கிக் காட்டிவிடும்.

இந்தப் பிரிவில் மிகப் பெரிய வெற்றிக் கதையை உருவாக்கிய ஒரு பெண்ணின் கதையோடு நான் இதைத் தொடங்குகிறேன். மிகப் பெரிய அளவில் கனவு கண்ட, ஆயிரக்கணக்கான பெண் களுக்கும், ஆண்களுக்கும் வாழ்வாதாரங் களை உருவாக்கித் தந்த பெண்ணின் கதை இதுவாகும். அந்தப் பெண்ணின் பெயர் அகல்யாபாய். மஹாராஷ்டிராவின் பீட் என்ற நகரத்தில் இருந்து வந்த ஒரு எளிய குடும்பத்துப் பெண்தான் இந்த அகல்யாபாய். ஹோல்கார் அரசை ஆட்சி செய்து வந்த மகாராஜா மல்ஹர்ராவ், அடிக்கடி சுற்றுப்பயணம் மேற்கொள்வார். அவ்வாறு அவர் மேற்கொண்ட ஒரு சுற்றுப்பயணத்தின் போது தீஜ் திருவிழாவில் மகாராஜா அவளை அடையாளம் கண்டார். அவளு டைய ஏதோ ஒரு அம்சம் அவரை ஈர்த்தது. தனது இரண்டாவது மகனான ஹோண்டே ராவுக்கு மணமகளாக மகாராஜா அவளைத் தேர்ந்தெடுத்தார். ஒரு குழந்தை மணமகளாக அகல்யாபாய் 1753ஆம் ஆண்டில் மகேஷ்வருக்கு வந்து சேர்ந்தாள். சில ஆண்டுகள் கழித்து திடீரென ஹோண்டே ராவ் ஹோல்கர் இறந்து போனார். அவரது இளம் மனைவியான அகல்யா சதி ஏறுவதற்கு தயாரானார். கணவரின் சிதையில் இளம் மனைவி இறங்க முற்பட்டபோது மகாராஜா அவளைத் தடுத்து "மகளே நீ வாழ வேண்டும். அரியணைக்கு வாரிசாகவும் மகேஷ்வர் நகருக்கும் நீ அவசியம் தேவை" எனக் கூறினார். இதன் மூலமாக தனது மகனை முன்னிறுத்தி அகல்யா ஆட்சி பீடம் ஏறினார். மகேஷ்வர் நகரை 1765 முதல் 1795 வரை அவர் ஆட்சி புரிந்தார்.

படிப்படியாக அவர் தனது குடிமக்களின் அன்றாட வாழ்க்கை முறை குறித்து தெரிந்து கொள்ள ஆரம்பித்தார். தினமும் தனது காலை வழிபாட்டுக்குப் பிறகு அவர் தனது கோட்டையின் பாதுகாப்பு அரண்களில் அமர்ந்து கொண்டு குடிமக்களின் குறைகளைக் கேட்டறிந்தார். இவ்வாறு அவர்களின் குறைகளைக் கேட்க, கேட்க அவர் மனதில் ஒரு உறுதி வலுப்பெற்றது. தனது ஆளுகைக்கு உட்பட்ட பகுதிகளில் வசிக்கும் எந்த ஒருவருக்கும் அவர்களின் கௌரவமான வாழ்வாதாரமானது மறுக்கப்படக் கூடாது என்பதில் அவர் உறுதியாக இருந்தார். குடிமக்களுக்கு பருவகாலங்களுக்கு ஏற்ப வேலைவாய்ப்பு என்று இல்லாமல் வருடம் முழுவதும் வேலை வாய்ப்பு கிடைப்பதை உறதி செய்யும் வழிமுறைகள் குறித்து அவர் சிந்தித்தார். நூறு "காஸ்" தூரத்தில் புர்ஹான்பூர் என்ற நகரம் இருப்பது அவருக்குத் தெரியவந்தது. இந்த நகரம் பாரம்பரியமான கைத்தறி நெசவுக்குப் பெயர் பெற்ற இடம் ஆகும். இந்த நகரத்தில் இருந்தும் பக்கத்தில் இருந்த மண்டுவில் இருந்தும் திறன் வாய்ந்த நெசவாளர்களை, தங்களது தறியுடன் தனது அரசு எல்லைக்குள் வருமாறு அகல்யா அழைத்தார். அவ்வாறு வந்த வர்களை மகேஷ்வரில் உள்ள ஆண் களுக்கும், பெண்களுக்கும் நெசவுக் கலைகளைக் கற்றுத் தருமாறு ஆணை இட்டார். மகேஷ்வரில் இருந்தவர்கள் விரைவாக நெசவுத் தொழில் திறன்களைக் கற்றுக் கொண்டனர். ஆனால் அவர்



கள் தங்களுக்கு என்று தனித்த விசேஷமான அடையாளத்தை ஏற்படுத்த வேண்டும் என்று விரும்பினர். அந்த விருப்பம்தான் இப்போது அவர்களின் தனித்த விற்பனை அடையாளமாக (USP) சொல்லப்படுகிறது. தங்களது தனிப்பட்ட முத்திரையை வெளிப் படுத்தும் நெசவு வடிவமைப்புகளை நெய்ய அவர்கள் விரும்பினார்கள். நர்மதை நதி பாய்ந்தோடுவதை தனது கோட்டையில் இருந்தபடி அகல்யா கவனித்துக் கொண்டிருந்த போது, அவருக்கு இந்த தனித்த வடிவமைப்பு பற்றிய சிந்தனையானது தோன்றியது. நர்மதை நதியானது தெளிவாக, நீல நிறத்தில் பாய்ந்தோடும் போது தனது அலைகளில் அது ஆயிரக்கணக்கான வடிவமைப்புகளை எழுப்பியது. நர்மதை அல்லது ரீவா என்ற இந்த நதியானது "தாய்" என்றும் அழைக்கப்படுகிறது. ஏனெனில் இந்த நதியானது தான் பாய்ந்தோடும் கரையோர ஊர்களைச் செழிப்பாக்கி ஆண்டு முழுவதும் அங்குள்ள மக்களுக்கு உணவு அளிக் கிறது. இந்த ரீவா நதியில் இருந்தும் அதன் மீதான தனது ஆழமான நம்பிக்கையில் இருந்தும் அவர் இந்த அகத்தூண்டுதலைப் பெற்றார். நர்மதை அலையின் பல்வேறு மனப்போக்கு களிலிருந்தும், தோற்றங்களில் இருந்தும் அவர் நெசவுக்கான வடிவமைப்புகளை உருவாக்கினார்.

தனது நகரத்தில் உள்ள மக்களுக்கு நீடித்த வாழ்வாதாரம் கிடைக்கச் செய்யும்



வகையில் இவ்வாறாக மகாராணி அகல்யாபாய் ஹோல்கர் 1765இல் நெசவை அறிமுகப்படுத்தினார். இவர்களுக்கு மாண்டு மற்றும் புர்ஹான்பூரில் இருந்து வந்த நெசவாளர்கள் இரவும் பகலும் பயிற்சியளித்தனர். மகாராணியின் முன்னுணர் திறனும் தொலைநோக்குப் பார்வையும் மகேஷ்வர் நகரம் முழுவதும் உள்ள ஆற்றுத்துறைகள், கோயில்கள், அவரது அரண்மனை என எல்லா இடங்களிலும் அழகிய கற்சிற்பங்களாகச் செதுக்கப்பட்டன. இந்தக் கற்சிற்பங்கள் ஆயிரக்கணக்கான நெசவாளர்களுக்கு வடிவமைப்பு மாதிரிகளாக மாறின. அவர்கள் தங்களது தறிகளில் இந்த வடிவமைப்புகளை நெய்தனர். இதன் மூலம் அழகிய மகேஷ்வரி சேலைகளை உருவாக்கினர். மகேஷ்வரில் உள்ள அரண்மனைகள் மற்றும் கோயில்களில் விலைமதிப்புள்ள கற்களோ தங்கத் தகடுகளோ இல்லை. எனினும், அவர்கள் உலகிலேயே தனித்துவமான, அழகான கட்டிடக்கலையை வெளிப்படுத்தினர். ஏனெனில், இவற்றின் வழியாக கருணை உள்ள அவர்களின் அரசி தனது குடிமக்களுக்கு அன்றாட வாழ்வாதாரத்தை வழங்கினார். இன்று, 250 ஆண்டுகளுக்குப் பிறகும் இந்த வடிவமைப்புகள் மகேஷ்வரின் மக்கள் வெறும் வயிற்றோடு படுக்கைக்குச் செல்லாமல் பார்த்துக் கொள்கின்றன. இன்றும் இவர்களுக்கான வருவாயை இந்த வடிவமைப்புகள் உறுதி செய்கின்றன.

இந்தக் கதைதான் என்னை மத்திய பிரதேசத்திற்கு ஏப்ரல் மாதத்தில் அழைத்துச் சென்றது. அந்த நாளில் வெப்பமானது வெளியில் 45 டிகிரி செல்சியஸ் எனக் கொதித்தது. இந்தக் கதைதான் நாட்டில் உள்ள 65 இலட்சம் கைத்தறி நெசவாளர்களுக்கும் ‘‘நம்பிக்கை‘‘ என்ற ஒளியைத் தருகிறது.

ரீவா மையமானது ஆற்றுத் துறைகளுக்குச் சற்று மேலே அகல்யாபாய் அரண்மனைக்கு அடுத்ததாகக் கட்டப்பட்டுள்ளது. இதன் இருப்பிடமானது குறியீட்டுத் தன்மை கொண்டது. இங்கிருந்துதான் கைத்தறி நெசவானது மகேஷ்வரின் வாயில்களுக்குள் நுழைந்தது. நான் அங்கு சந்தித்த நெசவாளர்கள் அளப்பரிய ஆற்றல்களுடனும் புதிய யோசனைகளுடனும் இருந்தனர். தங்களது தொழில் திறன்களைப் பயன்படுத்தி ஒரு கௌரவமான வாழ்வை மேற்கொள்வதில் அவர்கள் பெருமித உணர்வுடன் இருந்தனர். சிலர் தங்களின் சொந்தத் தறிகளில் நெசவு செய்தனர். சிலர் மாஸ்டர் நெசவாளர்களிடம் வேலை செய்தனர். ஏறத்தாழ அனைவருமே தங்களுக்கு என்று தனித்த நெசவு வடிவமைப்பை உருவாக்கி தாங்களாகவே அதனை நெய்து கொண்டனர். தங்களின் வெற்றிக்கதையை அவர்கள் எங்களிடம் பகிர்ந்து கொண்டார்கள்.

30 ஆண்டுகளுக்கு முன்பு மகேஷ்வரில் 25க்கும் குறைவான தறிகளே இருந்தன. நெசவாளர்கள் வேலை வாய்ப்பைத் தேடி வெளியே செல்லத் தொடங்கினர். 1979ஆம் ஆண்டில் அரச குடும்பத்தின் வாரிசான ரிச்சர்டு ஹோல்கர் என்பவர் ரீவா சங்கத்தை ஆரம்பித்தார். மகேஷ்வரில் நசிந்து வரும் நெசவுக்கு புத்துயிர் கொடுப்பதற்காக அவர் இந்த சங்கத்தை ஆரம்பித்தார். நெய்த துணிகளை காட்சிப்படுத்துவதற்காக, கண்காட்சிகள் நடத்துவதற்காக மற்றும் ஒரு பிராண்ட் பெயரை உருவாக்குவதற்காக என்று அவர் நாடு முழுவதும் பயணம் மேற்கொண்டார். பாரம்பரியமான நெசவு வடிவமைப்புகளை ஹோல்கர் தக்க வைத்துக்கொண்ட அதே வேளையில் புதிய நிறங்களையும் அவர் அறிமுகப்படுத்தினார். நவ்வாரி சேலையை (ஒன்பது யார்டு நீளம் உள்ள சேலை) அவர் ஆறு யார்டு நீளம் உள்ள சேலையாக மாற்றினார். இந்த முயற்சிகள் கவனம் பெற்றன. நீளம் குறைவான சேலைகளைக் கேட்டு நிறைய ஆர்டர்கள் குவிந்தன. இன்று மகேஷ்வரில் 1750 தறிகள் உள்ளன. ஆடைக்கான துணிகள், துப்பட்டாக்கள், திரைச் சீலைகள் என பலதரப்பட்ட நெசவுகள் அங்கு உள்ளன. அந்த நெசவாளர்கள் எங்களிடம் ’’புதிய தறிகள் இலாபம் தரும் என நம்பி அமைக்கப்படுவது நாட்டிலேயே எங்கள் நகரத்தில் மட்டும் தான், புதியவர்களை நாங்கள் ஏற்று தக்க வைத்துக் கொள்கிறோம்’’ என்று பெருமையாகக் கூறினார்கள், இதனால் மகேஷ்வரில் உள்ள நெசவாளர்கள் அனைவரும் பணக்காரர்கள் என்று அர்த்தம் இல்லை. இங்கு உள்ள 60 முதல் 70 வரையிலான நெசவாளர்கள் வறுமைக் கோட்டுக்குக் கீழ் (BPL) உள்ளவர்களே ஆவர். ஆனால் இவர்கள் பனாரஸ் நெசவாளர்களை விட சௌகரியமாக உள்ளனர். ஒவ்வொரு நாளும் மகேஷ்வர் நெசவாளர்களின் வாழ்க்கை மேம்பட்டே வருகிறது.

அரசி எதைத் தொடங்கினாரோ அதை அவரின் வாரிசுகள் தொடர்ந்து கடைபிடித்தனர். அதனால் ரீவா பிறந்தது. நான் ரீவா மையத்திற்குள் நுழைந்த போது, ஏதோ முற்றிலும் ஒரு புதிய உலகத்தில் நடப்பது போன்று உணர்ந்தேன். அழகான மரம் சூழ்ந்த முற்றத்தில் பெண்கள் அமைதியாக நெய்து கொண்டு இருந்தனர். சங்கத்தில் உள்ள 120 பணியாளர்களில் 60 சதவிகிதம் நபர்கள் பெண்கள் ஆவர். இவர்களின் குழந்தைகள் ரீவா நடத்துகின்ற குழந்தைகள் காப்பகத்திலும் (கிரஷ்) பள்ளிக்கூடத்திலும் உள்ளனர். அடுத்து உள்ள ஒரு பெரிய கட்டிடத்திலேயே ரீவா பள்ளிக்கூடம் உள்ளது. இங்கு அனைத்து நெசவாளர்களின் குழந்தைகளும் சேர்ந்து படிக்கலாம். இங்கு மதிய உணவும் வழங்கப்படுகிறது. மருத்துவர்கள், அவ்வப்போது வந்து செல்லும் சிறப்பு மருத்துவர்களுடன் ரீவா நெசவாளர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தாருக்காக சுகாதார மையம் செயல்படுகிறது.

சங்கம் ஒவ்வொரு பணியாளருக்கும் இரண்டு அறைகள் கொண்ட ஒரு

வீட்டையும் இரண்டு தறிகளையும் வழங்கியுள்ளது. இங்கு உள்ளவர்களில் பெரும்பாலோர் கடந்த 1516 வருடங்களாக இங்கேயே இருப்பவர்கள் ஆவர். இவர்கள் காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை வேலை செய்கிறார்கள். ஒரு நாளைக்கு ரூ.100 முதல் ரூ.150 வரை சம்பாதிக்கின்றனர். இவர்கள் ஓய்வு பெறும் போது அல்லது துரதிருஷ்டவசமாக ஊனமுற்றால் இவர்களுக்கு ரூ.500 முதல் ரூ.1000 வரை மாத ஓய்வூதியம் தரப்படுகிறது. இத்தகைய செலவுகள் எல்லாம் உள்ளடக்கப்படுவதால்தான் ரீவா சேலைகள் விலை அதிகமானதாக இருக்கின்றன.

எனது இரண்டாவது கதை என்பது, பாலிவுட்டின் மிக விருப்பமான திரை நட்சத்திர நடிகரான அமீர்கான் மேற்கொண்ட கைத்தறி நெசவுக்கான மேம்பாட்டுச் செயல் ஆகும். தாரே ஜமீன் பார் மற்றும் திரீ இடியட்ஸ் படத்தைத் தயாரித்தவரான அமீர்கான் கேமிராவைப் பார்த்து,

“நீங்கள் நினைக்கிறீர்கள் நான் ஒரு கலைஞன் என்று... ஆனால் உண்மையான கலைஞர் இங்கு இருக்கிறார்... அது நீங்கள்தான்” என்று சொல்கிறார். அவர் அருகில் கரீனா கபூர் நிற்கிறார். பின்னணியில் சந்தேரி நெசவாளி குக்கம் சிங் மற்றும் அவர் குடும்பத்தினர் வசிக்கும் சாதாரணமான வீடு உள்ளது. 50,000 இழைகளுடன் உள்ள மரத்தறியை அமீர் சுட்டிக்காட்டுகின்றார்.

இந்தக்கதை இவ்வாறுதான் தொடங்கியது.

கடந்த 5 ஆண்டுகளாக நான் நமது நாட்டின் ஹுனார் மந்த் நெசவாளர்கள் மற்றும் கைவினைக் கலைஞர்களின் நிலைமையை எவ்வாறு மேம்படுத்துவது என்று போராடிக் கொண்டு இருந்தேன். பனாராஸ், மகேஷ்வர், போச்சம்பள்ளி, பைத்தான், கோட்டா, காஞ்சிபுரம், பரபான்கி போன்ற பல கைத்தறி நெசவு மையங்களுக்கு நான் பயணம் மேற்கொண்டேன். ஜோத்பூர், மொலேலா, மயூர்பஞ்ச், படோஹி, சம்பா போன்ற இடங்களில் கைவினைக் கலைஞர்கள் வேலையில் ஈடுபட்டுக் கொண்டி ருப்பதை நான் பார்த்தேன். நான் பார்த்த எல்லா இடங்களிலும் நெசவாளர்கள் விரக்தியுடனேயே இருந்தனர். கனவுகளை நெய்கின்ற கைகள், அழகை உருவாக்குகின்ற கைகள் சலிப்புடன் இருந்தன. இளைஞர்கள் தங்களது முன்னோர்களிடம் இருந்து எதையும் கற்றுக் கொள்ளவில்லை அல்லது கற்றுக் கொண்டதை ஞாபகத்தில் வைத்திருக்கவில்லை. அவர்கள் ரிக்ஷா இழுக்கிறார்கள், குப்பை பொறுக்குகிறார்கள். இவ்வாறாக அவர்களின் படைப்புத் திறனானது மங்கிவிட்டது.

நான் எப்போதெல்லாம் ஒரு கைத்தறித் துணியைத் தொடுவேனோ அப்போதெல்லாம் அதன் அழகும் நெகிழ்ச்சித் தன்மையும் எனக்கு மேஜிக் போன்று இருந்தது. அதேசமயம் அதன் இருண்ட எதிர்காலமும் என் கண் முன்னே தெரிந்தது. அதே துணி, உபயோகிக்காத இருப்புக் குவியலில் தூசி படர்ந்து கிடக்கிறது. எதிர்காலத் தலைமுறைகளின் கூட்டு நினைவில் இந்த அறிவு இல்லாமல் போய்விடுமே என்ற சிந்தனை ஆழமான மனக் கலக்கத்தைத் தந்தது. அவர்கள் ஒரு போதும் ‘ஹிம்ரூ’ அல்லது ‘கானி’ ஷாலைப் பார்க்கப்போவது இல்லை. அரேபிய இரவுகள் குறித்த கதைகள் நெய்யப்பட்ட கிங்க்வாப் துணியை அவர்கள் ஒரு போதும் தொட்டுப் பார்க்கப் போவது இல்லை. எனது வாழ்வில் உற்சாகம் குறைந்த அந்த சமயத்தில்தான் நான் முக்கியமான ஒரு நபரைச் சந்தித்தேன். வரலாற்றை மாற்றக் கூடிய, கைத்தறி நெசவுக்கான இறுதித் தீர்ப்பு என்ற எனது கணிப்புகளை பொடிப்பொடியாக்கும் அந்த நபரைச் சந்தித்தேன்.

அமீர்கான் அந்தச் சமயத்தில் தாரே ஜமீன் பார் படத்தில் ஈடுபட்டிருந்தார். இரவு உணவு நேரத்தின் போது ஒரு சில நிமிடங்கள் நானும் அவரும் பேசிக் கொண்டோம். அந்த குறுகிய நேர உரையாடலிலேயே நான் அவரிடம் மிகவும் திறன்பெற்ற கைவினைக் கலைஞர்களான நெசவாளர்களின் எண்ணிக்கை தொடர்ச்சியாகவும் சீராகவும் குறைந்து வருவதைச் சுட்டிக்காட்டினேன். நான் அவருக்கு மஸ்லின் துணியின் வெட்கம் என்ற கதையைக் கூறினேன். ஒரு முழு உருளை மஸ்லின் துணி ஒரு வளையத்துக்குள் நுழைந்து விடும் கதையைச் சொன்னேன். பேரரசின் விசுவாசமான வேலையாட்கள் நெசவாளர்களின் கட்டை விரல்களை வெட்டிய கதையைக் கூறினேன். ஏனெனில் பர்மிங்காம் மில்களுக்கு போட்டியாக வேறு எதுவும் உருவாகிவிடக்கூடாது என்பதற்காக இவ்வாறு நெசவாளிகளின் கட்டை விரலானது வெட்டப்பட்டது என்பதைக் கூறினேன்.

அமீர் அக்கறையுடன் கேட்டார். அதற்குப்பின் பல மாதங்கள் உருண்டோடின. ஒரு நாள் அவரிடம் இருந்து என்னைச் சந்திக்க விரும்புவதாகத் தகவல் வந்தது. கைவினைக் கலைகள் பிரிவின் மிக முக்கியமான பிரச்சாரகரான ஒரு இளம் சக பணியாளருடன் நான் அமீரைப் பார்க்கச் சென்றேன். பல இலட்சக்கணக்கான நெசவாளர்கள் மற்றும் கைவினைக் கலைஞர்களின் வாழ்வானது இந்த அதிகாரப் பரவல் மற்றும் அங்கும் இங்குமாக சிதறி





இருக்கின்ற இந்தத் தொழில் பிரிவைச் சார்ந்தே உள்ளது. இந்தத் தொழில் பிரிவானது பாரம்பரியமான ஞானம், கலாச்சாரச் செழுமை மற்றும் நமது ஆட்சி முறையின் மதச்சார்பற்ற தன்மை ஆகியவற்றை உள்ளடக்கி இருக்கிறது என்று நான் கூறினேன். அவர் கவனத் துடன் இந்தக் கதையைக் கேட்டார். சுற்றுச்சூழலுக்கு உகந்த, எரிசக்தியைச் சேமிக்கின்ற இந்தக் கலை வடிவமானது உலகின் மிகச் சிறந்த கலைகளில் ஒரு இடத்தை இந்தியாவுக்குப் பெற்றுத் தந்துள்ளதை அவர் அக்கறையுடன் கேட்டார். திட்டக் குழுவின் ஆலோசனைக் குழு கூட்டம் ஒன்றில் பெனாரஸின் மூத்த நெசவாளர் நிஜாமுதின் கூறிய வார்த்தைகளான

“நான் என்னுடைய வாழ்நாள் முழுவதும் நெசவுத் தொழிலில் ஈடுபடுகிறேன். ஆனால் என்னுடைய சவத்துணியை நானே நெய்ய முடியுமா?'' என்பதோடு நான் கதையை முடித்தேன்.

பல மாதங்களுக்குப் பிறகு, ஒரு விமானத்தில் நான் அமர்ந்திருந்த போது அமீரின் கைத்தறிக்கு பெருமை சேர்க்கும் செயல் குறித்த சொற்கள் காதில் விழுந்தன: “அமீர் அனைத்து ஊடகங்களிலும் கைத்தறி ஆடைகளுடன் இருக்கிறார்''. உடனடியாக நான் யூடியூப்பை பதிவிறக்கம் செய்யத் தொடங்கினேன். கரீனாவோடு நடந்து கொண்டே அமீர் திரையில் தோன்றினார். சந்தேரியின் இருண்ட தெருக்களில் கூனி தர்வாசாவைக் கடந்து குக்கம் சிங்கின் சிறிய வீட்டுக்கு அவர்கள் செல்கின்றனர். குக்கம் சிங் சந்தேரி சேலைகளை சில சமயங்களில் நெய்த நெசவாளர் ஆவார். உலகம் முழுவதும் இலட்சக்கணக்கான இரசிகர்களால் கொண்டாப்படுகின்ற இந்த இரண்டு உச்சநிலை திரை நட்சத்திரங்கள் ஒற்றை அறை கொண்ட அந்த வீட்டுக்குள் நடந்து செல்வதையும், அங்கு அவரிடம் அழையா விருந்தாளியாக நுழைவதற்காக மன்னிப்பு கேட்பதையும் ஒவ்வொருவரின் கண்களும் ஆச்சரியத்துடன் பார்த்துக் கொண்டிருந்தன. அவர்களின் மனதுக்கு நெருக்கமான விவாதப்பொருளை அமீர் உரையாடலாகத் தொடர்ந்தார்: பதிலுக்கு அவர்களின் வாழ்வாதாரம், சந்தைகள், இடைத்தரகர்கள் குறித்து அவர்கள் அனைவரும் பேசினார்கள், “ஒரு நாளைக்கு நாங்கள் ரூபாய் 50 சம்பாதிக்கிறோம்'', 3 மாத வேலைக்கு நாங்கள் இருவரும் சேர்ந்து ரூபாய் 6000 சம்பாதிக்கிறோம்''. ஆனால் சில்லறை விற்பனைச் சந்தையில் நாங்கள் நெய்த புடவை ரூபாய் 25,000க்கு விற்பனை ஆகிறது'' என்றார்.

“எனக்கு சூட் தைப்பதற்கான துணியை நெய்து தரமுடியுமா?'' என அமீர் கேட்டார். “ஏன் முடியாது அய்யா, நிச்சயம் எங்களால் நெய்து தரமுடியும்''. என்று குக்கம் சிங் கூறினார்.

இந்தப் புடவையை (சந்தேரி, கறுப்பு மற்றும் தங்க நிறம்) நான் கரீனாவுக்கும் இந்தப் புடவையை (சந்தேரி, வெள்ளை மற்றும் தங்க நிறம்) என்னுடைய மனைவி கிரணுக்கும் வாங்கிக் கொள்கிறேன். உங்களுக்கு ரூபாய் 6000 தருவதற்குப் பதிலாக அல்லது மொத்தமாக கொள்முதல் செய்யும் விலைக்குப் பதிலாக நான் சந்தை விலையையே தந்து விடுகிறேன் என்று அமீர் பேசிக் கொண்டு இருக்கும் போதே, சற்று தூரத்தில் பிரமிப்புடன் வாய் பேசாது அமைதியுடன் இருக்கும் பெண் நெசவாளரான ராம்வதியை நோக்கி கேமரா திரும்புகிறது. கண்களில் கனவுகளைத் தேக்கி வைத்துள்ள ஒரு சிறிய பெண் குழந்தை இப்போது அமீரின் கைகளில் உள்ளது. அமீரும் கரீனாவும் இப்போது தறியில் அமர்கின்றனர். பாபின் மூலம் நூலிழையைச் செலுத்துவது எவ்வாறு என்று கற்றுக் கொள்கின்றனர். இந்த இரண்டு புதிய நெசவாளர்களும் ஷட்டரைப் பயன்படுத்தி குறுக்கும் நெடுக்குமாக இழையை நெய்து முதல் வரிசையை உருவாக்கினார்கள்.

கைத்தறிகள் அமீர் மற்றும் கரீனாவின் பெயர் சூட்டப்பட்டு தனிமுத்திரை (பிராண்ட்) பெற்றன. திரைப்பட நட்சத் திரங்கள் ஒரு முறை தரிசனம் தருவதற்கே அதிக அளவு கட்டணம் வசூலிப்பார்கள் என்று சொல்லப்படுவது உண்டு. ஆனால் இந்தியாவின் உச்ச திரை நட்சத்திரமான அமீர் தனது பெயரை கைத்தறிக்கு பரிசாக வழங்கினார் அதுவும் இலவசமாக வழங் கினார். தனது நேரத்தை இலவசமாக ஒதுக்கித் தந்தார். தனது திறமையை இலட்சக்கணக்கான ஹுனார்மண்ட் ஆண்களுக்கும் பெண்களுக்கும் வழங் கினார். சர்வதேசமயமான உலகில் 21ஆம் நூற்றாண்டில் இளைஞர்களின் பேஷன் போக்காக கைத்தறித் துணிகள் உருவாகட்டும்'' - இதுதான் அவரின் இரசிகர்கள் மற்றும் பார்வையாளர்களுக்கு அவர் கடைசியாகச் சொன்ன வார்த்தைகள் ஆகும்.

எனவே இன்று நாம் கைத்தறி நெச வாளர்களின் மற்றும் கைவினைக் கலை ஞர்களின் கரங்களை கொண்டாடுகிறோம். அதிலும் கவிஞர் ஃபயஸ் அகமது ஃபயஸ் வார்த்தைகளில் கொண்டாடுகிறோம்:

இந்தக் கரங்கள் உயிருடன்
இருந்தால்தான்

இந்த இரத்தம் உடலில்
தடையின்றி ஓடினால்தான்

இந்தக் காலை, மாலை நேரங்கள்,

இந்த நட்சத்திரக் கூட்டங்கள்,
கோள்கள்,

இந்தப் பேனாவும் மையும், இந்த
முரசுகளும், பதாகைகளும்

இந்தப் புகழும், சிறப்புகளும்...

எல்லாமும் நமக்கானவை.

**- சையதா ஹமீத்,** சமூக செயற்பாட்டாளர், திட்டக்குழு முன்னாள் உறுப்பினர்.

# கைவினைக் கலைஞர்களுக்கான நவீனமயமாக்கலும் திறன் மேம்பாடும்

- கவுரவ் கபூர்

இந்தியாவின் பெருமை என்பது அதன் கைவினைக் கலைகளையும், ஜவுளி வளத்தையும் தான் சார்ந்திருக்கிறது. இந்தியாவின் நெசவுப் பாரம்பரியமும், கைவினைக் கலைகளும் நினைவு தெரிந்த காலத்தில் இருந்தே நடைமுறையில் உள்ளன. இந்தியாவின் தனித்துவமான துணைக் கலாச்சாரங்களின் பிரதிநிதி களாக இவை திகழ்கின்றன. ஜவுளி மற்றும் ஆயத்த ஆடைகளை உற்பத்தி செய்வதில் உலக அளவில் இரண் டாவது இடத்தில் இந்தியா உள்ளது. கைவினைப் பொருள்களை அதிக அளவில் ஏற்றுமதி செய்யும் நாடுகளின் பட்டியலில் மூன்றாவது இடத்தை இந்தியா பிடித்துள்ளது. பருத்தி, கம்பளி, பட்டு, சணல் உள்ளிட்ட மூலப்பொருள்கள் தாராளமாகக் கிடைப்பதாலும், திறன் பெற்ற பணியாளர்கள் அதிக எண்ணிக் கையில் இருப்பதாலும், உலகச் சந்தைக்குத் தேவையான ஜவுளிப் பொருள்களை அதிகம் வழங்கும் நாடாக இந்தியா திகழ்கிறது. இந்திய நெசவாளர் களையும், கைவினைக் கலைஞர்களையும் பாதுகாப்பதுதான் இன்றைய சூழலில் நமது முக்கியமான கடமையாகும். நமது தனித்துவமான கலை மற்றும் கலாச்சார பாரம்பரியத்தை உலக நாடுகள் உற்று நோக்கத் தொடங்கியுள்ள நேரத்தில் இது மிகவும் அவசியமாகும். இந்த வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொண்டு வெகுமதிகளை அறுவடை செய்ய வேண்டிய நேரம் இந்திய கைவினைக் கலைஞர்களுக்கு கனிந்துள்ளது.

மற்ற தொழில்களைப் போலவே கைவினைப் பொருள்கள் உற்பத்தி மற்றும் ஜவுளித்தொழிலும் பல்வேறு சவால்கள் மற்றும் வெகுமதிகளுடன் தொடர்புகொண்டதாகவே உள்ளது. இந்தியாவில் வேளாண்மைக்கு அடுத்த படியாக மிக அதிக வேலைவாய்ப்பை ஜவுளி மற்றும் கைவினைப் பொருள்கள் உற்பத்தித்துறைதான் வழங்குகிறது



என்பதால், இந்தியப் பொருளாதாரத்தில் அது ஒரு முக்கியமான துறையாக விளங்குகிறது. இத்துறையில் மொத்தம் 70 இலட்சம் பேர் வேலைவாய்ப்பு பெற் றுள்ளனர். இத்தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் பல்வேறு துறைகளின் தேவைகளை உணர்ந்து, அதற்கான தொழில்நுட்பத்தைக் கற்றுக்கொள்ள வேண்டியது மிகவும் அவசியமாகும். புதுமைக்கும், வளர்ச்சிக்கும் ஈடு கொடுக்கும் வகையில், தேவையான அளவுக்கு திறன் பயிற்சி பெற்ற பணி யாளர்களை ஜவுளி மற்றும் கைவினைப் பொருள்கள் உற்பத்தி நிறுவனங்கள் பணியமர்த்திக் கொள்ளவேண்டும்.

தானியங்கி விசைத்தறி நெசவாளர், தானியங்கி விசைத்தறி இயக்குபவர், நவீன விசைத்தறி நெசவாளர், பீம் கேரியர் மற்றும் லோடர், தானியங்கி விசைத்தறிக்கான ஃபிட்டர் ஆகிய பணியாளர்களுக்கு திறன்பயிற்சி வழங்கு வதன் மூலம்தான் இத்துறையின் வளர்ச்சிக்கு புதிய உத்வேகத்தை வழங்கமுடியும். இத்துறையின் பணி யாளர்களில் பெரும்பான்மையினர் பெண் கள் என்பதால், அவர்களுக்கு அதிகாரம் அளிப்பதற்கான மிகச் சிறந்த கருவியாக இத்துறை திகழும். இத்துறையில் தொழில்நுட்ப மேம்பாட்டை ஏற்படுத்து தல், கட்டமைப்பை வலுப்படுத்துதல், ஏற்றுமதியை அதிகரித்தல் உள்ளிட்ட வற்றுக்காக ஏராளமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஜவுளித்துறையின் வளர்ச்சிக்கான உடனடித் தேவைகளை நிறைவேற்றும் நோக்குடன், 72 வகையான தகுதித் திட்டங்களை உருவாக்க வெற்றிகரமான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இவற்றில் 71 வகையான தகுதித் திட்டங்களுக்கு தேசிய திறன் தகுதிக் குழு ஒப்புதல் அளித்துள்ளது. இந்த 71 வகையான தகுதித் திட்டங்களில்தான் ஜவுளித்தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களில் 80 விழுக்காட்டின ருக்கான தேவைகள் அடங்கியுள்ளன. இவர்களில் பெரும்பான்மையினர் ஜவுளித்துறையைச் சேர்ந்தவர்கள் ஆவர். இதுதவிர, அதிக தொழிலாளர்கள் இல் லாத, அதே நேரத்தில் மிகவும் முக்கியமான கம்பளி, பட்டு, சணல் சார்ந்த துறைகளின் தொழில்நுட்பங்களையும், தரக்கட்டுப் பாட்டுக்கான தர அளவுகளையும் உருவாக்கும் பணியில் ஜவுளித்துறை திறன் குழு ஈடுபட்டிருக்கிறது.

கைவினைப் பொருள்கள், கைத்தறி ஆடைகள் என்று வரும்போது, இந்தியாவில் குறிப்பிட்ட வகையிலான கைவினைப் பொருள்கள், கைத்தறி ஆடைகள் உற்பத்தி மையம் என்று கூறும்படியாக எந்தப் பகுதியும் இல்லை. இது மிகவும் பரவலான பல்துறை சார்ந்த தொழில் ஆகும். அசாமில் உற்பத்தி செய்யப்படும் பட்டு ஆடைகளாக இருந்தாலும், வங்கத்தில் உற்பத்தி செய்யப்படும் பருத்தி ஆடைகளாக இருந்தாலும், காஷ்மீரில் உற்பத்தி செய்யப்படும் கம்பளிப் பொருள்களாக இருந்தாலும், தமிழ்நாட்டில் காஞ்சிபுரத்தில் உற்பத்தி செய்யப்படும் பட்டுப்புடவைகளாக இருந்தாலும் அவை ஒவ்வொன்றுக்கும் ஒரு தனிக்கதையும், தனிச்சந்தையும் உள்ளன. தொழில்நுட்பம் எந்த அளவுக்கு வளர்ந்திருந்தாலும் கைவினைக் கலைஞர்களின் கைத்திறனுக்கு தனி அழகு உண்டு. பாரம்பரியம் மிக்க கலைகள், பரம்பரை பரம்பரையாக ஒரு குறிப்பிட்ட பிரிவினரால் செயலாக்கப்பட்டு



வருகின்றன. இவை திறன் பெற்ற கைகளால் செய்யப்படும் மாயாஜாலங்கள் என்றால் அது மிகையல்ல.

இந்திய ஜவுளித்துறையில் மனிதர்களால் உருவாக்கப்படும் நாரில் தொடங்கி, ஆயத்த ஆடை மற்றும் வீட்டு அலங்காரப் பொருள்கள் வரையிலான ஒட்டுமொத்த மதிப்பு வளையமும் அதிக வலிமை கொண்டதாக உள்ளது. ஏற்றுமதி மூலம் கிடைக்கும் அன்னிய செலாவணி வருவாயில் 27% இத்துறை மூலமாகக் கிடைக்கிறது. நாட்டின் ஒட்டுமொத்த உற்பத்தி மதிப்புக்கு இத்துறையின் பங்களிப்பு 2% ஆகும். நாட்டின் மொத்த ஏற்றுமதியில் 13% ஜவுளித்துறை சார்ந்தது ஆகும். அதேபோல், இந்தியாவில் இருந்து ஏற்றுமதி செய்யப்படும் கைவினைப் பொருள்களின் மதிப்பு 2018ஆம் ஆண்டின் ஏப்ரல் மாதம் முதல் நவம்பர் மாதம் வரையிலான 8 மாதங்களில் அதற்கு முந்தைய ஆண்டின் மதிப்பைவிட 1.65% அதிகரித்து, 242 கோடி அமெரிக்க டாலராக உயர்ந்துள்ளது. இத்துறைகளில் நவீனமயம், வளர்ச்சி, மற்ற அனைத்து அம்சங்களின் மேம்பாடு, திறன்பயிற்சி அளித்தல் ஆகியவற்றை நடைமுறைப்படுத்தும் போது, இத்துறைகள் அதிவேக வளர்ச்சியடைந்து நாட்டின் பொருளாதார மேம்பாட்டில் சாதகமான தாக்கத்தை ஏற்படுத்தும்.

கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு வரை ஜவுளி, கைவினைப் பொருள்கள் உற்பத்தித்துறை பெரும்பாலும் பாரம்பரியமான உற்பத்தி முறையையே சார்ந்திருந்தது. அவை, அதிக மனித உழைப்பு தேவைப்படுபவையாகவும், உற்பத்திக்கு நீண்டகாலம் எடுப்பவையாகவும், சிக்கலான நடைமுறைகளைக் கொண்டவைகளாகவும் இருந்தன. ஆனால், இப்போது உருவாகி வரும் நான்காவது தொழில் புரட்சியில் உலக அளவிலான இணையம், உற்பத்தி செய்ய வேண்டிய பொருள்களின் தன்மைகளை வரையறுத்தல், உற்பத்தி வேகம் ஆகியவை சாத்தியமாகியிருப்பதால், அவற்றைக் கொண்டு இந்தப் பொருள்களின் உற்பத்தி வேகத்தை அதிகரிக்க முடியும். கைவினைப் பொருள்கள் உற்பத்தியில், தரத்திற்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்படுவதால், திறன் பெற்ற பயிற்சியாளர்களுக்கான தேவை அதிகரித்திருக்கிறது.

கைத்தறி நெசவில் ஈடுபட்டுள்ள குடும்பங்களில் 87 விழுக்காட்டினர் ஊரகப் பகுதிகளில் இருந்துதான் வருகின்றனர். 13 விழுக்காட்டினர் மட்டுமே நகர்ப் பகுதிகளைச் சார்ந்தவர்கள் ஆவர். கைத்தறித் துறையில் பணியாற்றுவோரில் பெரும்பான்மையினர் பெண்கள் என்பதால், அவர்களுக்கு அதிகாரம் அளிப்பதில் கைத்தறித்துறை முக்கியமான பங்காற்றுகிறது. கைத்தறி ஆடை உற்பத்தி என்பது நாட்டின் ஒட்டுமொத்த ஆடை உற்பத்தி மதிப்பில் ஐந்தில் ஒரு பங்கு ஆகும். ஒட்டுமொத்த ஆடை ஏற்றுமதி மூலம் இந்தியாவுக்கு 3,534 கோடி அமெரிக்க டாலர் அளவுக்கு வருவாய் கிடைக்கிறது.



கைவினைக் கலைஞர்கள் நீடித்த தன்மையில் எந்தவிதமான எதிர்மறைத் தாக்கமும் இல்லாமல், கணக்கில் அடங்காத எண்ணிக்கையில் பொருள்களை உற்பத்தி செய்யமுடியும். ஆயத்த ஆடைகள், வீட்டு அலங்காரப் பொருள்கள் மற்றும் தொழில்நுட்பத் துணி வகைகள் போன்ற பொருள்களை உற்பத்தி செய்வதில் மிக அதிக வளர்ச்சியை இந்தியாவால் எட்ட முடியும்.

ஜவுளி மற்றும் கைவினைப் பொருள்கள் உற்பத்தித் துறையின் வளர்ச்சி என்பது வேலைவாய்ப்புகளைப் பெருக்குதல், மகளிருக்கு அதிகாரம் அளித்தல், வறுமை மற்றும் ஆதரவற்ற நிலையை ஒழித்தல் ஆகியவை சார்ந்தவை மட்டுமின்றி, நாட்டின் தேசிய வருமானம், ஏற்றுமதி, தொழில் முனைவு ஆகியவற்றையும் வளர்த்தெடுப்பதற்கான கருவியாகத் திகழும். ஜவுளித் துறையின் சில பிரிவுகள் அதிக முதலீடு தேவைப்படாதவை என்பதுடன், அத்தொழில்களை தொடங்க



மிகக் குறைந்த காலமே ஆகும் என்பதால், இவை நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு பெருமளவில் உதவும் என்பது குறிப்பிடத்தக்கது.

ஜவுளித்துறை மற்றும் கைவினைப் பொருள்கள் துறைகளிலும், அவற்றைச் சார்ந்த துறைகளிலும் வேலைவாய்ப்புகளை அதிகரிப்பதன் மூலம் இத்துறைகளை இன்னும் வளமானவையாக மாற்றமுடியும். அதுமட்டுமின்றி, இத்தொழில் துறைகளில் உற்பத்தி செய்யப்படும் பொருள்கள் மூலம் நமது கலைகளையும், திறமைகளையும் வெளிப்படுத்த முடியும். கைவினைப் பொருள்கள் மற்றும் ஆடைகள் உற்பத்தி மூலம் நமது கலாச்சாரத்தை மேம்படுத்த முடியும். இந்தியாவின் ஜவுளி ஏற்றுமதியில் மூன்றில் இரண்டு பங்கு அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவுக்குதான் செய்யப்படுகிறது. அவை தவிர, சீனா, ஐக்கிய அரபு எமிரேட், வியட்நாம், இலங்கை, சவுதி அரேபியா, கொரியா, வங்கதேசம், துருக்கி, பாகிஸ்தான், பிரேசில் ஆகிய நாடுகளின் சந்தைகளுக்கும் இந்திய ஆடைகள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

ஜவுளி மற்றும் கைவினைப் பொருள்கள் உற்பத்தியில் அதிக கவனம் செலுத்தி, அவற்றை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுப்பதன் மூலம் குறிப்பிடத்தக்க அளவிலான உலக வணிகத்தை இந்தியாவுக்கு ஈர்க்க முடியும். இந்திய கைவினைப் பொருள்கள் உற்பத்தியையும், ஜவுளித் துறையில் உள்ள வலிமைகளையும், பெருநிலைப் பொருளாதார அம்சங்களையும் முடுக்கி விடுவதன் மூலம் இந்தியாவின் ஜவுளி மற்றும் கைவினைப் பொருள்கள் உற்பத்தித் துறையின் சந்தையை தொடர்ந்து வளர்ச்சிப் பாதையில் பயணிக்கச் செய்யமுடியும்.

- **கவுரவ் கபூர்**, மூத்த தலைவர், அறிவுரை தகவல் தொடர்பு பிரிவு, தேசிய திறன் மேம்பாட்டுக் கழகம்.

# இந்தியப் பொருளாதாரத்தில் ஜவுளி மற்றும் கைவினைக்கலைகளின் பங்கு

- சிஷிர் சின்ஹா

ஆந்திரப் பிரதேசத்தில் உள்ள திருப்பதிக்கும், ஒடிசாவில் உள்ள ரகுராஜ்பூருக்கும் இடையே 1,100 கிலோமீட்டர் இடைவெளி உள்ள போதிலும், ஒரு விசயம் இந்த இரு நகரங்களையும் நெருக்கமாக இணைக்கிறது. அதுதான் ஜவுளித் துறையை சுற்றுலாவுடன் இணைக்கும் திட்டம் ஆகும். ஜவுளி மற்றும் கைவினைப் பொருள்கள் தயாரிப்புக்கு புதிய பரிமாணத்தை அளிக்கும் நோக்குடன் உருவாக்கப்பட்டுள்ள புதிய சுற்றுலாத் திட்டத்தை செயல்படுத்துவதற்காக இந்த இரு மையங்கள்தான் முதலில் தேர்வு செய்யப்பட்டுள்ளன.

திருப்பதி குறித்து எந்த அறிமுகமும் தேவையில்லை. அதே நேரத்தில், ரகுராஜ்பூர் குறித்து அறிமுகம் அளிக்க வேண்டியது அவசியமாகும். இந்த நகரம் ஒடிசா மாநிலத்தின் கோவில் நகரமான பூரிக்கு அருகில் அமைந்துள்ளது. பட்ட சித்ரா, பனை ஓலைக்கலைகள், கல்லில் பாரம்பரிய சிற்பம் வடித்தல், காகிதக்கூழ் கொண்டு சிலைசெய்தல் ஆகியவற்றுக்கு இந்த கிராமம் புகழ்பெற்றதாகும். பல நூற்றாண்டு கால கைவினைக் கலைப் பாரம்பரியத்தை இந்த கிராமம் இன்னும் உயிர்ப்புடன் வைத்திருக்கிறது. புவனேஸ்வர் பூரி நெடுஞ்சாலை இந்தக் கிராமத்தை இணைக்கும் வகையில் அமைந்துள்ளது. இந்த கிராமத்தில் மொத்தம் 140 குடும்பங்கள் மட்டுமே வாழ்கின்றன. இந்த கிராமத்தில் உள்ள ஒவ்வொரு குடும்பமும் கைவினைப் பொருள்களைத் தயாரிக்கும் தொழிலில் ஈடுபட்டுள்ளது என்பது இந்தக் கிராமத்தின் சிறப்பு ஆகும். இந்தியாவிலேயே இத்தகைய சிறப்பு கொண்ட ஒரே கிராமம் இதுவாகத்தான் இருக்கும். கைவினைப் பொருள்கள் நூலகம், அது குறித்து விளக்கம் அளிக்கும் மையம், திறந்தவெளி திரையரங்கம், விருந்தினர் விடுதிகள் ஆகியவற்றை இக்கிராமம் கொண்டுள்ளது. இந்தியர்கள் மட்டுமின்றி, ஏராளமான வெளிநாட்டவரும் இந்த கிராமத்திற்கு வந்து செல்கின்றனர். அதன் மூலம் இந்த கிராமத்து மக்கள் ஏராளமாக வருவாய் ஈட்டுகின்றனர். சுற்றுலாத் தொழில் இந்த கிராமத்திற்கு புதிய அடையாளத்தை ஏற்படுத்தித் தந்துள்ளது. இந்த அடையாளத்தின் காரணமாக, ரகுராஜ்பூருக்கு அருகில் உள்ள கிராமங்களுக்கும் சுற்றுலா சார்ந்த பயன்கள் கிடைக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.



ஜவுளி மற்றும் கைவினைக் கலைகளில் சிறந்த பகுதிகளை சுற்றுலாத் தளமாக மாற்றும் இந்த முயற்சி, பாரம்பரிய தொழில் துறைகளுக்கு ஓரளவாவது அடையாளத்தையும், முன்னேற்றத்தையும் ஏற்படுத்தி தந்துள்ளது. இத்துறைகள் இந்தியப் பொருளாதார வளர்ச்சிக்கு அதிக பங்களிப்பு செய்ய இந்த முயற்சி உதவுகிறது. இந்தியாவின் பழமையான தொழில் துறைகளில் ஜவுளித் துறையும் ஒன்று என்பதில் யாருக்கும் எந்த ஐயமும் இருக்கமுடியாது. தற்போதைய நிலையில், ஜவுளித்துறை மூலம் 15,000 கோடி அமெரிக்க டாலர் அளவுக்கு வருமானம் கிடைக்கிறது. இது விரைவில் 25,000 கோடி அமெரிக்க டாலர் என்ற அளவை எட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தொழிற்சாலை உற்பத்திக்கு ஜவுளித்துறை மொத்தம் ஏழு சதவீத பங்களிப்பு செய்கிறது. இந்தியாவின் ஒட்டுமொத்த ஏற்றுமதி வருவாயில் 15 சதவீதம் ஜவுளித் துறையிலிருந்து கிடைக்கிறது. 2017 - 18ஆம் ஆண்டில் நாட்டின் ஒட்டுமொத்த உற்பத்தி மதிப்பில் இரண்டு சதவீதம் ஜவுளித் துறை மூலம் கிடைக்கிறது. 2017 - 18ஆம் ஆண்டில் ஒட்டுமொத்தமாக ஜவுளித்துறை ஏற்றுமதி மூலம் ஈட்டப்பட்ட வருவாய் 3,920 கோடி அமெரிக்க டாலராகும்.

அதேபோல், 2018 - 19ஆம் நிதியாண்டில் முதல் ஏழு மாதங்களில், அதாவது 2018ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் அக்டோபர் மாதம் வரையிலான காலத்தில்

ஜவுளி மற்றும் ஆயத்த ஆடை ஏற்றுமதி மூலம் 2,290 கோடி அமெரிக்க டாலர் வருவாய் கிடைத்துள்ளது. அதற்கு முந்தைய ஆண்டுடன் ஒப்பிடும்போது, நடப்பு நிதியாண்டில் இத்துறையின் ஏற்றுமதி வருவாய் கணிசமான உயர்வை எட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. உலக அளவில் சீனாவுக்கு அடுத்தபடியாக இந்தியாவின் ஜவுளித்துறைதான் உலகின் இரண்டாவது பெரிய உற்பத்தி மற்றும் ஏற்றுமதித்துறை என்ற பெருமையை நாட்டிற்குப் பெற்றுத்தர இருக்கிறது. ஜவுளித் தொழில் என்பது இந்தியாவின் கலாச்சார மரபு மற்றும் பாரம்பரியத்துடன் பிரிக்க முடியாத அளவுக்குப் பிணைந்திருக்கிறது. இந்தியாவின் ஒட்டுமொத்த ஜவுளி மற்றும் ஆயத்த ஆடை ஏற்றுமதியில் 45 சதவீதம் வளர்ச்சியடைந்த நாடுகளுக்குத்தான் ஏற்றுமதி செய்யப்படுகிறது என்பதில் இருந்தே இந்திய ஜவுளித் துறையின் தனித்துவமான பெருமையை உணர்ந்துகொள்ள முடியும்.

ஜவுளித்துறையும், கைவினைப் பொருள்கள் துறையும் வேலைவாய்ப்பு உருவாக்கத்திற்கான முக்கிய ஆதாரங்கள் ஆகும். அண்மையில் மேற்கொள்ளப்பட்ட தொழிற்சாலைகள் சார்ந்த ஆண்டுக் கணக்கெடுப்பு விவரங்களின் அடிப்படையில், அமைப்பு சார்ந்த ஜவுளி மற்றும் ஆயத்த ஆடைத் துறையில் வேலைவாய்ப்பு பெற்றுள்ளவர்களின் எண்ணிக்கை 2015 - 16ஆம் ஆண்டில் 26,48,238-ஆகவும், 2016-17-ஆம் ஆண்டில் 26,94,280-ஆகவும் உள்ளது. இது தவிர, கைத்தறித்துறை நேரடியாகவும், மறைமுகமாகவும் 43 இலட்சம் நெசவாளர்களுக்கும், நெசவுத்தொழில் சார்ந்த பிற தொழிலாளர்களுக்கும் வேலைவாய்ப்பை வழங்குகிறது. இவர்கள் மட்டுமின்றி, 68.86 இலட்சம் கைவினைக் கலைஞர்களும் உள்ளனர். கைத்தறி மற்றும் கைவினைக்கலைகள் துறைகளில் மட்டும் அமைப்பு சார்ந்தும், அமைப்பு சாராமலும் 1.11 கோடி பேருக்கு வேலை

**அட்டவணை - 1**

**இந்தியப் பொருளாதாரத்தில் ஜவுளித் துறையின் பங்கு**

| ஆண்டு | நாட்டின் பொருளாதாரத்தில் ஜவுளி மற்றும் ஒட்டுமொத்த உற்பத்தித் துறையின் பங்கு (சதவீதத்தில்) | | ஒட்டுமொத்த உற்பத்தியில் ஜவுளித் துறையின் பங்கு (சதவீதத்தில்) |
|---|---|---|---|
| | ஜவுளித்துறை | ஒட்டுமொத்த உற்பத்தித்துறை | |
| 2013–14 | 2.16 | 18.08 | 11.92 |
| 2014–15 | 2.33 | 17.14 | 13.6 |
| 2015–16 | 2.22 | 17.84 | 12.43 |
| 2016–17 | 2.36 | 18.21 | 12.65 |

*ஆதாரம்: தேசிய கணக்குகள் புள்ளி விவரம் 2015, 2016, 2017 - 2018.*

**அட்டவணை - 2**

**வேலைவாய்ப்பு**

| ஆண்டு | ஆண்டு வேலைவாய்ப்பு பெற்றவர்களின் எண்ணிக்கை | | ஒட்டுமொத்த உற்பத்தித் துறையின் வேலைவாய்ப்பில் ஜவுளித் துறை வேலைவாய்ப்பின் பங்கு (சதவீதத்தில்) |
|---|---|---|---|
| | ஜவுளி மற்றும் ஆயத்த ஆடைத்துறை | உற்பத்தித் துறை | |
| 2013–14 | 24,74,903 | 1,35,38,114 | 18.28 |
| 2014–15 | 25,26,610 | 1,38,81,386 | 18.20 |
| 2015–16 | 26,48,238 | 1,42,99,710 | 18.52 |
| 2016–17 | 26,94,280 | 1,49,09,052 | 18.07 |

*ஆதாரம்: தொழிற்சாலைகளுக்கான ஆண்டு கணக்கெடுப்பு*

| அட்டவணை - 3 | | | |
|---|---|---|---|
| கைவினைப் பொருள்கள் உள்ளிட்ட ஜவுளி மற்றும் ஆயத்த ஆடை ஏற்றுமதி (மில்லியன் அமெரிக்க டாலரில்) | | | |
| ஆண்டு மொத்தம் | ஜவுளி | ஆடைகள் | |
| 200910 | 13,812 | 10,722 | 24,533 |
| 201011 | 18,559 | 11,627 | 30,186 |
| 201112 | 22,353 | 13,731 | 36,084 |
| 201213 | 22,275 | 12,949 | 35,224 |
| 201314 | 24,914 | 14,990 | 39,904 |
| 201415 | 23,285 | 16,833 | 40,119 |
| 201516 | 22,322 | 16,966 | 39,288 |
| 201617 | 21,643 | 17,368 | 39,011 |
| 201718 | 22,516 | 16,705 | 39,221 |
| *ஆதாரம்: வணிக நுண்ணறிவு மற்றும் புள்ளியியல் தலைமை இயக்குநரகம்.* | | | |

வாய்ப்பு வழங்கப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

## கைவினைப் பொருள்கள் துறை


கைவினைப் பொருள்கள் உற்பத்தித் துறை அமைப்பு சாராததாகவும், பரந்து பட்டதாகவும் உள்ளது. நாடு முழுவதும் சுமார் 70 இலட்சம் கைவினைக் கலைஞர்கள் 32 வகையான கைவினைக் கலைகளை மேற்கொள்கின்றனர். இந்திய கைவினைப் பொருள்கள் உற்பத்தித் துறையை, அமைப்பு சார்ந்ததாகவும், தரப்படுத்தப்பட்டதாகவும் மாற்றவேண்டும் என்ற நோக்கத்துடன் மேற்கொள்ளப்பட்ட 'பச்சன்' என்ற திட்டப் பெயரிலான முன் முயற்சிகளின் மூலம் 22.85 இலட்சம் கைவினைக் கலைஞர்கள் அமைப்பு சார்ந்த தொழிலாளர்கள் என்ற நிலைக்கு முன்னேற்றப்பட்டிருக்கின்றனர். அது மட்டுமின்றி, 35 வகையான கலைகள் அழியும் நிலையிலான கலைகள் என அடையாளம் காணப்பட்டுள்ளன. 92 வகையான கலைகள் புவிசார் குறியீடு சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன.

தரை விரிப்புகளை தரப்படுத்தும் நோக்குடன் அவற்றுக்கு மதிப்பீடு வழங்கும் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. ஆனால் கைவினைப் பொருள்கள் அனைத்தும் கைகளால்தான் செய்யப் படுகின்றன. அதனால், கைவினைப் பொருள்களின் அழகு என்பது கைவினைக் கலைஞர்களின் கைத்திறமையில் தான் உள்ளது. ஒரே வகையான கைவினைப் பொருள்களை, ஒரே விதமான கச்சாப் பொருள்களைக் கொண்டு ஒரே கலைஞர் தயாரித்தால் கூட அவை ஒன்றுக்கொன்று மாறுபட்டுதான் இருக்கும். கைகளால் செய்யப்பட்ட பொருள்களின் உண்மைத் தன்மையை உறுதி செய்யும் நோக்குடன் கைவினைக் குறியீடு என்ற புதிய திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இந்தியாவின் தொலைதூரப் பகுதிகளில் உள்ள பழங்குடியின கைவினைக் கலைஞர்கள் உள்ளிட்ட உண்மையான கைவினைக் கலைஞர்களுக்கு நேரடி சந்தை வாய்ப்பை வழங்கும் நோக்குடன் புதிய இணையதளம் ஒன்று தொடங்கப்பட்டுள்ளது. பச்சன் திட்டத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள கைவினைக் கலைஞர்கள், தாங்கள் உற்பத்தி செய்துள்ள பொருள்களை இந்த இணையதளத்தில் பதிவு செய்து விற்பனை செய்யலாம். இதுவரை மொத்தம் 32 கைவினைக் கலைஞர்கள் இந்த இணையதளத்தில் பதிவு செய்து தங்களின் பொருள்களை சந்தைப்படுத்தி யுள்ளனர்.

## பருத்தி

ஜவுளி மற்றும் கைவினைப் பொருள்கள் உற்பத்தித்துறையில் மிக முக்கியமான மூலப்பொருள் பருத்தி ஆகும். பருத்தி விவசாயிகளின் நலன்களைப் பாதுகாக்கும் நோக்குடன், 2018 - 19ஆம் ஆண்டில் நடுத்தர இழை கொண்ட பருத்திக்கான





குறைந்தபட்ச ஆதரவு விலையை 28 விழுக்காடும், நீண்ட இழை கொண்ட பருத்திக்கான குறைந்தபட்ச ஆதரவு விலையை 26 விழுக்காடும் மத்திய அரசு உயர்த்தியுள்ளது. குறைந்தபட்ச ஆதரவு விலை உயர்த்தப்பட்டதன் பயன்கள் விவசாயிகளுக்குக் கிடைப்பதை உறுதிசெய்யும் நோக்குடன், இந்தியப் பருத்திக் கழகம் என்ற அமைப்பையும் மத்திய அரசு உருவாக்கியுள்ளது. விதைப் பருத்தியின் விலை குறைந்தபட்ச ஆதரவு விலையை எட்டும்போது, விவசாயிகள் உற்பத்தி செய்த ஒட்டுமொத்த பருத்தியையும், வேளாண் விளைபொருள் சந்தைக் குழுவின் சந்தைகள் மூலம் இந்தியப் பருத்திக்கழகம் கொள்முதல் செய்துகொள்ளும்.

இந்திய பருத்தி சங்கம் வெளியிட்டுள்ள புள்ளி விவரங்களின் அடிப்படையில் பார்த்தால், 2018ஆம் ஆண்டு அக்டோபர் ஒன்றாம் தேதி முதல் 2019ஆம் ஆண்டு செப்டம்பர் 30ஆம் தேதி வரையிலான ஓராண்டு காலத்தில் இந்தியாவின் பருத்தி ஏற்றுமதி 50 இலட்சம் பேல்களாக குறையும் என்று தெரியவந்துள்ளது. கடந்த ஆண்டில் இது 69 இலட்சம் பேல்களாக இருந்தது. இம்முறை பருத்தி சாகுபடி குறைந்ததால் இந்த நிலை ஏற்பட்டிருக்கிறது. குஜராத், கர்நாடகா, தெலங்கானா, மராட்டியம் ஆகிய மாநிலங்களில் போதிய மழை இன்மையின் காரணமாக பருத்தி விளைச்சல் கடந்த ஒன்பது ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு இந்த ஆண்டு குறையவுள்ளது. இதற்கு முன் கடந்த 2009ஆம் ஆண்டில்தான் பருத்தி விளைச்சல் மிகவும் குறைவாக இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

## ஜவுளித்துறை எதிர்கொள்ளும் சாவல்கள்

ஜவுளித்துறையின் வளர்ச்சி என்பது உள்நாட்டுச் சந்தையை மட்டுமின்றி, வெளிநாடுகளின் சந்தையையும் சார்ந்துள்ளது. ஜவுளி மற்றும் ஆயத்த ஆடை ஏற்றுமதி கடந்த நான்கு ஆண்டுகளாக 3,900  4,000 கோடி அமெரிக்க டாலர் என்ற அளவில் இருந்து வருகிறது. வணிகத்தகவல்களின் அடிப்படையில் 2018ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் டிசம்பர் மாதம் வரையிலான ஒன்பது மாதங்களில் ஜவுளித்துறை ஏற்றுமதி 2663 கோடி டாலர் என்ற அளவை எட்டியுள்ளது. இது 2017ஆம் ஆண்டில் இதே காலத்தில் எட்டப்பட்ட ஏற்றுமதி வருவாயை விட, இரண்டரை சதவீதம் அதிகமாகும். ஆனாலும், இந்தியாவின் ஜவுளித்துறை ஏற்றுமதித் திறனுடன் ஒப்பிடும்போது இது மிகவும் குறைவு ஆகும். இதற்கு பல காரணங்கள் இருக்கலாம்.

இந்தியாவில் ஜவுளித்துறை பிரிந்து கிடப்பதாலும், அதிக அளவில் சிறு, குறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் செயல்படுவதாலும், ஜவுளித்துறைக்கான உற்பத்தி செலவு அதிகமாக உள்ளது. ஜவுளித்துறையைப் பொருத்தவரை, இந்தியா எதிர்கொள்ளும் முக்கியமான சவால்களில் ஒன்று, பாதகமான வரி விதிப்புமுறை ஆகும். வங்கதேசம், இலங்கை, துருக்கி, பாகிஸ்தான் ஆகிய நாடுகள் வரி இல்லாமல் வெளிநாட்டுச் சந்தைகளுக்கு ஜவுளியை ஏற்றுமதி செய்யும் நிலையில், இந்தியாவில் 9.6 சதவீதம் வரை வரி விதிக்கப்படுவது இந்திய ஜவுளித்துறையை பாதிக்கிறது. இந்தச் சவால்களை எதிர்கொள்ளும் வகையில், ஆயத்த ஆடை நிறுவனங்களுக்கான சிறப்புத்திட்டம் ஒன்று அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, மாநில அளவிலான வரிகளில் தள்ளுபடி வழங்கப்படுகிறது. அதுமட்டுமின்றி, தொழிலாளர் சட்ட சீர்திருத்தங்கள், வருமான வரித்துறை சட்டத்தின் 80 JJAA பிரிவின் சில அம்சங்கள் தளர்த்தப்படுவது உள்ளிட்ட சலுகைகளும் வழங்கப்படுகின்றன. நூலிழைகள், யாண், ஃபேப்ரிக் போன்ற ஜவுளித்துறை மதிப்பு வளையத்தில் இடம்பெற்றுள்ள பொருள்கள் வலுப்படுத்தப்படுவதுடன், போட்டிகளை சமாளிப்பதற்கான உதவிகளும் ஏற்றுமதியாளர்களுக்கு வழங்கப்படுகின்றன. ஜவுளிப் பொருட்கள் ஏற்றுமதிக்கு முன்பும் பின்பும் பெறப்படும் கடனுக்கான வட்டி மானியத்தின் அளவும் மூன்று சதவீதத்திலிருந்து ஆறு சதவீதமாக உயர்த்தப்பட்டிருக்கிறது.

## ஜவுளித் துறையின் எதிர்காலம்

ஜவுளித் துறைக்கு ஏராளமான சவால்கள் இருந்தாலும், அதன் எதிர்காலம் ஒளிமயமாகவே உள்ளது. ஜவுளிப் பொருள்களின் ஏற்றுமதி தேவை அதிகரிக்கும் வாய்ப்புள்ளது. அதேநேரத்தில் உள்ளூர் சந்தையும் விரிவடையக் கூடும். மக்களின் வருமானம் அதிகரித்து வரும் நிலையில், தரப் பெயர் கொண்ட, விலை அதிகம் உள்ள ஆடைகளை வாங்கும் திறன் அதிகரித்து வருகிறது. அதுமட்டுமின்றி, உலக அளவிலான நிறுவனங்கள் இந்தியாவில் தங்களது கிளைகளை அமைத்து வருகின்றன. அவை உள்ளூர் அளவில் ஆடைகளை கொள்முதல் செய்யவேண்டியது கட்டாயம் என்பதால், அதுவும் ஜவுளித் துறையினருக்கு நல்ல செய்தியாகும். எனினும், ஜவுளித் துறைக்கு ஏராளமான சவால்கள் உள்ளன. அவற்றில் மிகவும் முக்கியமானது ஏற்றுமதி போட்டித் தன்மையை எதிர்கொள்வது ஆகும். ●

**– சிஷிர் சின்ஹா,** மூத்த பொருளாதார பத்திரிகையாளர்.

# காதியின் பயணம்: காந்தியின் கைத்தறித் துணியில் இருந்து பேஷனின் குறியீடு வரை

- வி.கே.சக்சேனா

மிகவும் கஷ்டப்பட்டு இந்தியா சுதந்திரம் அடைந்து 70 ஆண்டுகளுக்கு மேல் ஆனபிறகும் கூட, காதி என்னும் வார்த்தையானது இன்னமும் உலகில் உள்ள மக்களுக்கு உந்துதல் தரக்கூடிய ஆச்சரியமூட்டும் வார்த்தையாக விளங்கு கிறது. தேசத்தின் அடையாள ஆடையாக விளங்கும் இந்தக் காதி பேஷனை நோக்கிய வழியில் ஒரு பொருளாதார உருமாற்றத்துக்கான கருவியாக உரு வாகியுள்ளது. இதுதான் கடந்த காலத் தில் காதியின் வளர்ச்சிக்கான ஒரு அறிகுறியாக உள்ளது.

காதி என்பது சுயசார்ப்புக்கான ஒரு கருவியாகவோ அல்லது நாட்டுப் பற்றுக்கான ஒரு குறியீடாகவோ மட்டும் அல்லாமல், அதையும் தாண்டி தேசத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு முக்கிய பங்கினை ஆற்றவும் முடியும் என்று காந்திஜி நம்பினார். 2017ஆம் ஆண்டில் குறைவான இலாபம் உடைய காதித் தொழில் மூலம் ரூ.50,000 கோடிக்கு விற்பனை நடந்துள்ளது. சிறு தொழில் பிரிவின் கீழும் சமுதாய தொழில் முனைவோர்கள் மூலமும் கிராமங்களில் தயாரிக்கப்படும் பொருள்களுக்கும் அதிக அளவிலான தேவை ஏற்பட்டுள்ளது. சமுதாய தொழில் முனைவோர்களில் பெரும்பாலானவர்கள் பெண்கள் ஆவர். கடந்த நிதிஆண்டில் கிராமத்தொழில் உற்பத்தி அல்லது கிராமோத்யோக் உற்பத்தியும் அதிகரித்துள்ளது. கடந்த ஆண்டுகளில் காதி உற்பத்திப் பொருள் களின் உற்பத்தி மற்றும் விற்பனையில் ஆச்சரியப்படத்தக்க அளவில் வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. இந்த உண்மையானது காதி என்பது பல்திறமை வாய்ந்த எந்தக் காலத்திற்கும் பொருந்தும் துணியாக உள்ளதை எடுத்துக்காட்டியுள்ளது.

துறை சார்ந்த விற்பனை மையங்கள் மூலமான சராசரி காதி விற்பனை யானது குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்துள்ளது. 2015ஆம் ஆண்டு முதல் பிப்ரவரி 2018 வரையிலான காலகட்டத்தில் 30 ஆயிரத்திற்கும் அதிகமான நூற்பு ராட்டைகள் (சர்க்கா) விநியோகிக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் 14 இலட்சம் வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. காதியைப் பொறுத்த வரையில் பல சாதனைகளும் மைல்கற்களும் உள்ளன. அவற்றில் சில கீழே தரப்படுகின்றன.



- சுற்றுச்சூழல் தினம் முதல் யோகா தினம் வரை காதிக்கு முக்கியத்துவம் அளித்தல்
- தில்லியில் உள்ள இந்திராகாந்தி சர்வதேச விமான நிலையத்தில் உலகிலேயே மிகப்பெரிய மரத்திலான நூற்பு ராட்டை நிறுவப்பட்டிருப்பது சமர்மதி ஆற்றின் முகப்பு, அகம தாபாத், பீகாரில் கிழக்கு சம்ப்ரானில் உள்ள மோத்தி ஹரி, புதுதில்லியில் கன்னாட் பிளேஸ் ஆகிய இடங்களில் நிறுவப்பட்டுள்ள ஸ்டீல் நூற்பு ராட்டைகள் வரை எல்லாமே நினைவுச் சின்னங்களாக உள்ளன.
- தென்னாப்பிரிக்காவில் காதி கண்காட்சி
- பெண் தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகளிடம் தேனீ வளர்ப்பு பெட்டிகள் விநியோகம்
- பஞ்சாப் முழுவதும் ராட்டை பயன் பாட்டை அதிகரித்ததில் இருந்து வார ணாசி அருகில் உள்ள செயலற்றுப் போன சேவாபுரி காந்தி ஆசிரமத்தை மீண்டும் செயல்பட வைத்தது வரை பல நடவடிக்கைகள்.
- ஜுன் 2018ல் தென்னாப்பிரிக்காவில் பெண்ட் ரிட்சில் இருந்து பீட்டர்மார்ட்ஸ் பர்க் வரை சென்ற ரயிலில் காதி திரைச்சீலைகள் அமைக்கப்பட்டது

ஜவுளி வரைபடத்தில் காதிக்கான இடத்தை மறுநிலையாக்கம் செய்வதற்காக


நிறுவன பிராண்டுகள் மற்றும் பொதுத் துறை நிறுவனங்களை காதிக்கான மிகப்பெரும் தொடர் தேவைகளை உருவாக்குவதில் ஈடுபடுத்த முயற்சிகள் எடுக்கப்பட்டன. காதி ஆடைகளில் மிகச் சிறந்த வடிவமைப்பு மேம்பாட்டை உருவாக்கவும் பல்வேறு இடங்களில் உள்ள பலதரப்பட்ட காதி நிறுவனங்களில் பயிற்சி அளிக்கவும் தேசிய பேஷன் டெக்னாலஜி இன்ஸ்டியூட்டுடன் (NIFT) புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று கையெழுத்து இடப்பட்டுள்ளது. அதோடு மட்டுமல்லாமல் மும்பையில் உள்ள நெசவாளர் பயிற்சி மையத்தில் (WTC) சில்லறை சங்கிலி விற்பனைத் தொடரின் சி.இ.ஓ.க்களுக்கும், வடிவமைப் பாளர்களுக்கும் இடையில் ஒரு பரஸ்பர கருத்துப் பரிமாற்ற நிகழ்ச்சி நடத்தப்பட்டது. இந்தப் பரிமாற்ற நிகழ்ச்சியின் நோக்கம் என்னவென்றால் மிகப்பெரும் மால்கள் மற்றும் சில்லறை விற்பனை நிலையங்களில் காதிப்பொருள்கள் சில்லறை விற்பனைக்குக் கிடைக்கும் என்ற நிலையை உருவாக்குவதே ஆகும். மற்றொரு புதிய முயற்சியாக "காதி மித்ரா" என்ற திட்டம் செயல்பாட்டுக்கு வரவிருக்கிறது. தொடக்கத்தில் மிகக் குறைவான மூலதன முதலீட்டுடன் இல்லத் தரசிகள் இனி காதிப்பொருள்களை விற்பனை செய்ய முடியும். அதே போன்று வெளிநாடுகளில் காதி விற்பனை மையங்களைத் தொடங்கவும் திட்டமிடப் பட்டுள்ளது. சர்வதேச சந்தைகளில் உள்நாட்டில் கையால் நூற்ற துணியைக் கொண்டு தயாரிக்கப்படும் விற்பனைப் பொருள்கள் கிடைக்கும் என்ற நிலையை உருவாக்குவதே இந்த மையங்களைத் திறப்பதன் நோக்கம் ஆகும். துபாய், சிக்காகோ, மொரீஷியஸ் மற்றும் தென்னாப்பிரிக்காவில் இத்தகைய விற்பனை மையங்களைத் திறக்க ஆர்வம் தெரிவிக்கப்பட்டுள்ளது. உரிமை பெற்ற விற்பனையாளர் (Franchise) என்ற முறையில் இந்த இடங்களில் உள்ளவர்கள் காதி விற்பனை மையங்களைத் திறக்க ஆர்வமாக உள்ளனர்.


காதியின் தனிச்சிறப்புடைய விற்பனை மேம்பாட்டு அம்சம் (USP) அதிகரித்து வருகிறது. அதனால் திரை உலகினர் தங்களது உடைமையாகவும், அழகுடையதாகவும் காதிப் பொருள்களைக் காட்டுவதைத் தவிர்க்க முடிவதில்லை. அண்மையில் பெரும் வெற்றி கண்ட "மணிகர்ணிகா" ஒரு புராண வாழ்க்கை வரலாற்றுப் படமாகும். இதில் கதாநாயகி நாட்டின் பாரம்பரியம் மிக்க துணியான காதி மீதான அரசியின் கொள்ளமுடியாத காலத்தில் இருந்தே சுதந்திரத்திற்கான இந்தியாவின் குரலோடு காதி அடையாளப்படுத்தப்பட்டு வந்துள்ளது. 1926ஆம் ஆண்டில் காந்திஜி காதியை சுயராஜ்யத்தின் குறியீடாக உயர்த்திப் பிடித்தார் என்பது நம் அனைவருக்கும் தெரியும். இதன் மூலம் அவர் இந்திய சுதந்திரம் என்னும் துணிக்கான இறுதி இழையை நூற்றார். காந்திஜிக்கு ராட்டை மீது பெருவிருப்பம் ஏற்படுவதற்கு 70 ஆண்டுகளுக்கு முன்பே வாரணாசியில் பிறந்த மணிகர்ணிகா அல்லது மனு என்றழைக்கப்பட்ட பெண்ணுக்கு நெசவு மீது அதிக ஆர்வம் இருந்தது என்று சிலருக்குத் தெரியும். வேதங்களைப் படித்து நிபுணத்துவம் பெற்றதோடு, வாள் பயிற்சியில் தேர்ச்சி பெற்று,



விருப்பதை வெளிப்படுத்துவார். இந்தத் தனித்துவமிக்க விசேஷமான துணியை மேம்படுத்த இந்தப் படத்தின் முக்கியமான கதாபாத்திரங்கள் அனைவரும் அணியும் ஆடைகளை காதி கிராமத் தொழில் ஆணையம் (KVIC) ஸ்பான்சர் செய்துள்ளது. நாம் நினைவுபடுத்திக் ஜான்சியின் அரசியாவதற்கு முன்பே மணிகர்ணிகா நெசவுத் தொழிலைக் கற்றுக்கொண்டார்.

காதி உற்பத்தி நிலையங்களுக்கு பருத்தி விநியோகத்தை அதிகரிக்கும் முயற்சியாக, ஆறு பருத்தி சில்வர் உற்





பத்தி தொழிற்சாலைகளின் தரநிலை உயர்த்தப்பட்டுள்ளது. இந்த ஆலைகளின் உற்பத்தித் திறன் 40 சதவிகிதம் அதிகரிக்கப்பட்டுள்ளது. தற்போது ஓராண்டுக்கு நான்கு மில்லியன் கிலோ என்ற உற்பத்தித் திறன் ஓராண்டுக்கு 5.6 மில்லியன் கிலோவாக உயர்த்தப்பட்டுள்ளது. இதில் பெரும்பாலான ஆலைகள் முப்பது ஆண்டுகளுக்கும் மேலாகப் பழமை வாய்ந்தவை. விநியோகம் சீராகவும் சிறப்பாகவும் இருக்க தொழில்நுட்பத்தை போற்ற வேண்டியது அவசியமாகும்.

காதிக் கலைஞர்களின் கூலியை ஓரளவு சுமாரான நிலைக்கு உயர்த்த வேண்டியதன் அவசியம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. காதித் தொழிலானது அந்தக் கலைஞர்களுக்கு நீடித்த வாழ்வாதாரத்தைத் தரும் வகையில் ஹேங்க் (ஒரு சுற்று அல்லது ஸ்கெய்ன் இழை) ஒன்றுக்கு தற்போது தருகின்ற கூலி ரூ.5.50ல் இருந்து ரூ.7 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. செயல் இழந்து இருந்த 143 காதி உற்பத்திப் பிரிவுகள் புதுப்பிக்கப்பட்டுள்ளன. 124 அல்லது அதற்கும் அதிகமான உற்பத்திப்பிரிவுகள் உற்பத்தியைத் தொடங்குவதில் ஈடுபட்டுள்ளன. அதே போன்று 2015-16ஆம் ஆண்டில் 89 புதிய காதி உற்பத்தி நிலையங்களும் 2016-17ஆம் ஆண்டில் 63 புதிய காதி உற்பத்தி நிலையங்களும் பதிவு செய்யப்பட்டுள்ளன. இந்த உற்பத்தி நிலையங்கள் அனைத்தும் இப்போது உற்பத்தியைத் தொடங்கியுள்ளன.

தனிநபர்கள், பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் பெரு நிறுவனங்கள் ஆகியவை சுய சார்புக்கான காந்தியின் கருவியான ராட்டையை நன்கொடையாக வழங்குமாறு வலியுறுத்தப்படுகின்றன. அதிலும் குறிப்பாக பெண்களுக்கு ராட்டைகளை வழங்குமாறு இந்தப் பெரு நிறுவனங்களிடம் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. பொதுத்துறை நிறுவனங்கள் தங்களது சமூகப் பொறுப்புடைமைக்கான நிதியை காதிக்கலைஞர்கள் மற்றும் காதி நிறுவனங்களை மேம்படுத்தும் அதிகாரம் அளிக்கும் பூர்வாங்க நடவடிக்கைகளுக்கு அளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளன. சேவாபுரி ஆசிரமத்தைப் புதுப்பிப்பதற்கான பணியில் ஆர்.இ.சி (ஊரக மின்மயமாக்கல் கழகம்) ஈடுபட்டுள்ளது. கடந்த ஆண்டு, ஓ.என்.ஜி.சி (ONGC), ஐ.டி.பி.ஓ (ITPO), ஆதித்யா பிர்லா குரூப், ஜே.கே.சிமெண்ட், ஜி.எம்.ஆர் (GMR), என்.சி.சி.எல் (NCCL) முதலான பல்வேறு கம்பெனிகளிடம் இருந்து இந்த வகையில் ரூ.7.9 கோடி பெறப்பட்டுள்ளது. அண்மையில் ஐ.எம்.சி (IMC) வர்த்தக அமைப்பு ரூ 20 இலட்சம் நன்கொடை அளித்துள்ளது. காதி நடவடிக்கைகளுக்கு பெரும் அளவில் சமூகப் பொறுப்புடைமைக்கான நிதியை வழங்குமாறு வலியுறுத்தி இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் (IOC), ஹெச்.பி.சி.எல் (HPCL) முதலான நிறுவனங்களிடம் பேச்சுவார்த்தை மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவை எல்லாம் சேர்ந்து எதிர்காலத்தில் நாடு முழுவதும் காதி பற்றிய நடவடிக்கைகளின் பரிமாணத்தையே நிச்சயமாக மாற்றிவிடும்.

காதி பிராண்டை (Brand) மக்களிடம் பிரபலமாக்குவதற்கு, தில்லியில் இந்திரா காந்தி பன்னாட்டு விமான நிலையத்திலும் கன்னாட் பிளேசிலும் மிகப் பெரிய கை ராட்டைகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. புதுதில்லியில் உள்ள கன்னாட் பிளேசில் ராட்டை அருங்காட்சியகமும் காதி விற்பனை சந்தையும் தொடங்கப்பட்டுள்ளன.

தங்களது சுதந்திரத்தை இழந்து நிற்கின்ற பொதுமக்களுக்கு நூல் நூற்கும் சக்கரம் என்பது நம்பிக்கையின் அடையாளமாக உள்ளது என்ற மகாத்மா காந்தியின் வார்த்தைகளை நாம் மறந்து விடக்கூடாது. கிராமத்து மக்கள் விவசாயத்துடன் கௌரவமாக வாழ ராட்டையும் துணைபுரிந்துள்ளது. காலமாற்றத்தை அர்த்தப்படுத்தும் குறியீடாகவே எந்த ஒரு சக்கரமும் உள்ளது. மக்களின் அதிர்ஷ்டத்தை இந்தச் சக்கரம் சுற்றுகிறது. மக்களுக்கு இடையில் அல்லது வரலாற்றுக் காலகட்டங்களுக்கு இடையில் வித்தியாசம் இல்லாமல் நீதியின் பரிபாலனத்தை இது குறிக்கிறது. ஒரு சக்கரம் என்பது எப்போதும் ஒரு முழுமையாக்கும் கருவியாகவே பார்க்கப்படுகிறது. நமது கடந்த காலம், நிகழ்காலம் மற்றும் எதிர்காலத்துக்கான ஒரு அடையாளமாகவும் சக்கரம் உள்ளது. பேரரசர் அசோகர் சக்கரத்தை "தர்ம சக்கரமாக" பயன்படுத்தும் போதும் தனது பேரரசு முழுவதும் இந்தச் சக்கரத்தை பிரகடனமாக நிர்மாணிக்கும் போதும் அவரது மனதில் சமூகநீதியை உருவாக்குதல், யாரையும் புறக்கணிக்காது இருத்தல் மற்றும் சமநிலை இன்மைகளைக் குறைத்தல் ஆகியனவையே ஒரே ஒரு நோக்கமாக இருந்தது. இந்திய சமுதாயத்தில் அவர் நிர்மாணித்த இந்தக் குறியீட்டு அடையாளம், காலம் காலமான பாரம்பரியத்தின் சொத்தாக உள்ளது. தர்மத்தைப் பிரச்சாரம் செய்யும் கருவியாக ராட்டை என்பது நமது சமூக மதிப்புகளைக் கொண்ட அமைப்பு என்ற அச்சின் மீது சுற்றுகிறது. ●

- **வி.கே.சக்சேனா**, தலைவர், காதி, கிராமப்புறத் தொழில்கள் ஆணையம், புதுதில்லி.


# கோயில் கட்டடக்கலையில் நாயக்கர்களின் பங்களிப்பு

- சொ. சாந்தலிங்கம்

**தொ**டக்க காலத்தில் கல்லால் கட்டப் பட்ட கோயில்கள் ஒரு கருவறை அர்த்தமண்டபம் ஆகியவற்றுடன் மட்டுமே அமைந்திருந்தன. சிலகாலங்களுக்குப்பின் மகாமண்டபம் முன்மண்டபம் திருச்சுற்று கோபுரம் எனக் கோவிலின் அங்கங்கள் வளர்ச்சி பெற்றன. இவ்வாறு கோயிலின் அங்கங்களில் ஏற்பட்ட வளர்ச்சி யையும் கலைப்பாணியையும் அரச மரபு வரிசையிலும் கால வரிசையிலும் (நூற்றாண்டு வாரியாக) வகைப் படுத்தி முந்தைய ஆய்வாளர்கள் ஆராய்ந்துள்ளனர். அந்த ஆய்வுகளின் அடிப்படையில் கோயிற்கட்டடக் கலையில் நாயக்கர் காலத்தில் ஏற்பட்ட மாற்றங்களையும் வளர்ச்சி நிலையின் தனித்தன்மையையும் ஆராய்கிறது இக்கட்டுரை.

### கோபுரம்

கோபுரம் என்பது கோயிலில் நுழைவாயிலின் மேல் கட்டப்பட்டுள்ள கட்டுமானத்தைக் (Tower - Super Structure on the entrance Gate) குறிக்கும். பல்லவர்கள் காலக் கட்டிடக் கோயில்களில் இது மிகவும் சிறிதாக அமைந்திருக்கும். விமானத்தைக் காட்டிலும் உயரம் குறைவானதாக இருக்கும். ஓர் ஆள் எளிதில் நுழைந்து செல்லத்தக்க அளவிலான அகல உயரத்துடனும் மேலே சிறிய சாலை வடிவுடனும் அமைந்திருக்கும். எனவே இக்காலத்தில் இதற்கு ‘துவாரசாலை’ என்ற பெயர் வழங்கப்பட்டிருந்தது. எடுத்துக்காட்டாக மகாபலிபுரம் கடற்கரைக் கோயில் காஞ்சி கைலாசநாதர் கோயில் வாயில்களைக் கூறலாம்.



முற்காலச் சோழர் காலத்திலும் பாண்டியர் காலத்திலும் இம்மரபு நீடித்தது. முதன் முதலாக இராசராச சோழன் தஞ்சைப் பெரிய கோயிலில் ஒரே திசையில் இரண்டு கோபுரங்கள் எடுத்து ஒரு மாற்றத்தைக் காட்டினான். அவனுக்குப்பின் வந்த சோழர்களில் இரண்டாம் குலோத்துங்கன் போன்றோர் நான்கு திசைகளிலும் கோபுரம் எடுக்கும் பாணியைத் தொடங்கினர் (எ.டு. சிதம்பரம்) முதன் முதலாக மூன்றாம் குலோத்துங்கனே விமானத்தைக் காட்டிலும் உயரமான கோபுரத்தைக் கட்டினான். (எடு. திருபுவனம்).

விசயநகர நாயக்கர்கள் காலத்தைக் ‘கோபுரக் காலம்’ என்றே அழைப்பர். ஏனெனில் இக்காலத்தில்தான் வான ளாவிய கோபுரங்கள் எழும்பத் தொடங் கின. கிருஷ்ண தேவராயர் காலத்தில் சிதம்பரம் காஞ்சிபுரம் திரு வண் ணாமலை ஸ்ரீரங்கம் போன்ற இடங் களில் உயரமான கோபுரங்கள் நான்கு திசைகளிலும் கட்டப்பட்டன. பெரும் பாலான இடங்களில் அவை ராயர் கோபுரம் என்றும் வழங்கப்படுகின்றன.

விசயநகர நாயக்கர் காலக் கோயில்களின் சிறப்பு அம்சங்களாகச் சிலவற்றைக் கூறலாம். கோபுரங்களின் அடித்தளம் கல்லாலும் மேற்கட்டுமானம் செங்கல்லாலும் கட்டப்பட்டன. சுதைச் சிற்பங்கள் எண்ணற்றவை இடம் பெற்றன. அச்சிற்பங்களில் இராமாயண பாகவதக் கதை மாந்தர்கள் கடவுளர்களின் அவதாரங்கள் பல்வேறு இறை வடிவங்கள் நாட்டுப்புற மாந்தர்களின் உருவங்கள் பாலுணர்வுச் சிற்பங்கள் (Erotic Sculptures) ஆகியவை இடம் பெற்றன.

மேலும் இக்காலத்தில்தான் கோபுரங்களின் இருபுறமும் உள்ள நிலைக் கால்களில் கொடிப் பெண்டிர் உருவங்கள் இடம் பெற்றன. இவர்கள் கங்கை யமுனை என நதியின் பெயர்களைப் பெற்றனர். நதிகளை மனித வடிவில் வடிப்பது வடநாட்டில் குப்தர்களால் தொடங்கி வைக்கப்பட்டுப் பின் வந்த சாளுக்கியர் போசளரால் பின்பற்றப்பட்டன. என்றாலும் தமிழகத்தில் இம்மரபை முதன் முதல் அறிமுகப்படுத்தியவர்கள் விசயநகர வேந்தர்கள். பின்னர் அவற்றைப்

பெருவழக்காய் மாற்றியவர்கள் நாயக்க மன்னர்கள். நாயக்கர்களால் கட்டப்பட்ட அனைத்துக் கோபுரங்களிலும் இம் மரபைக் காணலாம். இரண்டு அழ கான இளம் பெண்கள் நிலைத் தூண்களின் இருபுறமும் மகரங்களின் மீது நிற்க அவர்களின் இடைப்பகுதி யிலிருந்து கொடிகள் வளைந்து செல்லும் இக்கொடிகள் மேலே வளையம் வளையமாகச் செல்வதும் ஒவ்வொரு வளை யத்தின் உள்ளும் இறை உருவங்களைச் செதுக்குதலும் மரபு.

கோபுர நிலைவாசலின் மேல் கூரையில் (Ceiling) எண்திசைக் காவலர்களின் உருவத்தைச் செதுக்குதலும் நாயக்கர் மரபில் ஏற்பட்ட வளர்ச்சியாகும். மேலும் கோபுரங்களைக் கட்டிய மன்னர்கள் தலைவர்கள் அவர்களது குடும் பத்தினரின் உருவங்களை (Portraits) கோபுரங்களிலேயே வணங்கும் நிலையில் அமைப்பதும் இக்காலத்தில் எழுந்த வளர்ச்சி எனலாம். எடுத்துக்காட்டாகத் தில்லைக் கோபுரத்தில் அமைந்துள்ள கிருஷ்ண தேவராயரின் திருவுருவைக் குறிப்பிடலாம்.

### பெரும் மண்டபங்கள்

தொடக்க காலக் கோயில்களில் கரு வறைக்கு முன்பாகவே அர்த்தமண்டபம் மகாமண்டபம் முன்மண்டபம் என்பவை அமைந்திருந்தன. ஆனால் பிற்காலத்தில் வழிபாட்டிற்கெனவும் திருவிழாக் காலங்களில் வரும் மக்கள் கூட்டத்தின் காரணமாக அவர்கள் கூடிநிற்கவும், தங்கவும் ஏதுவான பெருமண்டபங்கள் தேவைப்பட்டன. எனவே நூற்றுக்கால் மண்டபங்கள், ஆயிரங்கால் மண்டபங்கள், கல்யாண மண்டபங்கள் போன்றவை உருவாக்கப்பட்டன.

முதன் முதலாக நூற்றுக்கால் மண்டபத்தைத் திருவதிகையில் நரலோக வீரனே கட்டுவித்தான் என்பர். ஆயிரங்கால் மண்டபங்கள் சிதம்பரம், திருவரங்கம், மதுரை, குடுமியான்மலை போன்ற ஊர்களில் நாயக்க மன்னர்களால் உரு வாக் கப்பட்டன.

இத்தகைய பெரும் மண்டபங்களை உருவாக்குவதில் விசயநகர வேந்தர்களும்; மதுரை, தஞ்சை, செஞ்சி நாயக்க மன்னர்களும் பெரும் பங்காற்றினர். இம்மண்டபங்கள் கட்டுவதற்கும், திருச்சுற்றுகளில் நடைகள் அமைப்பதற்கும் பெரும் பெரும் கற்களைத் தூண்களாகப் பயன்படுத்தினர். அந்தத் தூண்கள் யாவும் ஒற்றைக்கல் தூண்களாகவும் அவற்றின் முன்பகுதியில் திருஉருவச் சிற்பம் அல்லது யாளிகளின் உருவங்கள் இடம் பெறும் வகையிலும் அமைத்தனர்.



இது நாயக்க மரபினருக்கே உரிய கலைப்பாணி எனலாம்.

திருவுருவங்களில் அரசர்கள் வணங்கும் நிலையிலோ அல்லது இராமாயண மகாபாரதக் கதை மாந்தர்களோ ரதி மன்மதன் ஆகியோரின் உருவங்களோ அமைக்கப்படுவதுண்டு. எடுத்துக்காட்டாக மதுரை மீனாட்சி அம்மன் கோயில் கிளிக்கூண்டு மண்டபம், திருவரங்கம் தாரமங்கலம் தாடிக்கொம்பு, பேரூர் மதுரை புதுமண்டபம் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

மண்டபங்கள் அல்லது திருச் சுற்றுகளில் இருபுறமும் சீரான இடைவெளிகளில் தூண்களை நிறுத்தி (Colondaes) அவற்றின் மேல்மட்ட நீட்சிகள் ஒன்றையொன்று தொடுவதுபோல அமைத்து அழகான திருச்சுற்று நடைகள் (Corridors) அமைப்பதும் இக்கால மரபாகும்.

உதாரணம்: இராமேஸ்வரம். இத் தகைய தூண்களின் முன்பகுதியில் செதுக்கப்படும் சிற்பங்களில் யாணையின் மீது யாளி நிற்பதாகவும் இரண்டின் துதிக்கைகளும் ஒன்றோடு ஒன்று இணைந்து பின்னிக் கொள்ளும் வகை யிலும் அமைக்கப்பட்டுள்ளன. இந்த யாளிகளின் பிளந்த வாய்களுக்குள்ளே ஒரு பந்து போன்ற உருண்டைக்கல் இருப் பது போலச் செதுக்கி அதை உள்ளே உருட்டுவதற்கு ஏற்ப அமைப்பதும் நாயக்கர் காலக் கற்சிற்பிகளின் கை வண்ணமே எனலாம். இத்தகைய தூண் களையும் யாளிவாய்ப் பந்துகளையும் தாரமங்கலம் ஆவுடையார் கோயில் உத்திரகோசமங்கை சங்கரன்கோயில் ஆகிய இடங்களில் காணலாம்.

மண்டபங்களின் முதல்வரிசைத் தூண்களில் குதிரை வீரர்கள் பாய்ந்து செல்லும் வகையிலும் எதிரி வீரர்கள் வீழ்ந்து கிடப்பது போன்ற போர்க்காட்சி வடிவங்களையும் காணலாம். எடுத்துக்காட்டு: திருவரங்கம் கோயில், மதுரைப் புது மண்டபம்.

மண்டப விதானங்களில் (Ceiling) நடுவில் மலர்ந்த தாமரையும் அவற்றின்

மையப்பகுதியைக் கிளிகள் கொத்துவது போன்றும் அமைத்துள்ளனர். இதற்கு சற்று தள்ளி பன்னிரண்டு இராசிகளையும் செதுக்கியுள்ளனர். இப்பாணியைக் காஞ்சிபுரம் வரதராசர் கோயிலில் காணலாம். இங்குள்ள மலர்ந்த தாமரையை சூரியனாக உருவகித்து, ஒவ்வொரு மாதத்திலும் சூரியன் எந்த ராசியைப் பார்க்கிறான் என்பதாக அமைத்துள்ளனர். மேலும் மண்டபத் தூண்களின் போதிகைக் கற்களிலிருந்து தொங்கும்படியான கல்வளையங்கள் செய்வதும் நாயக்கர் கால நுட்பமாகும். இது போன்ற கல்வளையங்களை காஞ்சி வரதராசர் கோயில் மண்டபத்திலும் திருச்சியிலுள்ள மலைக்கோட்டை தாயுமானவர் சுவாமி கோயிலிலும் காணமுடியும்.

### தூண்கள் அமைப்பு முறையில் மாறுபாடு

பல்லவர் காலக் குடைவரைகளில் இருகால்களை ஊன்றிக் குத்துக்காலிட்டு அமர்ந்த சிம்மங்களின் தலைகள் உருண்டைத் தூண்களைத் தாங்குவதாக அமைத்துள்ளனர். பின்னர் சாதாரணமாக இரண்டு செவ்வகப் பகுதிக்கு இடையே நான்கு பட்டைகளைக் கொண்ட கற்றூண்கள் இடம் பெற்றன. பாண்டியர் குடைவரையிலும் இப்பாணி பின்பற்றப்பட்டது. இந்தச் சதுரப் பகுதிகளில் தொடக்கத்தில் விரிந்த தாமரை இதழ்களைச் செதுக்குவது வழக்கமாக இருந்தது. இதுவே சோழர் காலத்தில் பலவிதமான கொடிகள் (Creepers) பின்னிப்பிணைந்தது போலவும் செதுக்கப்பட்டன. ஆனால் நாயக்கர் காலத்தில் தூண்களின் வேலைப்பாட்டில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டன.




தூண்களின் அடிப்பாகத்தில் நாக பந்தம் என்னும் அமைப்பு பெரிதும் வளர்ச்சி பெற்றது இந்நாயக்கர் காலத்தில்தான். பிற்காலச் சோழர் கோயில் தூண்களிலேயே நாகபந்தம் அமைப்பு சிறிய அளவில் இடம் பெற்றது. எனினும் பெரிய அளவில் வளர்ச்சி பெற்று ஒரு பாம்பின் படம் போல விரிந்து அமைந்தது நாயக்கர் காலத்தில்தான். அதோடு தூண்களின் சதுரப்பகுதிகளில் கொடிகளின் உருவங்கள் மட்டுமே இடம் பெற்றதற்கு மாறாக பல்வேறு சிற்றுருவச் சிற்பங்கள் (Miniature reliefs) இடம் பெற்றதும் உண்டு. இச்சிற்பங்களில் இராமாயணப் போர்க்காட்சிகள், வாலி சுக்ரீவன் யுத்தம், மராமரம் எரித்தது, வாலிவதம், தசாவதாரச் சிற்பங்கள் ஆகியவற்றையும், சைவத் திருவுருவங்களையும் அமைத்தனர். இரண்டு சதுரப் பகுதிகளுக்கும் இடைப்பட்ட பகுதிகளில் எண் பட்டை பதினாறுபட்டை என்ற அமைப்புகளும் அவற்றை ஒன்றாகக் கட்டுவது போன்ற பட்டைகளும் அமைக்கப்பட்டன.

இம்மரபில் போதிகைகளின் வளர்ச்சியில் பெரிதும் மாற்றம் ஏற்பட்டது. பல்லவர் பாண்டியர் காலக் குடைவரைகளில் தரங்க போதிகை என்னும் அலைவரி இடம் பெற்றிருந்தது. அதுவே பிற்காலச் சோழர் பாண்டியர் காலங்களில் புஷ்ப போதிகை என மாற்றம் பெற்றது. இந்தப் புஷ்ப போதிகை என்பது தாமரை மொட்டு போல விரியாமல் இருப்பது. இதுவே நாயக்கர் காலத்தில் நன்கு வளைந்து நீண்டு வாழைப்பூ போன்ற அமைப்புடன் இடம் பெற்றது. இவ்வாழைப்பூ அமைப்பும் அது ஒட்டியுள்ள வளைந்த கல்பகுதியும் மையத்தூணிலிருந்து நன்கு நீண்டு வளைந்தது நாயக்கர் கால வளர்ச்சி எனலாம்.

அடுத்து கொடி மரங்களில் (துவஜஸ்தம்பம்) உலோகத் தகடுகள் போர்த்துவதும் அதிலேயே அரச சின்னங்களைப் பதிப்பதும் இந்நாயக்கர் கால வழக்கமாகும். மதுரை மீனாட்சி அம்மன் கோயில் திருப்பரங்குன்றம் கோயில் போன்றவற்றில் இத்தகைய அரசச் சின்னங்களுடன் கூடிய கொடி மரங்களைக் காண்கிறோம்.

### கோயில் விமானம்

கோயிலின் கருவறையின் உபானம் முதல் ஸ்தூபி வரை உள்ள கட்டு மானத்தை விமானம் என்பர். இதுவே கோயிலின் மையமான (Nucleus) பகுதியாகும். இவ்விமானம் ஆறு அங்கங்கள் கொண்டது. அதிட்டானம்



(தாங்கு தளம்), பித்தி (கால் அல்லது சுவர்), பிரஸ்தரம் (கூரை), கிரீவம் (கழுத்து), சிகரம் (தலை), ஸ்தூபம் (முடி) என இவ்வங்கங்கள் ஆறும் பெயர் பெறும். இது சட்அங்க விமானம் எனப்படும். இவ் வங்கங்களோடு இன்னும் இரண்டு தளங்களைச் சேர்த்து அஷ்டாங்க விமானம் எனப்படும் ஒருவகையும் உண்டு. இந்த ஆறு அங்கங்களும் பாதம் கால் தோள் கழுத்து தலைமுடி என

மனித உறுப்புகளுக்கு இணையாகப் பேசப்படும். நாயக்கர் காலத்தில் இவ்விதமான உறுப்புகளிலும் சிற்சில வளர்ச்சிகள் ஏற்பட்டன.

### அதிட்டானம்

தாங்குதளம் என்பது பிரதிபந்தம் பாதபந்தம் கபோதபந்தம் என வகைப் படுத்தப்படுகிறது. விமானத்தின் மேல் கட்டுமானத்தைப் பொறுத்தும் அதில் அமையும் கூடு சாலை அஹாரை பஞ்சரம் போன்ற அங்கங்களைப் பொறுத்தும் பத்திப்பிரிப்பு முறையில் பிரித்து அடித்தளம் அமைக்கப்படும். அழகுக்காக இவ்வடித்தளம் (அதிட்டானம்) உபானம் ஜகதி குமுதம் கண்டம் பட்டிகை ஆகிய உள்உறுப்புகளைக் கொண்டு அமையும். விமானத்தின் உயரம் அதிகமானதாக இருக்குமானால் உப பீடம் அங்கம் உபானத்துக் கீழாக அமைக்கப்பட்டு அடித்தளம் வலுவானதாக்கப்படும்.

அதிட்டானத்தில் ஜகதி என்பது வெறும் பட்டைக் கல்லாகவும் பதம்ஜகதி என்ற பெயரில் விரிந்த தாமரை இதழ்களைக் கொண்டும் அமையும். குமுதம் என்பது விருத்த குமுதம் (உருள் குமுதம்), முப்படைக் குமுதம் என்ற இரண்டு வகைகளில் அமைந்தது. நாயக்கர் காலத்தில் இதுவே எண்பட்டையாகவும் பதினாறு பட்டையாகவும் அமைக்கப்பட்டது. விருத்த குமுதமாக அமையும்போது கடகவிருத்த குமுதம் அல்லது சிலம்புக் குமுதம் என்று அமைக்கப்பட்டமை நாயக்கர் கலைப்பாணியில் புதுமையாகும். ஒரு பெண்ணின் முன் கையில் அடுக்கடுக்காக வளையல்களை அடுக்கியதுபோல் அல்லது சிலம்புகளைக் கோத்தது போல் உள்ள குமுதவரியே கடக விருத்தம் அல்லது சிலம்புக் குமுதம் எனப்படுகிறது.

மரப்பாணியாகக் கோயில்கள் அமைக்கப்பட்ட போது குமுதம் என்னும் வரியில் கயிறு அமைப்பே (Rope marking) கடகவிருத்தம் எனப்பட்டது என்பர். முதன் முதலாக உத்திர மேரூர் சுந்தரவரதப் பெருமாள் கோயிலில் இத்தகு குமுதம் அமைக்கப்பட்டிருக்கலாம். மூன்றாம் குலோத்துங்கன் காலத்திலும் ஒருசில இடங்களில் இம்மரபு இருந்தது. ஆனால் பெரிய அளவில் நாயக்கர் காலத்திலேயே எல்லாக் கோயில்களிலும் பின்பற்றப்பட்டிருப்பதைக் காண்கிறோம். இது போன்ற குமுதங்கள் அமைந்துள்ள அதிட்டானங்களுக்கான சிறப்பான எடுத்துக்காட்டாகத் தஞ்சைப் பெரிய கோயில் வளாகத்தில் அமைந்துள்ள நாயக்கர் கால முருகன் கோயிலையும் மதுரை மீனாட்சி அம்மன் கோயில் போன்ற பிற கோயில்களையும் கூறலாம்.

பத்திபிரிப்பு வகையில் அமைந்த அதிட்டானக் குமுத வரியில் எண்பட்டை, பதினாறு பட்டை, கடக விருத்தம் விருத்தம் என்று மாற்றி மாற்றி அமைக்கும் வழக்கம் நாயக்கர் காலத்தில் பின்பற்றப்பட்டது. இதனை 'வர்க்க பேதம்' காட்டுதல் என்பர். தஞ்சை நகரில் அமைந்துள்ள பிரசன்ன வெங்கடேசப் பெருமாள் ஆலயத்தில் இம்மரபைக் காணலாம். இது தவிர பட்டிகை வரியில் பலவிதமான கொடி வேலைப்பாடுகளை அமைத்து அணி செய்வதும் இக்காலத்தில் ஏற்பட்டுள்ளது. ஒரு சில இடங்களில் விசயநகரர் சின்னமான கண்ட பேருண்ட பறவையும் செதுக்கப்பட்டுள்ளது.

### சுவர் (பித்தி)

சுவரில் அமைந்த தேவகோட்டங்களில் (Niches) மேலே காட்டப்படும் மகர தோரணம் என்பது நாயக்கர் காலத்தில் பெரிதும் வளர்ச்சியுற்று சாலை வடிவம் பெற்றது. அதற்கு அடுத்த நிலையில் உள்ள கும்ப பஞ்சரத்தில் கும்பம் மிகுதியான வேலைப்பாடுகளும் தண்டின் மேல்பகுதியில் கொடி வேலைப்பாடுகளும் இக்காலத்தில் இடம்பெற்றுள்ளன.

### கூரை (பிரஸ்தரம்)

கூரையில் கொடுங்கை என்னும் பகுதி நன்கு வளைந்து நீண்டது. அதன் உள்பகுதியில் செதுக்கப்பட்ட மரங்களை வரிசைப்படுத்தியதுபோல் (Railings of wooden rafters) கல்லில் அமைத்தனர். இது மரப்பாணியின் மறுபதிப்பாகும். இதனை இணைக்கும் குறுக்குச் சட்டங்கள் போன்றும், அத்துடன் ஆணிகளை இணைப்பது போன்றும் கல்லிலேயே வடித்துக் காட்டினர். இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டு ஆவுடையார் கோயில் கொடுங்கையாகும்.

சிகரம் வேசர வடிவில் (வட்டம்) அமைந்தால் அதில் மகாநாசி என்ற அமைப்பைச் சேர்ப்பதும் நாயக்கர் காலக் கலைப்பணியாகும்.

### சிற்ப அமைதிகள்

நாயக்கர் காலச் சிற்பங்கள் சராசரி உயரத்திற்கும் அதிகமானதாகவும் திடகாத்திரமானதாகவும் (massive and mascular) அமைக்கப்பட்டன.



இறை உருவங்களிலும், மனித உருவகங்களிலும் இம்முறையைக் காணலாம் மனித உருவங்களில் ஆடவர்க்குக் கொண்டைகள் சாய்ந்தும், அணிகலன்கள் நிறைந்தும், ஆடைகளில் மடிப்புகள் நிறைந்தும் காணப்படும். முறுக்கிய மீசையும், பருத்த வயிறும் இக்காலத்திற்கே உரிய கலைப்படைப்பு. அரசர், தேவியர், குறவன், குறத்தி போன்ற உருவங்களை இயற்கைத் தன்மையோடு அமைத்துள்ளனர்.

இத்தகைய சிற்பங்களுக்கு எடுத்துக் காட்டாக மதுரை ஆயிரங்கால் மண்டபம், புதுமண்டபம், கம்பத்தடி மண்டபச் சிற்பங்களையும் கிருஷ்ணாபுரம், திருவில்லிபுத்தூர், குடுமியான்மலை, தாரமங்கலம், பேரூர், தாடிக்கொம்பு சிற்பங்களையும் கூறலாம்.

### அரண்மனைக் கட்டுமானங்கள் (Secular Architecture)

நாயக்கர் கால அரண்மனைகளாக இன்று எஞ்சியுள்ளவை மதுரை திருமலை மன்னர் அரண்மனை. தஞ்சை அரண்மனை ஆகியவையே. இவை தவிர திருவில்லிபுத்தூர் அரண்மனை, மதுரை தெப்பக்குளம் மையமண்டபம் ஆகியவற்றையும் இவ்வகையில் அடக்கலாம். அரண்மனைகள் கோயில் அமைப்பிலிருந்து மாறுபட்டு அமைக்கப்பட்டுள்ளன. மதுரை மகாலில் உள்ள கட்டுமானம் ஓர் இத்தாலிய கட்டிடக் கலைஞரால் வடிவமைக்கப்பட்டது என்பர். இந்திய இஸ்லாமிய ஜெர்மானியக் கட்டிடக் கலையின் கலவையாக இது அமைந்துள்ளது. இசுலாமியக் கலையான வளைவுகள் மேற்கவிப்புகள் (arches and dooms) அதிகம் பின்பற்றப்பட்டிருப்பதால் இதனை இந்திய இசுலாமியக் கலையின் (indo - saracenic Architecture) கூட்டு வடிவம் என்றும் கூறுவர்.

பெரும்பான்மையும் சிறுசிறு செங்கற்களையும் கடின கற்பாறைகளையும் (Granite) சுண்ணாம்பையும் வைத்தே



இம்மாபெரும் மாளிகைகள் கட்டப்பட்டுள்ளன. வரிசை வரிசையாகப் பிரம்மாண்டமான தூண்களை அமைத்துள்ளனர்.

சுதை வடிவங்களிலேயே யாளி மனித உருவச் சிலைகள், கொடி வேலைப்பாடுகள் ஆகியவை கண்ணைக் கவரும் வண்ணம் அமைக்கப்பட்டுள்ளன. தஞ்சை அரண்மனையில் பலவித நாட்டுப்புறக் கலைஞர்களின் உருவங்களும் கூட இடம் பெற்றுள்ளன.

அக்காலத்தில் கட்டுமானங்களின் உறுதிப்பாட்டிற்காக எத்தகைய இயற்கைப் பொருள்கள் பயன்படுத்தப் பட்டன என்பதைக் கீழ்வரும் மதுரைத் திருப்பணிமாலை வரிகளின் மூலம் அறியலாம்.

அரைத்த சுண்ணாம்பை வெல்லச்சாறு விட்டு நன்
றாய்க் குழைத்துச் செங்கல்லும்
அடுக்காகப் பரப்பிக் கடுக்காயொடாமலகம்
அரியதான்றிக்காய் உழுந்து
ஒருக்காலிருக்காலிடித்து நன்னீரில்
ஊறிய கடுஞ்சாறும் விட்டு
ஊழிகாலங்களிலும் அசையாத வச்சிரக்
காரையிட்டு ஓங்கும் அம்மை
சிரக்காலம் வாழவே மீனாட்சி கோயிலும்
செப்பமிடுவித்து

கோபுரங்களால் கோயில்களைத் தலை நிமிரச் செய்த காலம் நாயக்கர் காலம். உருவச்சிலைகளாலும், அரும்பெரும் மண்டபங்களாலும், ஒன்றுக்கும் மேற்பட்ட திருச்சுற்றுக்களாலும், தெப்பக்குள (சிவகங்கை) அமைப்புகளாலும் கோயில்கள் இக்காலத்தில் விரிவும் பொலிவும் பெற்றன. சிற்பங்களும் அவை பெற்ற அணிகலன்களும், ஆடை அமைப்புகளும் நாயக்கர் கால கலைக்கு நற்சாட்சிகளாய் நிற்கின்றன. சாமானிய மக்களின் பண்பாட்டுக் கூறுகளையும் கோயில் சிற்பக் கலைகளில் இடம் பெறச் செய்த காலம் நாயக்கர் காலமே. ●

- **சொ.சாந்தலிங்கம்,** செயலர், பாண்டிய நாட்டு வரலாற்று ஆய்வு மையம், மதுரை.



# பழந்தமிழர் ஆடைகள்

பண்டைக்காலத்தில் வாழ்ந்த மக்கள் பூவையும், தழையையும் கோத்து அணிவது வழக்கம். அவர்கள் கம்பளி ஆடைகளையும் அணிவதுண்டு. நகரமக்கள் பஞ்சாலும், பட்டாலும், ஒரு வகை மலை எலியின் முடியினாலும், வேறு சில விலங்குகளின் முடியினாலும் ஆடைகளை நெய்தார்கள். அடியார்க்குநல்லார் தம் சிலப்பதிகார உரையில் முப்பத்தாறு ஆடை வகை களைக் குறிப்பிடுகின்றார். துணிகள் மிக மிக நுண்ணிய நூல்களினால் நெய்யப்பட்டன. அவற்றுள் தனித்தனி இழைகள் கண்ணுக்குப் புலப்படா. புகையைப் போலவும், பாலாவியைப் போலவும், பாம்பின் தோலைப் போலவும், மூங்கிலின் உரியைப் போலவும் துணிகள் நெய்யப் பெற்றன. ஆடைகட்குப் பூவேலைகள் செய்வதுண்டு. பட்டுப் புடவைகளின் முந்தானைகளில் குஞ்சம் கட்டப்பட்டது. சில பூந்துகில் வகைகள் மிகவும் வழுவழுப்பாக இருந்த காரணத்தால் வழுக்கி வழுக்கி சரியுமாம். துணிகளுக்கு





நறுமணம் ஊட்டுவதும் உண்டு.


உயர்குடிப் பிறந்த ஆண்மக்கள் இடையில் ஒரு வேட்டியும், மேலாடையும் அணிவர். சிலர் சட்டை அணிவதும் உண்டு. அரசரும், அவர்களுடைய பணியாளரும் மட்டுமே சட்டை அணி வர். இச்சட்டைக்கு கஞ்சுகம் என்று பெயர். வாழ்க்கையில் உயர்நிலையில் நின்றவர்கள் மிகக்குறைந்த உடையையே உடுத்தினர். பணியாளர்கள் தாம் வேட்டியும் சட்டையும் அணிந்தனர். சிலர் அரையில் மட்டும் ஆடை அணிவதுண்டு. ஊர்ஊராகச் சென்று பண்டங்களை விற்று வந்த வணிகர்கள் காலில் செருப்பு அணிந்திருந்தனர்.



பெண்கள் இடையில் புடவையை அணிந்திருந்தனர். அவர்கள் தம் மார்பகத்தை ஆடையால் மறைக்கும் வழக்கம் அக்காலத்தில் இல்லை. சந்தனத்தால் தொய்யில் எழுதியும், மலர்களை அணிந்துமே மார்பை மறைப்பர். பெண்மக்கள் இடையில் மேகலையணிந்து அதன் மேல் பூந்துகில் சுற்றிக் கொள்ளுவார்கள். பாடினிகள் தம் உடம்பின் பெரும் பகுதியையும் வெளியில் காட்டிக் கொண்டனர். சில சமயம் பெண்டிர் துணியால் தம்மைப் போர்த்துக் கொள்ளுவதுமுண்டு. புதுமணப் பெண்கள் புத்தாடையால் தம் உடலையும் முகத்தையும் மறைத்துக் கொள்ளுவர். பூத்தொழில் இயற்றப் பட்ட செம்பட்டாடைகள் கடைகளில் விற்பனையாயின. பூபோட்ட வெண்ணிறப் புடவைகளை அணிந்து பெண்கள் பந்தாடுவது வழக்கம். செக்கர்வானைப் போன்ற செவ்வண்ணம் ஊட்டிய, பூவேலை செய்யப்பட்ட, மிகமிக நுண்ணிய புடவைகள் மதுரையிலே அங்காடிகளில் விற்பனையாயின. உறையூரில் மிகமிக மெல்லிய மஸ்லீன் துணிகள் நெய்யப்பட்டு வந்ததாக பெரிப்புளூஸ் கூறுகிறது.

**அணிகலன்கள்**

பண்டைத் தமிழகத்துப் பெண்கள் ஆடைகளினால் முழுவதும் மறைக்கப்



பெறாத தம் உடலை அணிகலன் பூண்டு மறைத்தனர். மகளிர் பல்வேறு அணிகலன்களினால் தம்மை ஒப்பனை செய்து கொண்டனர். யவனர் ஏற்றி வந்து இறக்கிய பொன்னும், பகைவரிடமிருந்து மன்னர்கள் கவர்ந்து கொணர்ந்த பொன்னும், நாட்டிலேயே மண்ணைத் தோண்டியும் அரித்தும் எடுத்த பொன்னும் தமிழகத்தில் எங்கும் மலிந்து கிடந்தன. முத்தும், பவழமும், இதர மணிவகைகளும் இழைத்துப் பலவகையான அணிகள் செய்யப்பட்டன. கைதேர்ந்த கம்மியர்கள் இவ்வகை அணிகளைச் செய்தனர்.

மகளிர் அணிந்த அணிகலன்கள் சில வற்றை சிலப்பதிகாரம் தெரிவிக்கின்றது. கால்விரல் மோதிரம், பரியகம், நூபுரம், அரியகம், பாடகம், சதங்கை, குறங்குசெறி, அரையில்அணியும் முத்துவடம், முப்பத்திரண்டு வடத்தாலான முத்துமேகலை, மாணிக்கமும் முத்தும் இழைத்த தோள் வளையல்கள், மாணிக்கமும் வைரமும் அழுத்திய சூடகம், செம்பொன்வளை, நவமணிவளை, சங்கவளை, பவழவளை, வாளைமீனைப் போன்று இயற்றப்பட்ட மாணிக்க மோதிரம் ஆகியவை அவை. இவையன்றி, மோசை என்னும் மரகதக் கடைசெறி, கழுத்திலணியும் வீரச்சங்கிலி, நேர்ச்சங்கிலி, பொன்ஞாண், அரி நெல்லிக்காய் மணிமாலை, முகப்பில் கட்டின இந்திர நீலத்திடையே வயிரம் இழைத்த குதம்பை என்னும் காதணி, சீதேவியார், வலம்புரிச்சங்கு, பூரப்பாளை, தென்பல்லி, வடபல்லி ஆகிய அணிகளையும் பெண்கள் அணிவதுண்டு. பெண்கள் இடையில் அணிந்த பட்டிகை மேகலை, காஞ்சி, கலாபம், பருமம், விரிசிகை என ஐவகைப்பட்டிருந்தது. பெண்மக்கள் தம் காதுகளைத் தொங்கத் தொங்க வளர்க்கும்போது அணிந்து கொள்ளும் காதணிக்குக் குதம்பை என்றும், வளர்ந்த காதில் அணியும் காதணிக்குக் கடிப்பிணை என்றும் பெயர்.

கைவளைகளில் பலவகையான பூத்தொழில் குயிற்றப்பட்டன. அவற்றுள் சிலவகை முத்தால் இழைக்கப்பட்டன. பெண்கள் கால்விரல்களில் மோதிரம் அணியும் பழக்கம் பண்டைய காலத்தும் உண்டு.

குழந்தை அணிகலன்களின் வகைக்கு கணக்கே இல்லை எனலாம். குழந்தைகளின் நெற்றியில் சுட்டியும், பிறையும், மூவடம் கோத்த பொன் சங்கிலியும் பூட்டுவார்கள். கழுத்தில் ஐம்படைத்தாலியும், புலிப்பல்தாலியும் அணிசெய்தன. குழந்தைகளின் விரல்களில் சுறாமீனைப் போன்றும் இடபத்தைப் போன்றும் இலச்சினைகள் பொருத்தப்பட்ட மோதிரங்கள் பூட்டி னார்கள். மணிகள் உள்ளிட்ட சதங்கைகள், பொன் இரட்டைச்சரிகள் கால்களிலும், மணியும் பவழமும் கோத்த அரைஞாண் இடையிலும் அணிவிக்கப்பட்டன. சதங்கைகளின் பூட்டுவாய்கள் தேரையின் வாய்போல அமைக்கப்பட்டன. பெண்கள் அணிந்த சிலம்புகளுள் முத்தையும், மாணிக் கத்தையும் பரல்களாக இடுவது வழக்கம். நெல்லைத் தின்ன வந்த கோழிகளின் மேல் பெண்கள் தம் குழைகளைக் கழற்றி எறிவார்களாம். ஆண்மக்கள் மதாணி, முத்துமாலை, வெள்ளிக் கம்பியில் கோத்த பொற்றாமரை மலர்கள், கைவளைகள் ஆகிய அணி கலன்களை அணிந்திருந்தனர்.

தமிழகத்தில் செய்யப்பட்ட அணி கலன்கள் அயல்நாடுகளுக்கும் ஏற்றுமதி யாயின. கொடுமணம் என்ற ஊரில் செய்யப்பட்ட பொன்னணிகள் மக்களால் பெரிதும் பாராட்டப் பெற்றன.

***- 'தமிழக வரலாறு மக்களும் பண்பாடும்' டாக்டர்.கே.கே.பிள்ளை அவர்கள் எழுதிய நூலிலிருந்து.***

# செய்தித்துளிகள்

புதுதில்லி விஞ்ஞான் பவனில் செய்தியாளர்களை சந்தித்த தலைமை தேர்தல் ஆணையர் சுனில் அரோரா, இந்தியாவின் 17வது மக்களவைத் தேர்தலுக்கான தேதிகளை அறிவித்தார். ஏப்ரல் 11ஆம் தேதி தொடங்கி மே 19ஆம் தேதி வரை ஏழு கட்டங்களாகநாடு முழுவதும் மக்களவைத் தேர்தல் நடைபெறுகிறது. வாக்கு எண்ணிக்கை மே 23ஆம் தேதி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. தமிழகத்திலும், புதுச்சேரியிலும் மக்களவைத் தேர்தலுக்கான வாக்குப்பதிவு ஏப்ரல் 18ஆம் தேதியன்று நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் ஒரே கட்டமாக தேர்தல் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. தமிழகத்தின் 39 மக்களவை தொகுதிகளுக்கான வாக்குப்பதிவு ஏப்ரல் 18ஆம் தேதியன்று நடைபெறும்.

தமிழகத்தில் 21 சட்டமன்ற தொகுதிகள் காலியாக இருக்கும் நிலையில் 18 தொகுதிகளுக்கு மட்டுமே இடைத்தேர்தல் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டது. அரவக்குறிச்சி, ஒட்டப்பிடாரம், திருப்பரங்குன்றம் ஆகிய தொகுதிகளில் இடைத்தேர்தல் நடத்துவது தொடர்பான வழக்கு நடந்து வருவதால் இந்த மூன்று தொகுதிகளை விடுத்து 18 தொகுதிகளுக்கு மட்டும் தேர்தல் நடைபெறும் என தமிழகத் தேர்தல் ஆணையர் தெரிவித்தார்.

**தமிழகத்தில் வேட்புமனு தாக்கல்: மார்ச் 19**

**வேட்புமனு தாக்கல் செய்ய கடைசி நாள்: மார்ச் 26**

**வேட்புமனு பரிசீலனை: மார்ச் 27**

**வேட்புமனு திரும்பப் பெற கடைசி நாள்: மார்ச் 29**

2014ஆம் ஆண்டு ஒன்பது இலட்சம் வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்ட நிலையில் 2019ஆம் ஆண்டு தேர்தலுக்கு 10 இலட்சம் வாக்குச்சாவடிகள் அமைக்கப் படவுள்ளன.

| கட்டம் | வாக்குப்பதிவு தேதி | தொகுதிகள் | மாநிலங்கள் |
|---|---|---|---|
| 1 | ஏப்ரல் 11 | 91 | 20 |
| 2 | ஏப்ரல் 18 | 97 | 13 |
| 3 | ஏப்ரல் 23 | 115 | 14 |
| 4 | ஏப்ரல் 29 | 71 | 9 |
| 5 | மே 6 | 51 | 7 |
| 6 | மே 12 | 59 | 7 |
| 7 | மே 19 | 59 | 8 |

****

தாங்கள் வாக்களித்த வேட்பாளருக்கே தங்களது வாக்கு பதிவாகியுள்ளதா என்பதை சரிபார்க்க *VVPAT* எனப்படும் *(Voter Verifiable Paper Audit Trail)* இயந்திரங்கள் உதவுகின்றன. வாக்காளர்கள் தங்களுக்கு விருப்பமான வேட்பாளருக்கு வாக்கைப் பதிவு செய்ய வாக்குப்பதிவு இயந்திரத்தில் பட்டனை அழுத்தியவுடன், இந்த *VVPAT* இயந்திரம் ஒப்புகைச் சீட்டு ஒன்றைக் காட்டும். அதில் வாக்காளர் தேர்வு செய்த வேட்பாளரின் பெயர், அவரது தேர்தல் சின்னம் இடம்பெற்றிருக்கும். அந்த ஒப்புகைச் சீட்டு ஏழு விநாடிகளுக்கு மட்டுமே வாக்காளருக்கு காண்பிக்கப்படும். பிறகு முத்திரை வைக்கப்பட்ட ஒரு பெட்டியில் அது விழுந்துவிடும். இந்த இயந்திரம் வாக்காளர் மட்டுமே பார்க்கக்கூடிய வகையில் வைக்கப்பட்டிருக்கும்.

2014 நாடாளுமன்ற தேர்தலில் இந்த *VVPAT* இயந்திரங்கள் பயன்படுத்தப்பட வேண்டும் என தேர்தல் ஆணையத்திடம் உச்சநீதிமன்றம் 2013ஆம் ஆண்டு கோரியது. ஆனால் சில தொகுதிகளில் மட்டுமே அப்போது இது பயன்படுத்தப்பட்டது. வாக்குப்பதிவு முறை துல்லியமாக செயல்பட *VVPAT* இணைக்கப்பட்ட வாக்குப்பதிவு இயந்திரங்கள் உதவுகின்றன. வாக்குப்பதிவில் வெளிப்படைத்தன்மை நிலவுவதற்கும், வாக்காளர்களின் நம்பிக்கையைப் பெறவும் வாக்குப்பதிவு இயந்திரங்களுடன் *VVPAT* இயந்திரங்கள் இணைக்கப்பட வேண்டும். என உச்சநீதிமன்றம் தெரிவித்தது

வாக்குப்பதிவு இயந்திரத்தின் நம்பகத்தன்மை மீது பல குற்றச்சாட்டுகள் எழுந்துவரும் நிலையில், நேர்மையாகவும், வெளிப்படைத்தன்மையுடன் தேர்தல் நடப்பதை உறுதி செய்யும் முயற்சிகளில் ஒன்றாக இந்த *VVPAT* இயந்திரங்கள் பார்க்கப்படுகின்றன. வாக்குப்பதிவு இயந்திரங்களின் நம்பகத்தன்மை குறித்து கேள்வி எழுப்புவோர் *VVPAT* இயந்திரங்கள் அவசியமான ஒன்று என்று கூறுகின்றனர். இந்தமுறை நடைபெறவிருக்கும் மக்களவை தேர்தலில், அனைத்து வாக்குச் சாவடிகளிலும் *VVPAT* இயந்திரங்கள் பயன்படுத்தப்படும் என தலைமைத் தேர்தல் அதிகாரி சுனில் அரோரா தெரிவித்தார்.

இந்த *VVPAT* முறை 2015ஆம் ஆண்டு முதல், சட்டமன்றத் தேர்தல்களில் பின்பற்றப்பட்டு வருகிறது. இது முதன் முறையாக கோவா சட்டமன்ற தேர்தலில் பயன்படுத்தப்பட்டது. சுமார் 1,500 வாக்குப்பதிவு இயந்திரங்களுடன், ஒப்புகைச் சீட்டு வழங்கும் இயந்திரங்கள் இதுவரை இணைக்கப்பட்டு சோதனை செய்யப்பட்டுள்ளன. வாக்குப்பதிவு செய்யப்பட்ட சின்னத்துக்கு மாறான சின்னத்தில் வாக்குகள் இதுவரை ஒரு முறை கூட பதிவாகவில்லை என்றும் கூறப்படுகிறது.




****

தேர்தலில் போட்டியிடுவதற்கும் வாக்களிப்பதற்குமான, விதிமுறைகள் ஒவ்வொரு காலகட்டத்திலும், மாறிக் கொண்டே வந்திருக்கின்றன.

ஒரே மாதிரியான தேர்தல் நடைமுறை எப்போதுமே இருந்ததில்லை. ஒரு காலத்தில், சொத்து வைத்திருப்பவர்கள், வரிகட்டுபவர்கள்தான் தேர்தலில் போட்டியிட முடியும் என்ற விதிமுறை இருந்தது. பெண்களுக்கு ஓட்டுரிமை இல்லாத நிலையும் கூட சில நாடுகளில் இருந்தது.

வாக்களிக்க வேண்டும் என்ற விழிப்புணர்வை உருவாக்குவதும், எப்படி வாக்களிக்க வேண்டும்? என்ற, ஏன் வாக்களிக்க வேண்டும்? என்பது பற்றிய தகவல்களை வழங்குவதும் அவசியமானது. தேர்தல்களில் வாக்குகள் பதிவாகும் சதவீதம் குறைவாகவே இருந்து வருகிறது. தேர்தல் ஆணையத்தின் பல்வேறு நடவடிக்கைகளுக்குப் பிறகு, இப்போது வாக்குகள் அதிகம் பதிவாகத் தொடங்கியிருக்கிறது.

தேர்தல் நாள் அன்று வாக்களிக்க யோசிக்கக் நாம் தயங்கக்கூடாது. கட்சிகள் வெளியிடுகிற தேர்தல் அறிக்கை பற்றிய தெளிவான பார்வை வாக்காளருக்கு அவசியம் வேண்டும். பதினெட்டு வயது நிறைவடைந்த எவரும் வாக்காளராக தன் பெயரை பதிவு செய்யலாம். உங்கள் பெயர் வாக்காளர் பட்டியலில் இடம்பெற்றுள்ளதா என்பதை கவனிக்க வேண்டியது அவசியம். வாக்காளர் பட்டியலில் பெயர் இருந்தால் மட்டுமே, வாக்களிக்கும் ஜனநாயகக் கடமையை நீங்கள் செய்ய முடியும். வாக்களிப்பதற்குத் தேவைப்படும் உரிய சான்றுகளை வாக்குச் சாவடிக்கு அவசியம் எடுத்துச்செல்லவேண்டும்.

முழுமையான அளவில் வாக்குப் பதிவு நடைபெறுவதை உறுதி செய் வதற்காக திரைப்பட நடிக நடிகையர் பங்கேற்கும் விழிப்புணர்வுப் பிரசாரங் கள் சமூக ஊடகங்கள் மூலமாகவும் மேற்கொள்ளபட்டு வருகின்றன. கல்லூரி களில் வாக்காளர் விழிப்புணர்வுப் பிரசாரத் திற்கும் வழி வகை செய்யப்பட்டுள்ளது.

கடல்நீரைக் குடிநீராக்கும், சூரிய சக்தியால் இயங்கும் நாட்டின் முதலாவது ஆலையை சென்னை, இந்தியத் தொழில்நுட்பக்கழகக் குழு கன்னி யாகுமரியில் நிறுவியுள்ளது. தினமும் பத்தாயிரம் லிட்டர் குடிநீர் இங்கு தயாராகிறது. ரூ.ஒரு கோடியே 22இலட்சம் மதிப்பிலான இந்தத் திட்டம் மத்திய அரசின் புவி அறிவியல் அமைச்சகத்தின் நிதி உதவியுடன் அமைக்கப்பட்டுள்ளது.

****

பழங்காலத் துறைமுக நகரமான பூம்புகாரின் வரலாற்றை ஆராய்ந்து வெளிப்படுத்துவதற்காக திருச்சிராப்பள்ளி பாரதிதாசன் பல்கலைக்கழகத்திற்கு ரூ.8.5 கோடி நிதியை, இந்திய அரசின் அறிவி யல் தொழில்நுட்பத்துறை அளித்துள்ளது. இந்தப் பல்கலைக்கழகத்தின் தொலை உணர்வுத் துறை இந்த ஆராய்ச்சியை முன்னின்று நடத்தும். இந்த ஆராய்ச்சியில் பல்கலைக்கழகத்தின் மற்ற சில துறைகளும் ஒருங்கிணைந்து ஈடுபடும்.

கி.மு.300க்கும், கி.பி.300க்கும் இடைப்பட்ட தமிழ்ச்சங்க காலத்தில் காவிரிப் பூம்பட்டினத்தில் துறைமுக நகரம் அமைந்திருந்தது. ஆசியா, அரேபியா, மத்தியதரைக்கடல் நாடுகளுக்கு இங்கிருந்து வர்த்தகம் நடைபெற்று வந்தது. பின்னால் வந்த பல்வேறு அரச மரபினரும் ஆதரித்துப் போற்றிவந்த இந்தத் துறைமுகம் கி.பி.1100ஆம் ஆண்டில் திடீரென செயலிழந்தது. சங்ககால இலக்கியங்களிலும், அதன் பிறகு தோன்றிய சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற காப்பியங்களிலும் பூம்புகார் துறைமுகம் பற்றி விரிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது. வெவ்வேறு துறைகளைச் சேர்ந்த விஞ்ஞானிகளும் இந்தத்துறைமுகம் பற்றி ஆராய்ச்சிகள் மேற்கொண்டு வந்துள்ளனர். சென்னையில் இயங்கிவரும் கிவிணிஜி பல்கலைக்கழகம், கடலியல் தொழில்நுட்ப தேசிய நிறுவனம், திண்டுக்கல் காந்தி கிராம கிராமியப் பல்கலைக்கழகம் ஆகியவற்றுடன் இன்னும் சில பல்கலைக்கழகங்களும் இணைந்து இந்தப் புதிய கூட்டு ஆராய்ச்சியை மேற்கொள்ளவிருக்கின்றன.

****


மகாத்மா காந்தியடிகள் 1932இல் நிறுவிய அரிஜன சேவா சங்க அமைப்பு தயாரித்து அளித்துள்ள தேர்தல் விளக்க அறிக்கை இந்தச் சங்கத்தின் தன்னார்வத் தொண்டர்களால் சென்னை தக்கர் பாபா வித்யாலயா பள்ளியில் அண்மையில் வெளியிடப்பட்டது. இந்த ‘மாதிரி தேர்தல் விளக்க அறிக்கை’யை அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் அனுப்பப் போவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் ஆணையம் தெரிவிக்கும் நடத்தை விதிமுறைகளை தவறாமல் அப்படியே பின்பற்ற வேண்டும். தனி நபர்களைத் தாக்கிப் பேசக்கூடாது. கொள்கைகள், செயல்திட்டங்கள் பற்றி யும், கடந்த கால சாதனைகள் பற்றியும் மட்டுமே விமர்சிக்கவேண்டும். வெறுப் பையும் பதற்றத்தையும் தூண்டும் விதத்தில் பிரசாரம் செய்யக்கூடாது

என்பன போன்ற தேர்தல் விளக்கங்கள் இதில் இடம் பெற்றுள்ளன. தமிழகத் தேர்தல் ஆணையத்தின் முன்னாள் தலைமை செயல் அதிகாரி நரேஷ் குப்தா அவர்கள் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்று உரையாற்றினார்.

****

சென்னை பத்திரிக்கை தகவல் அலுவலகம் தயாரித்துள்ள 2019 பொதுத் தேர்தலுக்கான தகவல் கையேட்டையும், குறுந்தகடையும் தமிழ்நாடு தலைமைத் தேர்தல் அதிகாரி சத்யபிரதா சாஹூ அண்மையில் வெளியிட்டார். 1951 முதல் 2014 வரை நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தல்களில் தமிழ்நாட்டிலும் புதுச் சேரியிலும் உள்ள 40 நாடாளுமன்றத் தொகுதிகளில் வேட்பாளர்கள் பெற்ற ஓட்டு விவரங்கள் உள்ளிட்ட பல்வேறு புள்ளி விவரங்கள் இதில் இடம்பெற்றுள்ளன. ஊடகத்துறையினர், கல்வியாளர்கள், ஆய் வாளர்கள், பொதுமக்கள் ஆகியோருக்கு பயனளிக்கும் வகையில் இந்த நூல் அமைந்திருக்கிறது. வக்காளர் பட்டியல், தொகுதி வரையறை,, தேர்தல் நடத்தை




விதிகள், வாக்காளர் பங்கேற்பு, வாக்காளர் கல்வி ஆகியவை பற்றிய தகவல்களும் இதில் இடம் பெற்றுள்ளன. பொதுதேர்தல் (1951-2014) மக்கள் தீர்ப்பு என்ற தலைப்பில் தமிழிலும், General Elections என்ற தலைப்பிலும் இந்த நூல் வெளியாகியுள்ளது. இந்த நூல்களில் உள்ள தகவல்கள் அனைத்தும் <http://www.pib.nic/> என்ற இணையதளத்தில் பதிவேற்றமும் செய்யப்பட்டுள்ளது. சென்னை பத்திரிகை தகவல் அலுவலகத்தின் கூடுதல் தலைமை இயக்குநர் E.மாரியப்பன் உடனிருக்கிறார்.

*தொகுப்பு: த.சித்தார்த்தன்*


# சந்தாதாரர்கள் கவனத்திற்கு !

## திட்டம் இதழ் சந்தா விவரம்

| | | |
|---|---|---|
| ஓர் ஆண்டு | ... | ரூ. **230.00** |
| இரண்டாண்டு | ... | ரூ. **430.00** |
| மூன்றாண்டு | ... | ரூ. **610.00** |

தாங்கள் சந்தா அனுப்பும்போது உங்கள் முகவரியில் **(Pin Code)** பின் கோட் மற்றும் கைப்பேசி எண்ணை இணைத்து அனுப்பவும்.

உதவி இயக்குநர்:

# திட்டம்

A, Wing ராஜாஜி பவன், பெசன்ட் நகர், சென்னை – 600 090.

தொலைபேசி: 044–2446 5382 / 2491 7673

# உங்களுக்குத் தெரியுமா?

### ஜரிகை

இந்தியா, பாகிஸ்தான், பாரசீகம் ஆகிய நாடுகளின் பாரம்பரிய உடைகள், திரைச் சீலைகள் போன்றவற்றில் தங்கம், வெள்ளி இழைகளால் நேர்த்தியாக நெய்யப்பட்ட வழவழப்பான நூல் இழை அமைப்பே ஜரிகை எனப்படுகிறது. இந்தியாவில் நான்கு வகைப்பட்ட ஜரிகைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. அவையாவன: உண்மையான நல்ல ஜரிகை, பாதி உண்மையான ஜரிகை, போலித்தோற்ற ஜரிகை, பிளாஸ்டிக்



ஜரிகை ஆகியனவாகும். உண்மையான ஜரிகை வெள்ளியினால் உருவாக்கப்பட்டு அதில் தங்கமின்முலாம் பூசப்பட்டிருக்கும். பாதி உண்மையான ஜரிகையானது தாமிரத்தால் உருவாக்கப்பட்டு வெள்ளி, தங்க முலாம்கள் பூசப்பட்டதாக இருக்கும். இந்தியாவில் ஜரிகைத் தொழிலின் இருப்பிடம் சூரத் நகரமாகும். பெய்ரலி, வாரணாசி, ஆக்ரா, ஹைதராபாத், லக்னோ, வதோதரா, லாத்தூர், ஜெய்ப்பூர், பார்மர் ஆகியவை ஜரிகை உற்பத்தி செய்யப்படும் மற்ற இடங்களாகும்.

### தோல் காலணிகள், பிற வகை தோல் பொருள்கள்

தோல் செருப்புகள் உள்ளிட தோல் பொருள்கள் தயாரிப்பு இந்தியாவின் பாரம் பரியமான தொழிலாகும். இந்தியாவில் தோல் பொருள்கள் அதிமாக உற்பத்தி செய்யப்படும் இடங்கள் தமிழ்நாட்டில் உள்ள ராணிப்பேட்டை, மகராஷ்டிராவில் உள்ள மும்பை ஆகிய இடங்களாகும். இவை தவிர உத்திரப்பிரதேச மாநிலத்தில்



உள்ள ஆக்ரா, லக்னோ, கான்பூர்; பஞ்சாப் மாநிலத்தில் உள்ள ஜலந்தர்; ஹரியானாவில் உள்ள கர்னால், பரிதாபாத், தில்லி; மேற்கு வங்காளத்தில் கொல்கத்தா; ராஜஸ்தானில் ஜெய்ப்பூர், ஜோத்பூர்; இமாசலபிரதேசம்; ஒடிசா; கேரளாவில் காளிகட் ஆகிய இடங்களிலும் தோல் பொருள்கள் உற்பத்தியாகின்றன.

தோல்பொருள்களின் உற்பத்தியில் உலகமெங்கும் பிரபலம் பெற்றிருக்கும் நாடு இந்தியாவாகும். மேலாடைகள், விளக்குகளின் மேல் மறைப்பு, பைகள், தோல் பைகள், பெல்ட், பணப்பை, திணித்து வைக்கப்பட்ட பொம்மைகள் ஆகிய தோல் பொருள்கள் இந்தியா விலிருந்து ஏராளமாக ஏற்றுமதியாகின்றன. மொத்த ஏற்றுமதியில் தோல் பைகளும், பணப்பைகளும் அதிக அளவில் இருக்கின்றன.

### தரை விரிப்புகள்

இந்தியாவின் மிகப் பழமையான தொழில்களில் ஒன்று. இது ஏற்று



மதியைப் பெரிதும் சார்ந்திருக்கிறது. கைகளினால் பின்னப்பட்ட கம்பளி தரைவிரிப்புகள், நூற்குஞ்சம் உள்ள கம்பளி தரைவிரிப்புகள், கைகளால் செய்யப்பட்ட தடிமனான கம்பளி தரைவிரிப்புகள், தூய பட்டு விரிப்புகள் போன்ற பலவகைப்பட்ட தரைவிரிப்புகள் இந்தியாவில் உற்பத்தியாகின்றன. பதோதி, வாரணாசி, மிர்சாப்பூர், ஆக்ரா, ஜெய்ப்பூர், பிக்கானெர், காஷ்மீர், பானிபட், குவாலியர், மேற்குவங்காளம், உத்தராகண்ட், கர்நாடகா, ஆந்திராவில் உள்ள எல்லூரு ஆகிய இடங்கள் தரைவிரிப்புகளின் உற்பத்தி நடைபெறும் முக்கியமான மையங்கள் ஆகும்.

### தடிமனான தரைவிரிப்புகள், கம்பளங்கள்

கம்பள உற்பத்தியில் உலகில் உள்ள முன்னணி நாடுகளில் ஒன்று இந்தியா. நம்தா கம்பளங்கள் (ஒட்டுக்கம்பளங்கள்), கப்பா (பூவேலை செய்யப்பட்ட கம்பளங்கள்), மரவிரிப்புக் கம்பளங்கள், பருத்தி ஜமக்காளங்கள் போன்றவை இந்தியாவில் தயாரிக்கப்படுகின்றன. உத்திரப்பிரதேசத்தில் ஆக்ரா, பதோய், மிர்சாப்பூர்; ராஜஸ்தானில் ஜெய்ப்பூர்; ஹரியானாவில் பானிபட், காஷ்மீர் ஆகிய இடங்களில் கம்பள உற்பத்தி அதிக அளவில் நடைபெறுகிறது. ஜமக்காள உற்பத்தி மண்டலங்களாக பானிபட், தமிழ்நாட்டில் பவானி, கர்நாடகாவில் நாவல்குன்ட்; ஆந்திராவில் வாரங்கல்; ராஜஸ்தானில் ஜைசால்மர், பார்மர் ஆகிய பகுதிகள் அறியப்படுகின்றன.

### கைத்தறி

உலகிலேயே மிக அதிகமான கைத்தறித் துணிகளை உற்பத்தி செய்யும் நாடாக இந்தியா இருந்து வருகிறது. உலகத்தின் ஒட்டுமொத்த கைத்தறித் துணி உற்பத்தியில் 85 சதவீதம் இந்தியாவில் உற்பத்தியாகிறது. இந்தியாவின் ஒட்டுமொத்த துணி உற்பத்தியில் (கம்பளி, பட்டு, புரிநூல் உற்பத்திகளைச் சேர்க்காமல்) கைத்தறித் துணிகள் 14.6 சதவீதமாக இருக்கின்றது. இந்தியாவில் 470 கைத்தறித் தொகுப்புக்

கள் இருக்கின்றன. அவற்றில் 230 தொகுப்புகள் ஆயிரத்திற்கும் அதிக மான எண்ணிக்கையில் தறிகளைக் கொண்டிருப்பவை. இந்த 230 தொகுப்புகளில் உள்ள 41 தொகுப்புகளில் மட்டும் 25000க்கும் மேற்பட்ட தறிகள் உள்ளன. பஹ்ரைச், புஜ், கரிம்நகர், படன், வாரணாசி, நவான், ஷாஹர், பௌத் போன்ற இடங்களில் அதிகமான கைத்தறித் தொகுப்புகள் உள்ளன. வேளாண்மைக்கு அடுத்தபடியாக அதிக மான வேலைவாய்ப்பை உருவாகித்தருவது கைத்தறித் தொழில்தான்.

## ஆடைகள், கைகளால் செய்யப்படும் பூவேலைகள்

நூலினாலும், பிற பொருள்களினாலும் ஆடைகளில் பூவேலைகலும், அழகு படுத்தும் வேலைகளும் செய்யப் படுகின்றன. லக்னோவில் சிக்கங்காரி. சர்தோசி; வங்காளத்தில் கதா; பஞ் சாபில் புல்கரி, குஜராத்தில் கட்ச் பூவேலை, காஷ்மீரில் காஷிதகாரி ஆகிய பூவேலை செய்யும் தொகுப்புகள் இந்தியாவில் உள்ளன. லக்னோவில் பாரம்பரியமாக பிரபலமாக இருந்துவரும் சர்தோசி பூவேலைகள் சர்தோசியைச் சுற்றிலும் உள்ள பாரபங்கி, உன்னோ. சிதாபூர், ராய்பரேலி, ஹர்தோய், அமேதி ஆகிய மாவட்டங்களில் மேற்கொள்ளப் படுகின்றன.

## ஆடைகளில் கைஅச்சு

கைகளினால் அச்சிடப்படும் ஆடைகள் ஒரு வகை கைவினைத்தொழிலாகும். துணிகளில் சாயமேற்றி கைகளினாலோ, பல்வேறு வடிவமுடைய அச்சுக்களைக் கொண்டோ உருவங்களையும், வடிவங் களையும் துணிகளில் பதிப்பது இந்தக் கைவினைக் கலையாகும். அச்சுக்கட்டை பதிப்பு, கலம்காரி (பேனாவைக் கொண்டு கைகளினால் அச்சிடுவது, பந்தானி போன்ற பலவகைப்பட்ட கை அச்கிடல்கள் இந்தியாவில் இருக்கின்றன. ஹைதராபாத், மசீலிப்பட்டினம், வாரணாசி, பரூகாபாத், பக், பெஹ்ரோங்கார், இந்தோர், மன்ட்சார், பரன்பூர், அகமதாபாத், ராஜ்கோட், கட்ச், பக்ரு, சிட்ரோலி, சங்கானெர், ஜெய்ப்பூர், ஜோத்பூர் ஆகிய இடங்கள் இதற்கான முக்கியமான மையங்களாகும்.

## பிரம்பு, மூங்கில்

பெரும்பாலும் நாற்காலிகள் செய்வ



தற்குப் பிரம்பும், அணிகலன்கள், விளக்குப் பேழைகள், குடையின் பிடிகள், தடுப்புகள், பூந்தொட்டிகள், திரைகள், கூடைகள், கைத்தடிகள், கருவிகளுக்கான கைப்பிடிகள், மீன் பிடிக்கும் தூண்டில் கோல்கள், கூடாரக்கம்பங்கள், ஏணிகள், பொம்மைகள், விசிறிகள், கோப்பை கள், குவளைகள், போன்ற பயன்படு பொருள்களையும், அலங்காரப் பொருள்களையும் செய்வதற்கு மூங்கில் களும் பயன்படுத்தப்படுகின்றன. அஸ்ஸாம் (லக்கிம்பூர், பொங்கைகவோன், குவஹாட்டி போன்ற இடங்கள்), திரிபுரா (அகர்தலா, நீலாகர் போன்ற இடங்கள்) ஆகியவை பிரம்பு, மூங்கில் பொருள்களுக்கு தேசிய அளவிலும், உலக அளவிலும் பிரதானமானவையாகும். அஸ்ஸாமில் 50 வகை மூங்கில் இனங்கள் இருக்கின்றன. மணிப்பூர், அருணாசலப் பிரதேசம், மேற்கு வங்காளம், கேரளா, ஒடிசா ஆகியவை பிரம்பு, மூங்கில் கைவினைப் பொருள்களின் முக்கியமான பிற மையங்களாகும்.

## காது வளையங்கள், வெள்ளிப் பதக்கங்கள்

நுணுக்கமான வேலைப்பாடுடைய காது வளையங்கள் 4000 ஆண்டுகளுக்கு முற்பட்ட பண்டைய நுட்பமாகும். வெள்ளி வேலைப்பாடுகள் செய்யும் இரண்டு முக்கியமான தொகுப்புகள் ஆந்திராவில் கரீம் நகரிலும், ஒடிசாவில் கட்டக்கிலும் இருக்கின்றன. கரிம்நகரில் நடைபெறும் இந்தத் தொழில் இரண்டு நூற்றாண்டுகள் பழமையானது. எனினும் ஆந்திராவில் வாரங்கலிலும் இந்தத்தொழில் உள்ளது. வெள்ளிக்கம்பிகள், நகல் எடுக்கும் காகிதங்கள், செம்பு, கரி, நீர்த்த நிலையில் இருக்கும் கந்தக அமிலம் ஆகியவை இதற்குத் தேவைப்படும் முக்கியமான மூலப்பொருள்களாகும்.

## உலோக அணிகலங்கள்

சிக்கலான கைத்திறம், நுண்கலை ஆகியவற்றை இந்தியாவின் உலோகக் கைவினைப் பொருள்கள் பிரதிபலிக் கின்றன. தங்கம், வெள்ளி, பித்தளை, செம்பு ஆகிய உலோகங்களில் உருவங்களும், வழிபாட்டு உருவ அமைப்புகளும் ஆபரணங்களும், பயன்படுபொருள்களும் வடிவமைக்கப்படுகின்றன. உலோகக் கைவினைகளின் கீழ் வரக்கூடிய பல் வேறு பிரிவுகளாவன: மொராதாபாத் பித்தளை உலோக வடிவங்கள், மத்தியபிரதேசத்திலும் ஒடிசாவிலும் நடைபெறும் உலோக பித்ரி வேலைகள், ஜால்ரா, மணிகள் உற்பத்தி போன்றவை. உலகத்திலேயே அதிகமான செம்புப்



பொருள்களை உற்பத்தி செய்யும் நாடு இந்தியாவாகும். பெரிய அளவிலான உற்பத்தித் தொகுப்புகள் மொராதாபாத், முர்ஷிதாபாத், மதுரை, சேலம், கட்டக், ஹரியானா ஆகிய பகுதிகளில் உள்ளன.

## பித்ரி கலைப்பொருள்கள்

கர்நாடக மாநிலம் பிதர் என்ற இடத்தில் உருவான கைவினைக் கலை என்பதை இந்தப்பதம் குறிக்கும். இந்த இடம் இந்தக் கலையின் மையமான இடமாக இன்னமும் திகழ்கிறது. ஒரு உலோகத்தினுள் இன்னொரு உலோகத்தைப் பதித்து இழைத்துச் செய்யப்படும் உலோகப்பொருள் கலைவடிவம் இதுவாகும். ஹுக்கா அடித்தளம், கிண்ணங்கள், பெட்டிகள், மெழுகுவர்த்தியைத் தாங்கி நிற்கும் பேழைகள், தாம்பாளம், நகைகள், பொத்தான்கள் ஆகியவை பலவகைப்ட்ட இத்தகைய உற்பத்திப் பொருள்களில் அடங்கும். இந்தக் கலை ஈரானிலிருந்து ராஜஸ்தானில் உள்ள அஜ்மீருக்கு 13ஆம் நூற்றாண்டில் பயணித்து வந்திருக் கிறது. பிறகு அங்கிருந்து பிஜப்பூர் சென்று தக்காண சுல்தான்களின்

ஆட்சியின் போது செழித்து வளர்ந்திருக்கிறது. மகாராஷ்டிராவில் உள்ள ஔரங்காபாத்திலும், தென்னகத்தில் ஹைதராபாத்திலும் இந்தக் கலை நடைமுறையில் இருந்து வருகிறது. பித்ரி கலை வண்ணத்திற்குப் பயன்படுத்தப்படும் அடிப்படையான உலோகம் துத்தநாகம், தாமிரம் இரண்டும் கலந்த உலோகக் கலவையாகும்.

### ஆபரணங்கள்

ஆபரணங்கள் செய்வது இந்தியாவில் மிகவும் தனித்துவமான, உயரிய கைவினைக் கலையாகும். கைகளால் செய்யப்படும் நகைகளில் பாரம்பரிய, நவீன வடிவங்கள் இரண்டிலும் இந்தியா நன்கு நிலைநாட்டப்பட்ட திறமைகளைக் கொண்டதாக இருக்கிறது. தில்லி, மொராதாபாத், சம்பல், ஜெய்ப்பூர், கொஹிமா (பழங்குடியினத்தவர் நகைகள்), நெல்லூர், மைசூர், நால்கொண்டா, நிசாமாபாத் போன்றவை கைகளால் செய்யப்படும் நகைகளுக்கான பெரிய மையங்கள் ஆகும். ஏறத்தாழ ஐந்து இலட்சம் பொற்கொல்லர்களும், ஆறாயிரம்



வைர நகை செய்வோரும் இந்தியாவில் இருப்பதாகக் கணக்கிடப்பட்டுள்ளது.

### மண்பாண்டங்கள்

இந்தியாவில் மிகவும் அதிகமான வகைகளில் மண்பாண்டக் கலை வடிவங்கள் இருக்கின்றன. நீலம், கறுப்பு, சிவப்பு மண்பாண்டங்கள் மங்கிய சிவப்பு, சாம்பல் மட்கல வகைகள் மிகவும் புகழ்மிக்க வடிவங்களாகும். இந்தியா முழுவதிலும் மன்பாண்டக் கலைக்கு செழுமையான பாரம்பரியம் உள்ளது. அஸ்ஸாமில் உள்ள ஆஷாரிகண்டி பகுதியில் மிகப் பெரிய மண்பாண்டத் தொழில் தொகுப்பு இருக்கிறது. பத்ராவதி, புலந்த்சாகர், நிசாமாபாத், புனே, சந்திராபுர் போன்றவை மற்றைய தொகுப்புகள் ஆகும். இந்தியாவில் உள்ள நான்காவது மிகப்பெரிய கைவினைக் கலைப் பிரிவினர் மண்பாண்டக் கலைஞர்களேயாவர். இந்தியாவில் இந்தத் தொழிலில் 10 இலட்சம் பேர் ஈடுபட்டிருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இந்தக் கைவினைக் கலைக்குத் தேவைப்படும் மூலப்பொருள் நீர்நிலைகளின் அடியில் காணப்படும் சாதாரண களிமண்ணேயாகும்.

### டெரகோட்டா

இது மண்பாண்டத்தினை ஒத்தது. உள்ளூரில் ஆறுகளின் அடிப்பரப்புகளில் கிடைக்கும் களிமண்ணைக் கொண்டு விளக்குகள், மெழுகுவர்த்தி பேழைகள், தெய்வங்கள், விலங்குகளின் உருவங்கள் போன்றவை செய்யப்படுகின்றன.

### நாட்டுப்புற ஓவியங்கள்

இராமாயணம், மகாபாரதம் , இந்தியப் புராணங்கள் ஆகியவற்றில் வரும் கதாபாத்திரங்களையும், அன்றாட நிகழ்வுகளையும் படங்களாக இவை வெளிப்படுத்துகின்றன. இந்தியாவில் பலவிதமான துடிப்புமிக்க நாட்டுப்புற ஓவிய வகைகள் இருக்கின்றன. மகாராஷ்டிராவில் வசிக்கும் வார்லி பழங்குடியினத்தவரின் அன்றாட சமூக நிகழ்வுகளை வார்லி ஓவியங்கள் துல்லியமாக சித்தரிக்கின்றன. ராஜஸ்தானில் துணிகளில் ஓவியங்கள் வரையப்படுகின்றன. குஜராத், மத்திய பிரதேச மாநிலங்களின் பித்தோரா ஓவியங்கள்,



பிகாரின் மதுபாணி ஓவியங்கள், மேற்கு வங்காளத்தின் சித்ராகர் ஓவியங்கள், ஒடிசாவின் படசித்திரங்கள், ஆந்திராவின் காலஹஸ்தி கலம்காரி ஓவியங்கள் ஆகியவை மற்றைய வகைகளைச் சேர்ந்த ஓவியங்களாகும்.

### கயிறு திரித்தல்


தேங்காய்களில் இருந்து எடுக்கப்படும் சுற்றுச்சூழலுக்கு உகந்த மென்மையான நாரில் இருந்து கயிறு தயாரிக்கப்படுகிறது. சூழலுக்கு உகந்த பலவிதமான பொம்மைகள், பாய்கள், தூரிகைகள், தலையணைகள், சுவர் அலங்காரப் பொருள்கள், சாவி வளையங்கள், பேனா நிறுத்திகள் இன்ன பிற வீட்டு அலங்காரப் பொருள்கள் ஆகியவற்றைத் தயாரிப்பதற்கு நார்கள் பெருமளவுக்குப் பயன்படுகின்றன. ஒடிசாவில் சக்கிகோபால், பூரி, பிப்லி, புவனேஸ்வர், பட்டமங்களா, கேந்திரபாரா ஆகிய பகுதிகளிலும், கேரளாவில் எர்ணாகுளத்திலும் கயிறுகள் தயாரிக்கப்படுகின்றன.

### நாடக அரங்கம், ஒப்பனை, கூத்தாட்டு பொம்மைகள்

இந்தக் கைவினைக்கலை திருவிழாக்கள், நிகழ்த்துகலைகள் ஆகியவற்றோடு தொடர்புடைய பொருள்களை உள்ளடக்கியது. நான்கு வகையான கூத்தாட்டு பொம்மைகள் இருக்கின்றன. அவை, கையுறை, பிரம்பு, நிழல், சரம் ஆகியவையாகும். நாட்டின் வெவ்



வேறு பகுதிகளில் உள்ள கூத்தாட்டு பொம்மைகள் அவைகளுக்கே உரிய தனித்த அடையாளங்களைக் கொண்டிருக்கின்றன. ஒடிசாவில் குந்தெய்னக், கதிகந்தே, ராவனச்சயா; கர்நாடகத்தில் கொம்பேயாட்டா, டொகலு கொம்பேயாட்டா; ஆந்திரப்பிரதேசத்தில் தோலுபொம்மலாட்டா, தமிழ்நாட்டில்



தோல்பாவைக்கூத்து, ராஜஸ்தானில் கத்புல்டி, பிகாரில் யாம்புரி, கேரளாவில் தோல்பாவகூத்து, பவகதகளி ஆகியவை இவற்றில் குறிப்பிடத்தக்கவை.

**புல், இலை, நாணல், நாரிழை**

இயற்கை இழைகள் அனைத்து பண்பாடுகளிலும் பாரம்பரிய முறையில் செருப்புகள், கூடை, பாய், பைகள், விளக்குத் தாங்கிகள், பெட்டிகள் போன்ற பல்வேறு பயன்படு பொருள் களைத் தயாரிப்பதற்குப் பயன்படுத்தப் படுகின்றன. வாழை, சணல், பைனாப்பிள் போன்றவற்றின் தண்டுகள், பனைஓலை, சுருள் பைன் மரங்கள், கற்றாழை ஆகியவற்றின் இலைகள், கயிற்று உமி, பருத்திவிதைகள் புல்வகைகள் ஆகியவற்றில் இருந்து நாரிழைகள் எடுக்கப்படுகின்றன. மகாராஷ்டிராவில் சிசல், கேரளாவில் பனை ஓலை, பவளப் பாறை புற்கள், தமிழ்நாடில் பனை ஓலை, பவளப்புற்கள், அஸ்ஸாமில் ஷிட்டல்பட்டி, மேகாலயாவில் ஷிட்டல் பட்டி, பிகாரில் சிக்கி, முஞ்ச் புற்கள் போன்றவை நாரிழைகளைத் தருகின்றன. உத்தராகண்டில் உள்ள அல்மோரா, டேராடூன் ஆகிய இடங்களும், கோவா, எர்ணாகுளம் (கேரளா), குலு (ஹிமாச்சல்), மித்னாபுர் (மேற்குவங்கம்) ஆகியவையும் இந்தக் கைவினைக் கலைகளுக்கான முக்கியமான மையங்கள் ஆகும். ●


# EMPLOYMENT NEWS

**வேலைவாய்ப்பு தொடர்பான அனைத்து தகவல்களையும் வழங்கும் வார இதழ்**

**சந்தா செலுத்துவது எப்படி ?**

Employment News பத்திரிகையாகவும், மின் வடிவிலும் கிடைக்கிறது.

| சந்தா திட்டம் | Employment News பத்திரிகை | Employment News மின்வடிவம் |
|---|---|---|
| ஓராண்டு | ரூ. **530/-** | ரூ.**400/-** |
| இரண்டு ஆண்டுகள் | ரூ. **1000/-** | ரூ.**750/-** |
| மூன்று ஆண்டுகள் | ரூ. **1400/-** | ரூ.**1050/-** |

சந்தா தொகையை Employment News, Government of India, Payable at New Delhi என்று அடுக்கப்பட்ட வரைவோலை (Demand draft) மூலமாகவும் செலுத்தலாம்.

வரைவோலைகளை,

**Employment News**
Publication Division (Circulation Section)
Ground Floor, Soochna Bhavan, CGO Complex
Lodhi Road
New Delhi 110 003 என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கவேண்டும்.

*மேலதிக விவரங்களுக்கு:*

இணையதளம்: <https://www.employmentnews.gov.in>
மின்னஞ்சல்: businesswng@GMAIL>COM
enewscirculation@gmail.com <mailto:enewscirculation@ gmail.com>
தொலைபேசி: வர்த்தகப்பிரிவு 011 - 24367453/24369567.



# சோழர் காலத்துக் கடல் சார் திறன்பாடும் துறைமுக மேலாண்மையும்.

- கே.ஆர்.ஏ. நரசய்யா

இந்தியா ஒரு தீபகற்பமாகையால், கடலைப் பற்றி நன்றாக அறிந்திருந்த மக்களை இந்தியாவின் தென்பகுதி கொண்டிருந்தது. அந்நாளையில் எங்கெல்லாம் நதிகளும் ஆறுகளும் கடலில் கலக்கின்றனவோ அங்கெல்லாம் துறைமுகங்கள் அமைந்திருந்தன. நீர்வழித் தடங்கள் மூலம் கப்பலில் வந்த சரக்குகளை படகுகள் மூலம் உள்நாட்டுக்கு எடுத்துச் செல்லவும் மக்கள் பயணிக்கவும் முடிந்தது. ஆகையால் இயல்பாகவே தென்னகத்து மக்கள் எல்லோரும் கடலைப் பற்றி அறிந்தவர்களாகவே இருந்திருக்கின்றனர். மேற்கில் சிந்து நதி கடலில் கலக்குமிடத்தில் இருந்து தொடங்கி, கிழக்கில் வங்கத்து நதிகள் வங்காள விரிகுடாவில் கலக்குமிடம் வரை மிக நீளமான இந்தியாவின் கரையோரப் பகுதி உள்ளதாகையால், மிகப் பழங்காலம் தொட்டு இந்திய தீபகற்பப் பகுதி மக்கள் கடலின் குணாதிசயங்களை அறிந்திருந்தனர் என்பதும், வரலாறு, இலக்கிய, நாணய, மற்றும் கல்வெட்டுச் சான்றுகள் மூலம் நமக்குத் தெரியவருகிறது.




தவிரவும், நமது நாட்டிற்கு பயணிகளாக வந்த வெளிநாட்டினரின் குறிப்புகளினின்றும் நமக்கு கடல்வழி வணிக சம்பந்தமான பல விஷயங்கள் தெளிவாகின்றன. அவற்றின் மூலம் பழங்காலத்துத் துறைமுகங்களைப் பற்றியும் தெரிந்து கொள்ளமுடிகிறது.

கடல் வணிகத்தைப் பற்றி எழுதுகையில், எல்லா ஆசிரியர்களும் குறிப்பிடும் முதல் நூலாகவும் எல்லாவற்றிற்கும் மூல நூலாகவும் இருப்பது The Periplus of the Erytraen Sea என்ற 'செங்கடல் வழிகாட்டி' என்பதாகும். இது கி.பி. முதலாம் நூற்றாண்டில் ஒரு கிரேக்க மாலுமியால் அவர்கள் பேசுமொழியில் எழுதப்பட்டது. அக்காலத்தில் எல்லா மேலைநாட்டு மாலுமிகளும் செங்கடல் வழியாகத்தான் வணிகத்திற்காக இந்தியா வந்தனர். அவர்கள் அரேபியக் கடற்கரையை அடுத்து இருப்பதெல்லாம் செங்கடல் என்றுதான் நம்பினர். ஆகையால் அரபிக் கடலையும் அவர்கள் செங்கடலுடன் சேர்ந்ததாகத் தான் கருதினர். அதனால் தான் இந்நூல் செங்கடல் வழிகாட்டி என அறியப்படுகிறது. முதலாவது நூற்றாண்டில் எவருமே தாம் கண்ட கடற்கரைப் பகுதிகளைப் பற்றி இவ்வளவு விரிவாகவும், விவரமாகவும் எழுத்தில் வடிக்கவில்லையாதலாலும், இந்திய நாட்டின் எல்லாப் பழங்காலத்துத் துறைமுகங்களையும் அடையாளம் காட்டுவதாலும் இந்த நூலை ஒரு சிறந்த, இந்தியத் துறைமுக வரலாற்றுக் கருவூலமாகவே கருதவேண்டும். அக்காலத்தில் இந்தியக்கடல்வழி வணிகம் கடற்கரையின் அமைப்பைப் பொறுத்திருந்தது. காலத்தைப் பொறுத்து, கடல் பொங்குதல், பேரலைகள் முதலிய காரணங்களால் கரையோரத்து வடிவமைப்பும் தொடர்ந்து மாறிக் கொண்டு வந்திருக்கிறது. அவ்வாறுதான் பல துறைமுகங்கள் இருந்த இடமே தெரியாது மறைந்துவிட்டன.

செங்கடலினின்றும் கிழக்கு நோக்கி கப்பல்கள் வரும்போது அம்மாலுமிகள் முதலில் சிந்துநதியின் முகத்துவாரத்தை அடைந்தனர். பின்னர் சௌராஷ்ட்ரா குஜராத் துறைமுகங்களைக் கடந்து தென்னகத்துத் துறைமுகங்களைக் கண்டனர். ஆகையால் அவ்வழிகாட்டியில் இந்தியாவின் தெற்குப்பகுதி தக்ஷிண பேட்ஸ் என்று குறிப்பிடப்படும். இவ்விடத்தில் அந்நூலில் தமிழ்நாடு டாமிரிகா என்று குறிக்கப்படுகிறது.

அவர்கள் முக்கியமாகக் கருதியத் தென்னகத்துத் துறைமுகம் முசிரிஸ்;

அதாவது கேரள மாநிலத்தில் இன்றிருக்கும் பட்டணம்.

அகஸ்தஸ் சீஸர், முதல் நூற்றாண்டின் ரோமநாட்டு அரசன். இவன் காலத்தில் பருவக்காற்றின் உதவியுடன் இந்தியாவுடன் கடல் வழி வணிகம் சீராய் நடந்ததற்குச் சான்று, இவ்வரசன் உருவமுடைய நாணயங்கள் துறைமுகப் பரப்பிலும் உள்நாட்டிலும் கிடைத்ததன் மூலம் தெளிவாகின்றது. ரோமநாட்டு வணிகர்கள் தமது பொருள்களை தென்னிந்தியாவினின்று கீழை நாட்டுப் பொருள்களை, அதற்குத் தகுந்த மதிப்புப் பணத்தை அளித்து விட்டு எடுத்துச்சென்றனர் என்பது இவ்வாறு நாணயவழிச் சான்றுகளால் தெரிகிறது. கோயமுத்தூர் அருகில் 1842 இல் கிடைத்த வெள்ளியாலான 522 நாணயங்களுள், 135 அகஸ்டஸ் நாணயங்கள்; 378 நாணயங்கள் டைபீரியஸ் என்ற ரோம் அரசர்கள் காலத்தவையாகும். மற்றொரு கண்டுபிடிப்பில், கோழிக்கோட்டுக்கு அருகில், கிடைத்தவை எல்லாம் அகஸ்டஸ் காலத்தவை. கி. பி. 20இல், அகஸ்டஸ் அரசின்போது பாண்டிய மன்னனின் தூதர் அங்கிருந்ததாக வரலாறு சொல்கிறது. இவ்விரு நாடுகளுக்கிடையில் சிறந்த முறையில் கடல் வழி வணிகம் இருந்த அதிலிருந்தும் அறிகிறோம். அப்படி கடல் வழி வணிகம் சிறந்திருக்க வேண்டுமெனில் நல்ல துறைமுகங்களும், அவற்றின் மேலாண்மையும் சிறந்திருந்திருக்க வேண்டும் என்பதும் தெளிவாகின்றது.

சோழர்கள் ஆட்சியின் கீழ் இருந்த புகார் என்று வழங்கப்பட்ட காவேரிப் பூம்பட்டினம் மிக முக்கியமானதொரு துறைமுகமாக இருந்தது. சாதாரணமாகக் கப்பல்கள் பளுவாக இருப்பதால் மிதப்பதற்கு ஆழம் தேவை. துறைமுகத்துள் வருகையில் அவற்றைச் சுலபமாகக் கட்டுப்படுத்த இயலாது. இன்றைய துறைமுகங்களில் கூட, வேகத்தைக் கட்டுப்படுத்தியே கப்பல்களைத் துறைமுகங்களுள் இழுகப்பல்களின் உதவியுடன் கொணர்கின்றனர். ஆனால், அன்றே பாய்களைத் தளர்த்தாமலேயே கப்பலகள் துறைமுகத்துள் நுழைய முடிந்ததெனின், அத்துறைமுகங்கள் நல்ல ஆழமும், பெரிய பரப்பளவும் கொண்டவையாய் இருந்திருக்க வேண்டும். அன்றே, பூம்புகார் மிகப் பெரியதொரு துறைமுகமாய்த்தான் இருந்திருக்கும் என்பதைப் புறநானூற்றில், முதுகண்ணன் சாத்தனார், உறுதி செய்கிறார்.

"மீப்பாய் களையாது மிசைபரந் தோண்டாது
புகாஅர்ப் புகுந்த பெருங்கலத் தகாஅர்.."

*(புறநானூறு: 30: 10 -15)*

கூம்புடனே மேலே விரிக்கப்பட்ட பாயை இறக்காமலும், தமது சுமையைக் குறைக்காமலும், கப்பல்கள் துறைமுகத்துள் வந்தன என்பது இப்பாட்டின் பொருளாகும்.

துறைமுகப் பணித்துறையையும், கப்பல் கட்டுமானத் தொழிலையும் நன்கு அறிந்திருந்த தமிழர், அவற்றை நன்முறையில் பராமரித்து வைத்திருக்கவும் கற்றிருந்தனர். வெளிநாட்டினர் கலங்கள் நம் துறைமுகங்களை அடையும் போது, வழிகாட்ட அமைந்திருந்த கலங்கரை விளக்கங்கள் குறித்தும் பெரும்பாணாற்றுப்படை கூறுகிறது.

வானம் ஊன்றிய மதலை போல,
ஏணி சாத்திய ஏற்று அருஞ் சென்னி,
விண் பொர நிவந்த, வேயா மாடத்து
இரவில் மாட்டிய இலங்கு சுடர் ஞெகிழி
உரவு நீர் அழுவத்து ஓடு கலம் கரையும்...

*(347-350)*

**பொருள்:** விண்ணைத் தொடுவது போல உயர்ந்திருக்கும் பெரும் தூணைப் போல கம்பத்தில் (ஏணி வைத்தாலும் ஏற இயலாத உயரத்தில்) சுடர் விட்டு எரியும் ஞெகிழி (பந்தம்) கப்பல்களுக்கு வழிகாட்டும்.

அதே போல, வெளிநாட்டின் கலங்கள் புகார் வருகையில், அம்மாலுமிகள், கப்பலினின்றும் வெளியில் வந்து ஓய்வு எடுத்துக்கொண்டு தங்குவதற்கு மாலுமி இல்லங்கள் (Sailor's rest houses) இருந்தன. கப்பல்களுக்கெனச் செப்பனிடும் பணிமனைகளும், உலர் துறைகளும் அமைக்கப்பட்டிருந்தன. வெளிநாட்டினர் நம் நாட்டைப்பற்றி நல்லெண்ணம் கொண்டு செல்லவேண்டும் என்பதற்காக அவர்களுக்குத் தகுந்த உதவிகளும் தரப்பட்டன என்பன குறித்து பட்டினப்பாலை தெளிவாக்குகிறது.. பட்டினப்பாலையில், தடங்கலேயின்றி, தொடர்ந்து ஓய்வின்றி வணிகப் பணி நடைபெறுவதை கீழ்க்காணும் வரிகள் சொல்லும்.

"நீரினின்று நிலத்துஏற்றவும்
நிலத்தினின்று நீர்ப்பரப்பவும்
அளந்தறியாப் பலபண்டம்
..........................................




PLATE I

புலிபொறித்துப் புறம் போக்கி
மதிநிறைந்த மலிபண்டம்..."

*(பட்டினப்பாலை: 126 - 136)*

ஒரு துறைமுகத்தின் செயல்திறனைக் குறிப்பிடுவதற்கு கப்பல்கள் வந்து, தமது ஏற்றுமதி இறக்குமதி வேலைகளை முடித்துவிட்டுத் திரும்புவதற்கு ஆகும் மொத்த நேரத்தைக் கணக்கிட்டுத்தான் இன்றும் சொல்கின்றனர். இதை (Ship Turn Round Time) என்றுதான் குறிப்பிடுகின்றனர். அதே போல, அங்கேயே சுங்கத்தீர்வை முடித்து அனுப்பப்படும் முறையை நோக்கின், மிகச் சமீப காலத்தில் நமது பெரிய துறைமுகங்களில் அறிமுகப்படுத்தப்பட்ட, ஒற்றை சாளர முறை Single Window System - அன்றே இருந்தது என்றும். தீர்வைகள் செய்யப்பட்ட பொருள்கள் புலிச்சின்னம் பொறிக்கப்பட்டு வெளியில் அனுப்பப்பட்டன என்றும் தெரிகிறது.

இங்கு மதி நிறைந்த என்பதற்குப் பண்டங்களுக்கு உண்டான மதிப்பு என்றும், மலிபண்டம் என்பதற்கு நிறைந்து கிடக்கும் என்றும் பொருள் கொள்ளலாம். முக்கியமாக, பெருந்துறைகளுக்கு (Big Wharfs and Berths) மிக அருகிலேயே, ஏற்றுமதி இறக்குமதி பொருள்களைப் பத்திரமாய் வைக்கவேண்டி, நல்ல விசாலமான கிடங்குகள் அமைக்கப்பட்டிருந்தன என்றும், சுங்கத் தீர்வைகள் அங்கேயே செய்யப்பட்டன என்றும் அவ்வாறு தொடர்ந்து வெளிநாடுகளினின்றும் வணிகத்திற்காகக் கொண்டு வரப்பட்டு, நகர்ப்புறத்தில் விற்பதற்காக விரித்துப் போடப்பட்டிருக்கும் பல வகைப்பொருள்

களும் விவரிக்கப்படுகின்றன. புலி சோழர்களின் சின்னமாகையால் சரக்கு கள் வந்திறங்குகையில் "புலி சின்னம் பொறித்து" வெளியில் அனுப்பப்பட்டன என்றும், அப்போதே சோழர்கள் சுங்க முறையைச் சீரான முறையில் நிர்வகித்து வந்தனர் என்பதும் புலனாகின்றது. தவி ரவும் இன்று அதிகமாகப் போற்றப்படும் சிறப்புப் பொருளாதார மண்டலம் (Special Economic Zones) அன்றே துறைமுகத்தின் அருகிலேயே நடைமுறையில் இருந்ததும் தெரிகிறது.

அதேபோலப் பலவகை முத்துகளும் பவளங்களும் அங்கு விற்பனைக்கு இருப்பதை ஆசிரியர் காட்டுகிறார். அவை மட்டுமல்ல; இன்னும் ஈழத்து உணவு வகைகளும், காழகம் (பர்மா) தந்த நுகர்ச்சிப் பொருள்களும், சந்தனக் கட்டைகளும், அகிற்கட்டைகளும் கூட இங்கு கிடைக்குமாம்.

"நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்
காலின் வந்த கருங்கறி மூடையும்
வடமலைப்பிறந்த மணியும் பொன்னும்
குடமலைப்பிறந்த ஆரமும் அகிலும்,
தென்கடல் முத்தும் குணகடல் துகிரும்
கங்கை வாரியும் காவிரிப்பயனும்
ஈழத்து உணவும் காழகத்து ஆக்கமும்
அரியவும் பெரியவும் நெரிய ஈண்டி
வளம்தலை மயங்கிய நனந்தலை மறுகு."

*பட்டினப்பாலை (185 - 193)*

அரேபியக் குதிரைகள் இறக்குமதி செய்யப்பட்டன என்பதும் மேலே குறிப் பிடப்பட்ட "காலின் வந்த கருங்கறிமூடை" என்னும் தொடர் மூலம் விற்பனைக்கு நிலவழியாக மிளகுப் பொதிகள் வந்தன என்பதும் தெரிகிறது. யவன வணிகர் கப்பல்களில் வந்து, மிளகு வாங்கிச் சென்றனர் என்பதை அகமும் புறமும் உறுதிப்படுத்துகின்றன. இதைத்தான் இன்றைய மேலாண்மையில், Intermodal Transportation என்கின்றனர்

புகார் துறைமுகத்து வணிகத்தை சிலப்பதிகாரமும் தெளிவாக்குகிறது:

"கலம்தரு திருவின் புலம் பெயர் மாக்கள்
வேலைவா லுகத்து விரிதிரைப் பரப்பின்
கூலமறுகில் கொடி எடுத்து நுவலும்
மாலைச்சேரி..."

*(சிலப்பதிகாரம்: கடல் ஆடு காதை 130-133)*

நாடு விட்டு வந்து தமது வணிகப் பொருள்களை விலை கூவி விற்கும் வெளி நாட்டினர், மகிழ்ச்சியுடன் தமது தொழிலைச் செய்தனர். வெளிநாட்டினரைச் சிறப்பாக ஏற்றுக்கொள்ளும் விவரமும் தெரிகிறது. இவ்விவரம் சிலம்பில் இந்திர விழா ஊர் எடுத்த காதையிலும் காணப்படுகிறது.

வேயா மாடமும், வியன்கல இருக்கையும்
மான்கண் காலதர் மாளிகை இடங்களும்
கயவாய் மருங்கில் காண்போர் தடுக்கும்
பயன் அறவு அறிவு யவனர் இருக்கையும்
கலம்தரு திருவின் புலம்பெயர் மாக்கள்
கலந்துஇருந்து உறையும் இலங்குநீர் வரைப்பும்
வண்ணமும் கண்ணமும் தண் நறும் சாந்தமும்,
பூவும் புகையும் மேவிய விரையும்
பகர்வனர் திரிதரு நகர வீதியும்.

*(சிலப்பதிகாரம்; இந்திரவிழா ஊர் எடுத்த காதை)*

பயன் தரும் தொழிலையே கொண்ட யவனர் இருக்குமிடமும், 'கப்பல்கள் தரும் இலாபத்தால், இடம் விட்டு இடம் பெயர்ந்து செல்லும் மக்கள் சேர்ந்து இருக்கும் இடமுமான என்று வருணிக்கையில் அவ்விடத்தின் வணிகப்பெருமை நமக்கு நன்கு புலப்படுகிறது. பல நாட்டுக் கப்பல்களும், துறைமுகத்தில், நங்கூரம் பாய்ச்சி நின்றன. இன்றுகூட நாம் பெரிய துறைமுகங்களில் காணும் காட்சியைத்தான் அன்றே இருந்ததென காட்டுகிறார் புலவர்.

"வெளில்இளக்கும் களிறுபோல
தீம்புகார்த் திரைமுன்துறை,
தூங்குநாவாய் துவன்று இருக்கை.."

*(பட்டினப்பாலை: 172-174)*

என்கிறார்.

நடைமுறையில், தென்னாட்டினர் கடல், கப்பல் சம்பந்தப்பட்ட நல்ல விதி முறைகளைப் பின்பற்றி வந்தனர் என்பதும், இந்திய நாடு முழுதும், ஒருங்கிணைந்த பல சிறந்த கடல் வழி, விதிமுறைகளை பின்பற்றியது என்பதும் சங்க இலக்கியம் மூலம் நமக்குத் தெரியவருகிறது.


உலகில் பயன்படுத்தப்படும் வார்த்தை களில் மிகவும் புராதனமானதொன்று, தமிழைச் சார்ந்தது. இது மயிலுக்கு மேனாட்டார் சொல்லும் துகி என்னும் சொல். இது தோகை என்னும் தமிழ்ச் சொல்லிலிருந்து வந்தது. துறைமுகத் தினின்றும் சுமார் கி.மு.1000இல் மயில் உவரி (Ophir) எடுத்துச் செல்லப்பட்டது என்பதற்குச் சான்று Hebrew text of book of Kings and Chronicles-இல் உள்ளது. ஆகையால் துறைமுகங்கள் வழியாகக் இந்நாட்டுக் கலாசாரமும் மொழியும் மற்ற நாடுகளுக்குச் சென்றடைந்தன.

தமிழகத்து வணிகர் வெளிநாடு களுக்குச் சென்று வணிகம் செய்ததைப் பற்றிய குறிப்புகள் பல உள்ளன. இவையும் அயல் நாட்டுப் பயணிகள் நூல்கள் மூலமும் ஊர்ஜிதப்படுத்தப்படுகின்றன. அயல்நாடு சென்றது மட்டுமன்றி, தமிழர் கள் கடல் மூலமாக, வங்கநாட்டில் அமைந் திருக்கும் தாமரலிப்தி (இது கங்கை, வங்காள விரிகுடாவில் கலக்குமிடம்) துறைமுகம் வழியாகக் கங்கையை அடைந்து, கங்கை நதியில் தமது கலங் களைச் செலுத்தி, வடநாடுகளின் உள் நாட்டுத் துறைமுகங்களில் அவற்றை நிறுத்தி தமது வணிகத்தை அங்கும் நிலை நாட்டினர் என்பதையும் சங்கப்பாடல்கள் மூலம் அறிகிறோம்.

கீழை நாடுகளுடன் சிறந்த கடல்வழி வணிகம் சங்ககாலத்தில் இருந்தது. சாவகம் என்று வழங்கப்பட்ட ஜாவா தீவில் தமிழர்கள் வணிகம் நிமித்தம் சென்ற போதுதான் அங்குள்ள ஒரு தீவு மதுரா என்று வழங்கப்பட்டது. மதுரையினின்றும் அங்கு குடி பெயர்ந்தவரே அப்பெயரை இட்டிருக்க வேண்டுமென அறிஞர்கள் கருதுகின்றனர்.

இந்தியாவைப் போலவே சீனர்களும் இத்தீவுடன் வணிகத்தொடர்பு வைத்திருந்தனர். தமிழர்கள் சாவகம் என்று பெயரிட்ட இதனை வடநாட்டினர் யவதீவம் என்று குறிப்பிட்டனர். அதையே சீனர் 'யெ தீயவோ' என்றனர். சாவகத்தீவு மணிமேகலையில் ஆபுத்திர நாடு எனக் குறிப்பிடப்படுகிறது. அத்தீவின் தலைநகரம் நாகபுரம் என்றும், இரண்டாம் நூற்றாண்டில் அங்கு ஆண்டவன் பூமிசந்திரன் என்று வழங்கப்பட்டான் என்றும் தெரிகிறது.

கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் சாவகத்தீவை அரசாண்ட புண்ணியராசன், அக்காலத்தில், சோழ நாட்டுக் காவிரிப் பூம்பட்டினத்தையும் அதனைச் சூழ்ந்த நெய்தலங்கானலையும் அரசாண்ட நெடு முடிக்கிள்ளியிடம் தூது அனுப்பினான்.



அந்தத் தூது வாணிகத் தொடர்பான தூதாய் இருக்கக்கூடும். சாவகத்திலிருந்து பூம்புகாருக்குக் கப்பலில் வந்த தூதர் சோழனைக் கண்டனர். பிறகு, அந் நகரத்தில் பௌத்த விகாரின் தலைவராய் இருந்த அறவண அடிகளையும் கண்டு, திரும்பிச் சென்றார்கள். இவ்வாறு சோழ அரசனுக்கும், சாவக அரசனுக்கும் நல்லுறவும் நட்பும் இருந்தபடியால் இரு நாடுகளுக்கும் வாணிகம் செம்மை யாக நடந்து வந்தது. சீன நாட்டுக் குறிப்புகளிலிருந்தும் (5, 6, மற்றும் 7ஆம் நூற்றாண்டுகளைச் சேர்ந்தவை) நமது வணிகம் நன்கு நடந்தது எனத் தெரிகிறது.

சீனாவுக்கும் இந்தியாவுக்கும் இடை யிலான நேர்க் கடல் தொடர்பு, ஐந்தாம் நூற்றாண்டிலேயே ஆரம்பித்துவிட்டது. கேண்டன் என்னும் நகரத்தில் கி. பி. 750-லேயே இந்துக் கோவில்களும் இருந்தன; அவை வணிகர்களால் கட்டப்பட்டவை எனத் தெரிகிறது. 9ஆம் நூற்றாண்டில் தெற்கு ஆசியாவின் நாடுகள் தங்களுக்குள் நல்ல கடல் வழி வணிகத்தை நடத்திப் பொருளாதாரத்தில் சிறந்து விளங்கின.

12ஆம் நூற்றாண்டில் சீனாவில் அரசு மாற்றத்தால் அரசியல் நிலை சுங்க் அரசின் போது மாறியது. அவர்கள் வெளிநாட்டு வணிகத்தில் அக்கறை காட்டத் தொடங்கினர். அந்த நேரத்தில் வாய்ப்பை விடாது, சோழர்கள் தம் தூது வர்களை அனுப்பித் தமது தொடர்பைப் பெருக்கிக் கொண்டனர். அப்படி சென்ற ஒரு குழு ராஜராஜனின் ஆட்சி இறுதிக் காலத்தில், மூன்று வருடப் பயணத்திற்குப் பின்னர், சீனாவை 1015இல் அடைந்தது. பிறகு அனுப்பப்பட்ட முதலாம் இராஜேந்திரன் காலத்துக் குழு ஒன்றும், சீனாவை 1033இல் அடைந்தது. அதே போல மூன்றாவது தூதுக்குழு 1077இல் சென்றது. விலையுயர்ந்த கற்கள், மணிகள், தந்தம், முதலியன சீனாவில் முதலில் வரவேற்கப்பட்டாலும், குறைந்துவந்த அந்நியச் செலாவணியால், பின்னர் தவிர்க்கப் பட்டன என்று அறிகிறோம். தொடர்ந்து பதின்மூன்றாம் நூற்றாண்டின் இறுதிவரை, இந்திய சீன வணிகம் செழிப்பாக நடந்து கொண்டு இருந்தது.

பத்தாவது நூற்றாண்டிலிருந்து 12 நூற்றாண்டு வரை சோழர்கள் காலத்தில் வணிகம் இன்னும் சிறப்படைந்தது. அவர்களது கடற்படை, வணிகக் கப்பல் களையும் துறைமுகங்களையும் பாது காப்பாக கவனித்துக் கொண்டிருந்தது. அப்போது நாகப்பட்டினம் ஒரு சிறந்த துறைமுகமாக இருந்தது. அப்போது வணிகக்குழுக்கள் தாமாகவே செயல் பட்டன. கீழைநாட்டிலிருந்து நமக்குக் கிடைக்கும் சான்றுகளிலிருந்து, வணிகக் குழுக்கள் தமது முகாம்களை குவான்ஷூ போன்ற சீன நாட்டுத் துறைமுகங்களில் வைத்திருந்தமையும், தவச் சக்கிரவர்த்தி என்ற சம்பந்தப் பெருமாள் என்ற வணிகர் அங்கே அன்றைய கான் என்ற அரசனால் தரப்பட்ட இடத்தில் சிவன் கோவில் கட்டி அம்மூலவருக்கு கானீஸ்வரன் என்ற பெயர் வைத்தமையையும் கல்வெட்டு கூறுகிறது. இவர்கள் கடல்வழி வணி கத்தைப் பேணி வளர்த்தனர். இதே போல தமிழ் பிராமி எழுத்துகளில் பெரும்பட்டன் என்று பொறிக்கப்பட்ட மூன்றாம் நூற்றாண்டு உரைகல்லும் தாய்லாந்தில் கிடைத்துள்ளது. இன்னும் பல கல்வெட்டுகள் கீழை நாடுகளில் தமிழரின் கடல்வழி வணிகத் திறமையை ஊர்ஜிதம் செய்கின்றன.

மொத்தத்தில், தொன்று தொட்டு இந்தியர்கள், முக்கியமாக தமிழர்கள் தங்கள் துறைமுகங்களை நன்கு பயன் படுத்தி வந்தமையால், பழங்காலத்துத் துறைமுகங்கள் பல சீராகச் செயல்பட்டன என்றும், அவற்றின் மூலம் கடல் வழி வணிகம் சிறந்த முறையில் செயல்பட்ட தென்றும் நமக்கு நன்கு தெரிகிறது.

- **கே.ஆர்.ஏ. நரசய்யா,** வரலாற்று ஆய்வாளர், எழுத்தாளர்.

# நம் பாரம்பரிய வரவு

- சுனில் சேத்தி




அந்தக் கண்காட்சியில் இந்தியாவின் கலைத் திறமைகளை வெளிக்காட்டும் வண்ணம் நாட்டின் பிரபல கலை ஆர்வலர்கள் ஒன்றாகக் கூடினர். ஆம்ப்யேண்ட்ஸ் 2019 என்ற காட்சியமைப் புக்கு இந்தியா இந்த ஆண்டு கூட்டு நாடாக இருந்தது. அதில், இந்தியக் காட்சிக் கூடத்தில், இந்தியாவின் பல தரப்பட்ட ஆடை உருவாக்கல், வடிவாக் கல் ஆகியவை பார்வைக்கு வைக்கப் பட்டு உலக கவனத்தை ஈர்த்தது.


உலகளவில் மிகப்பெரிய வர்த்தகத் தளமான ஆம்ப்யண்ட்ஸ் - 2019இல் எல்லோருடைய கவனமும் இந்தியாவின் மீதே இருந்தது. துணிமணிகளுக்கான சொர்க்கம் என்று அழைக்கப்படும் இந்தியாவின் பலதரப்பட்ட பொருள்கள் காட்சியில் அமைந்தன. இந்த கண்காட்சியில் பேச்செல்லாம் இந்தத் தொழில்களை; உயிர்ப்பிப்பது பற்றியே இருந்தது. இந்திய ஜவுளித்துறை மற்றும் இந்திய அரசின் கைவினைப் பொருள்களுக்கான மேம்பாட்டு கமிஷனர் அலுவலகம் மெஸ்ஸே ஃப்ராங்பர்ட் இந்தியாவோடு இணைந்து இந்தக் கண்காட்சி அரங்கங்களில் ''எதிர்காலம் கை வேலைப்பாடே'' என்ற தலைப்பில் வடிவமைக்கப்பட்டிருந்தது. இந்தக் காட்சியில் இந்தியாவின் பாரம் பரியமிக்க துணி வகைகளும் சிறந்த கலைஞர்களும், வடிவமைப்பாளர்களும் இன்றைக்குத் தேவையானவற்றைப் படைத் திருந்தார்கள். இந்தியாவின் வியப்பூட்டும் நெசவுகள், ஜவுளி செயல்முறைகளின் தொழில்நுட்பத்தை விளக்குவதோடு மட்டுமல்லாமல், இந்திய கைவினை ஞர்களையும், வடிவமைப்புகளையும் உலகத்தின் பார்வைக்கு எடுத்துச் சென்றனர்.

இந்த ''இந்தியக் காட்சிக்கூடம்'' இந்தியாவின் பாரம்பரிய புகழ்மிக்க ஆழமான படிக்கட்டுக்கள் கொண்ட கிணற்றைப் போல வடிவமைக் கப்பட்டிருந்தது. பயன்பாட்டிற்கு ஏற்ற வண்ணம் நாடெங்கிலும் டெல்லியில் உள்ள அக்ரசெங்கிபாவ்லி மற்றும் ஜோத்பூரிலுள்ள பிர்கா பாவ்ரி போன்ற படிக்கட்டு கிணறுகள் பிரபலமானவை. இன்றும் பயனுள்ள இந்தக் கிணறுகள் பல காலங்களுக்குப் பின்னும் நிலைத்து நிற்பதால் இதன் வடிவமைப்பு மிகவும் வியக்கத்தக்கதாகும்.

இந்த இந்திய காட்சிக்கூடம் இந்தியாவிற்கே உரித்தான புகழ்மிக்க கலைஞர்களால் உருவாக்கப்பட்டது, இந்தியப் பாரம்பரியத்தை வலியுறுத்துவது.

இன்றைய நவீன வீட்டுக்கூடத்தில் உள்ள புழங்கு பொருள்களில் பழங்காலத்து ஒரிஸ்ஸா மாநிலத்து 'இக்கட' வடிவமைப்பையும், நவீன வடிவமைப்பையும் கலவை செய்த ''நீல்'' சோபா செட்டுக்கள், பண்டைய கலைப்பொருள்களின் நயத்தை இன்றைய நவீன யுகத்திற்கான பயன்பாடாகப் படைத்திருப்பதைக் காணலாம். இந்தியப் பொருள்களை இனிவரும் காலங்களுக் கேற்ப வடிவமைக்க 'வனம்' என்ற காட்டுப்பகுதியை குறிக்கும் பகுதியில்





தனித்தன்மை கொண்ட இந்திய மரங் களைப் பயன்படுத்தி பலவிதமான வண்ணங்களில் படைப்புகள் இருந்தன. அதில் ஒரு அருமையான படைப்பு மரப் பொருள்களில் உள்செதுக்கி வைக்கப் பட்டுள்ள மிகவும் துல்லியமான கலை வேலைப்பாடுகளும் உருவாக்கமும் ஆகும். ''வனம்'' பகுதிக்கு நேர்மாறாக ''ரச்சனா'' பகுதியில் பலவகையான துணிகளைக் கொண்டு உருவாக்கிய படைப்புகளைக் காணலாம். ஒவ்வொரு படைப்பும் இயற்கையின் ஒரு முகத்தைக் காண்பதைப் போல் இருக்கும். இதற்கான கற்பனை இயற்கையில் காணப்படும் பல வடிவங்களும், மாறுதல்களும் இந்த ஆடைகள் தயாரிப்பதில் பிரதிபலிக்கப் பட்டுள்ளன.

''ரச்சனா'' போலவே ''அமாயா'' பகுதியில் உலோகங்களால் உருப் பெற்றுள்ள பலவகையான கைவினைப் பொருள்களைக் காணலாம். இங்கு, இன்றைய நவீன வீட்டிற்குத் தேவைப் படும் பலவகையான பொருள்கள் மிகத் துல்லியமான வடிவங்களில் பலதரப்பட்ட வகைகளில் செய்யப்பட்டு காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன.

ஐந்தாவது பகுதியில், இருக்கும் இடத்தை பலவகைகளில் பெரிதாக்கியும், மாற்றியும் அதிசயத்தக்க வடிவங்களில் உருவாக்கப்பட்டிருந்தது. பாரம்பரிய இந்தியக் கலைஞர்களின் அனுபவத்தைக் கொண்டு புது முயற்சியாக கையாலேயே ஊதி உருவாக்கப்பட்ட கண்ணாடியில் செய்யப்பட்ட அழகிய மயில் வடிவத்தி லான கூடம் வைக்கப்பட்டிருந்தது. அங்கிருந்த தூண்கள் ஊதி செய்யப்பட்ட கண்ணாடி வகைகள் பித்தளைகளால் அலங்கரிக்கப்பட்டு இருந்தது, நாம் கூறிய படிக்கட்டு கிணறுகளின் வடிவமைப்பால் உந்தப்பட்டதாகும்.

இந்த இந்தியக் காட்சிக்கூடத்தில், மிகப்பிரபலமான கைவினைஞர்கள் வீற்றிருந்தனர். அவர்களில் கானி சால்வையை மிகுந்த கலை உணர்வோடு நெய்த நசீர் அகமத் மீர் இருந்தார். பரம்பரையாக தன்னுடைய முன்னோர்கள் கற்றுக்கொடுத்த மீனாகாரி எனப்படும் உலோக கைவினைப் பொருள்களை உருவாக்குவதில் வல்லவரானவரும் 2015இல் 'ஜீல்ப் குரு விருதைப் பெற்ற வருமான இந்தர்சிங் இருந்தார். இவர், உலோகப் பூச்சில் புகழ் பெற்றவர். இவரைப் போலவே, 2016இல் தேசிய விருது பெற்ற ராஜஸ்தானை சேர்ந்த அமிர்த்லால் செருவியா வீற்றிருந்தார். அவர், நவரத்தினக் கற்களை வெட்டி, செதுக்கி, மெருகூட்டுவதில் வல்லவர். மேற்கு வங்க மிதுனபூர் மாவட்டத்தில் விளையும் மிக மெல்லிய புல்களில் பாய்கள் தயாரிப்பதில் திறமை கொண்ட தேசிய விருது பெற்ற தபஸ்குமார் ஜானாவும் இருந்தார்.

திறன்மிகு கலைஞர்கள், இன்றைய உருவாக்கல் மற்றும் கலைப்பொருள்;கள் ஆர்வலர்களுடன் ஜவுளித்துறை அமைச்சகம் கூட்டாக உருவாக்கிய இந்தத் திட்டத்தில் இந்தியக்கலை, வடிவமைப்பு மற்றும் பண்பாட்டின் வெளிப்பாடு காணப்பட்டது. தொடர்ந்து பயன்படுத்தப்படக்கூடிய துணிவகைகள் மற்றும் தொழில்நுட்பம் ஆகியவை இந்த கலைப் பொருள்களை பறைசாற்றுவது மட்டுமல்லாமல் இந்தியக் கைவினை ஞர்களுக்கு நல்ல வாய்ப்புகளையும் உருவாக்கித் தந்தது. இங்கு காட்சிக்கு வைக்கப்படடுள்ள பொருள்கள் எங்கு உருவாக்கப்படுகின்றன என்ற உற்பத்தி இட அடையாளச் சான்றும் வைக்கப் பட்டிருந்தது. உருவாக்கப்பகுதி சான்று பதிவாளரால் நிர்வாகிக்கப்படும் இந்த முறையில் பல கைவினைஞர்களின் அறிவுசார் சொத்துரிமை காக்கப்படுகிறது.

இந்தக் கண்காட்சி பரவலான இந்திய மனித வளத்தைப் பறைசாற்றுகிறது. இதனால், சமூகப் பொருளாதார சீர்திருத் தங்களையும் மேற்கொள்ள இயலும். பழமையிலிருந்து புது யுகத்திற்கு பயன்படும் பொருள்கள் நமக்குப் பெருமையையும், பழம் நினைவு களையும், எதிர்காலத்திற்கு புதிய நம்பிக்கையையும் அளிக்கின்றன. கைவினைஞர்கள் இந்தியாவின் கலைப் பண்பாட்டைப் போற்றிப் பாதுகாப்பவர்கள் என்பதையும், எதிர்காலத்தில் அவை தழைத்து புதுப்பொலிவு பெறும் என்ற நம்பிக்கையையும் ஊட்டியுள்ளது.

இந்த ''இந்தியக் காட்சிக்கூடம்'' பெரு வாரியான மக்களால் பாராட்டப்படுவதுடன் உலகெங்கிருந்தும் வந்திருக்கும் நுகர் வோரையும் கவர்ந்துள்ளது. ●

- **சுனில் சேத்தி**, நிறுவனர், சுனில் சேத்தி வடிவமைப்புக் கூட்டமைப்பு.

# வடகிழக்கில் நெசவுத் தொழில் மேம்பாடும் வளர்ச்சியும்

- ஜே.வி.மணிஷா பஜாஜ்

இந்தியாவின் மிகப்பழமையான தொழில்களில் ஒன்று நெசவுத் தொழில். பலவகையான பண்பாடுகள், பாரம் பரியங்களோடு இந்தத் தொழில் உள் ளார்ந்து பின்னிப் பிணைந்திருக்கிறது. நமது தேசத்தின் பன்முகத் தன்மை யினை நெசவுத்தொழில் பிரதிபலிக்கிறது. இந்தத் தொழிற் குடையின் கீழ் பல பிரிவுகள் அணிவகுத்து நிற்கின்றன. கைத்தறி ஒரு புறம் முறை சாராத பிரிவாகவும் இன்னொரு புறம் தீவிரமான அளவில் மூலதனம் தேவைப்படும் தொழிலாகவும் இருந்து வருகிறது. சணல், பருத்தி உற்பத்தியில் உலக அளவில் மிகப்பெரிய நிலையில் இருப்பதும், பட்டு உற்பத்தியில் இரண் டாவது பெரிய தேசமாக இருப்பதும் இந்தியாவின் மிகப்பெரிய பலமாகும்.

இந்தியத் தொழில்களில் ஏழு சதவீதம் ஆடைத்தொழிலாகும். இந்தியாவின் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தியில் இரண்டு சதவீதமும் தேசத்தின் ஏற்றுமதி வருவாயில் 15 சதவீதமும் இந்தத் தொழில் ஈட்டியளிக்கிறது. 2017 18ஆம் நிதியாண்டில் 39.2 பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பிற்கு இந்தியா ஆடை ஏற்றுமதி செய்துள்ளது.

உலகத் தர மதிப்பில் ஆடை ஏற்று மதியில் உலகிலேயே இரண்டாவது இடத்தில் இந்தியா இருக்கிறது. இந்திய ஆடைகளுக்கான மிகப்பெரிய சந்தை ஐரோப்பிய யூனியன் ஆகும். அதிகமாக ஆடைகளை ஏற்றுமதி செய்துவரும் நாடு அமெரிக்காவாகும். 2016-17இல் ஐரோப்பிய யூனியனுக்கு இந்தியாவின் ஏற்றுமதி பங்களிப்பு 25 சதவீதமாகும்.

கைத்தறிப் பிரிவிலும், மில் பிரிவிலும் ஆடைத்தொழிலில் இந்தியா வலிமையாக இருக்கிறது. கைத்தறி, கைவினை போன்ற பாரம்பரிய உற் பத்திப் பிரிவுகள் ஆடைத்தொழில் வளர்ச்சிக்கு மிகப் பெரிய பங்களிப்பை செய்திருக்கின்றன. உண்மையில் இந்தியாவின் கைவினைப் பிரிவு மிக அதிகமான பேருக்கு வேலை வாய்ப்பு அளிப்பதுடன் ஏற்றுமதியிலும் கணிசமான பங்களிப்பை செய்கிறது.

**இந்திய ஆடைத்தொழில் துறையின் முக்கியமான சில சுட்டிகள்:**

- சர்வதேச சந்தையில் 61 சதவீதத்தை இந்தியா செயற்களமாகக் கொண்டி ருக்கிறது.
- இந்தியா உலகின் மிகப்பெரிய சணல் உற்பத்தி நாடு ஆகும்.
- உலகநாடுகளில் மூன்றாவது பெரிய பருத்தி உற்பத்தி நாடு இந்தியா.
- உலக அளவில் பருத்தி இழைத் தொழிலில் 25 சதவீத பங்களிப்பை செய்கிறது.
- உலக அளவில் பருத்தி இழைகள், ஆடைகள் உற்பத்தியில் 12 சதவீத அளவுக்கு இந்தியா பங்களிப்பு செய்கிறது.
- உலகின் இரண்டாவது பெரிய பட்டு உற்பத்தியாளர் இந்தியா. உலகத்தின் பட்டு உற்பத்தியில் 18 சதவீதம் இந்தியாவில் உற்பத்தியாகிறது.

சுருங்கக் கூறுவதாயின், இழைகள் ஏற்றுமதியில் இந்தியா உலகின் இரண் டாவது பெரிய தேசமாகும். நுட்பமாகப் பார்த்தோமானால் இந்தியாவின் ஆடைத்தொழில் வளர்ச்சிக்கான பங்களிப்பிற்கு வடகிழக்கு மிகப்பெரிய பங்களிப்பாளராக உள்ளது.


மனதில் அடுத்து எழக்கூடிய கேள்வி ஆடைத்தொழிலுக்கு மாநிலங்கள்



என்ன பங்களிப்பு செய்யமுடியும் என்பதுதான்.

இந்தியாவின் உள்நாட்டு ஆடைப் பண்பாட்டில் ஒரு தனித்துவமுள்ள முக்கியமான பங்கினை வடகிழக்கு மாநிலங்கள் செய்கின்றன. வடகிழக்கு இந்தியாவின் மலைப்பாங்கான பகுதிகளிலும், பள்ளத்தாக்குப் பகுதிகளிலும் வசித்து வரும் மக்கள் ஒரே மங்கோலாய்டு இனத்தை சேர்ந்தவர்களாக இருந்தபோதிலும், சூழல் பண்பாடு, இனமொழி தனிச்சிறப்புகளில் பல்வகைமைத் தன்மையை வெளிப்படுத்துகின்றனர். ஆயினும், ஒவ்வொரு இனக்குழுவும் தனக்கே உரிய தனி வகையான பாரம்பரியம், வரலாறு, சமூகக் கட்டமைப்பு, தொன்மங்கள் ஆகிய வற்றைக் கொண்டிருக்கின்றன. இவர்கள் தயாரிக்கும் துணிகளும், ஆடைகளும் இந்த இனக் குழுவினர்களுக்கிடையே ஒற்றுமையையும், வேற்றுமையையும் வெளிப்படுத்தி, பண்பாட்டுக்கூறுகளை அடையாளம் காண உதவுகின்றன. ஒரு இனக்குழுவின் பாரம்பரிய உடை, அந்த இனத்தின் அடை யாளத்தைக் காட்டுகிறது. இனக்குழு ஒவ்வொன்றிற்கும் அதற்கே உரித்தான ஆடை வடிவமைப்புகளும், நிறக் கலவைகளும் இருக்கின்றன. வடகிழக்கு இந்திய மக்களின் மதம் சடங்குகள் ஆகியவற்றோடு தொடர்புடைய பலவிதமான வடிவமைப்புகளும், மையக்கருத்துகளும் நிலவுகின்றன. நெசவு செய்யும் முறைகளும் கூட வேறுபடுகின்றன. ஆடைகள் நெய் வதற்கு பயன்படுத்தப்படும் பொருள்கள் பருத்தி, கம்பளி, என்டி, முகா, பழத் தோல், விலங்குகளின் முடி என்று இனங்களுக்கு ஏற்றபடி பலவாறாக இருக்கின்றன. உண்மையில் கைவினை களும், ஆடைத்தொழிலும் இங்கு முக்கிய கவனம் செலுத்தவேண்டிய துறைகளாக இருக்கின்றன. வடகிழக்கில் ஜவுளித் தொழிலை நவீனமயமாக்கி வளர்த்தெடுப்பதற்கு முன்னுரிமை தரப்பட்டு வருகிறது.

வடகிழக்கு இந்தியாவின் கைவினை பாரம்பரியத்தைப் புரிந்துகொள்வதற்கு நிலவமைப்பு, மக்கள், அவர்களின் வாழ்க்கை முறை ஆகியவற்றை ஒருவர் புரிந்து கொண்டாக வேண்டும். இந்தியாவின் மற்ற பகுதிகளில் இருப்பதைப் போல இங்கு கைவினைக் கலைகள் பொழுது போக்கிற்காகவோ, வணிக நோக்கத்திற்காகவோ இருப்பதில்லை. மாறாக கைவினை மக்களின் வாழ் வோடும், வழக்கங்களோடும் இரண்டறக் கலந்து இருக்கிறது. பலவிதமான பாரம்பரிய கைவினைகள் இந்தப் பகுதியில் அதிகம் இருக்கின்றன. இவை உள்ளூர் நிலைமைகளுக்கு ஏற்ப அமைந்திருக்கின்றன.



### அனைத்து மாநிலங்களையும் ஒன்றி ணைக்கும் பொதுவான கூறு

நெசவு இது ஆந்திரப்பிரதேசம், நாகாலந்து, மணிப்பூர், அஸ்ஸாம் பள்ளத்தாக்கு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த பழங்குடி மக்களினத்தவர் நெசவை ஒன்று போலவே கடை பிடிக்கின்றனர். அருணாசல பிரதேசம், மேகாலயாவில் உள்ள ஒரு சில பழங் குடிகள் மட்டுமே நெசவு செய்வதில்லை.

மேகாலயா மிக உயரிய தரத்தில் நெசவு செய்வதற்கு பெயர் பெற்றது. அருணாசலப்பிரதேச நெசவாளர்கள் மிகவும் அழகிய நிறக்கோர்வைகளுக்குப் புகழ் பெற்றவர்கள்.

நாகர்களின் சால்வைகள் அங்கமி நாகா என்று அறியப்படுகின்றன. இவற்றின் பிரகாசமான வண்ணங்கள், பூத்தையலில் உருவாக்கப்பட்ட விலங்குகளின் வடிவங்களும், பழங்கால நாகர்களின் கதைகளைப் பொதுப்பட வெளிப்படுத்தும் துணிவகைகளும் மிகவும் புகழ் பெற்றவை. நாகாலாந்தின் எண்ணற்ற பழங்குடி இனங்களின் பாரம்பரியப் பாங்குகளை நவீன கைத்தறி உடைகள் விதவிதமான நிறங்களில் காட்சிப்படுத்துகின்றன.

திரிபுராவில் பாரம்பரியமாக உள்ள ஒவ்வொரு வீட்டிலும் கைத்தறி இருக்கும். உள்ளூர் மக்கள் ஆடை களை சந்தைகளுக்கு சென்று வாங்குவது அபூர்வம். ஒவ்வொரு ஆடையும் மனங்கொள்ளும் விதத்தில் நெய்யப்பட்டு பூத்தையல் வேலைகளால் அலங்கரிக்கப்பட்டிருக்கும். திரிபுரா கைத்தறித் துணிகளின் கவர்ந்திழுக்கும் அம்சம் பல்வேறு நிறங்களின் சிதறலில் குறுக்கும், நெடுக்குமாக அமைந் திருக்கும் பட்டைகளாகும். வடகிழக்கில் ஆடைகள் நெய்பவர்கள் பெண்களே ஆவர்.

இந்தியாவின் மிகச் சிறந்த பட்டுப் பொருள்களை உற்பத்தி செய்யும் ஆற்றல் வடகிழக்கு மாநிலங்களுக்கு இருக்கிறது. ஏற்றுமதி செய்யக் கூடியதாகவும், வடகிழக்கு மாநிலங் களின் பொருளாதார நிலையை உயர்த்தக் கூடியதாகவும் பட்டாடைகள் இருக்கின்றன. வடகிழக்கை உலகத்தின் பண்பாட்டு வரைபடத்தில் இடம் பெற வும் செய்கின்றன. இந்தியாவில் பட்டு அதிகம் உற்பத்தி செய்யும் மூன்றவது பெரிய பகுதி வடகிழக்காகும். மாறாக தேசத்தில் மல்பரி பட்டுக்களை 100 சத வீதம் உற்பத்தி செய்வது மணிப்பூராகும். மல்பரி பட்டு உடைகளின் உற்பத்தில் திரிபுரா கவனம் செலுத்தி வருகிறது.

“அஸ்ஸாமிய பெண்கள் துணிகளில் தேவதைகளின் கதைகளை வரைகின்றனர்” என்று காந்தியடிகள் கூறினார். அழகான பட்டிற்கு பெயர் பெற்ற அஸ்ஸாமில் பலவிதமான பட்டாடைகள் நெய்யப்படுகின்றன. முகா பட்டு சிறப்பு மிக்கது, அதிகம் விரும்பப்படுவது. நெசவு தெரிந்த பெண்ணாக இருப்பது திருமணத்திற்கு ஒரு முக்கியமான தகுதியாக பழங்காலத்தில் கருதப்பட்டது. இன்றளவிலும் கூட அஸ்ஸாம் பழங்குடியினரின் அன்றாட வாழ்க்கையோடு நெருக்கமாகப் பின்னிப் பிணைந்திருப்பது நெசவாகும். இந்தியாவிலும், உலகத்திலும் இது பெரிதும் மதிக்கப்படுகிறது.

மூங்கில், பிரம்பு கலைகள் வடகிழக்கில் பல மாநிலங்களில் காணப்படும் மற்றொரு பாரம்பரியக் கலையாகும். மூங்கில் வளர்ப்புக்கு உகந்த சூழ்நிலையை இது உருவாக்கி அளிக்கிறது. மிசோரத்து மக்கள் இந்தக் கலைக்காக பெருமிதம் கொள்கின்றனர். கூடைகள் நெய்வதில் திறமையுடைவர்கள் பலவிதமான கூடைகளை நெய்கின்றனர். அவற்றின் மீது பலவிதமான வடிவங்களையும் பதிய வைக்கின்றனர்.

நாகலாந்தில் உள்ள 16 பழங்குடியினத்தவர்களில் பெரும்பாலானவர்கள் மரம், உலோகம், மூங்கில் ஆகியவற்றைக் கொண்டு உருவாக்கப்படும் கைவினைக் கலைகளில் ஈடுபட்டு வருகின்றனர். நாகாலாந்தின் பெண்கள் மூங்கிலிலும், பிரம்பிலும் மணிகள், ஓடுகள், இறகுகளை அழகுறப் பதித்து பகட்டும், அழகும் மிகுந்த வண்ணமயமான அணிகலன்களை உருவாக்குகின்றனர்.

அஸ்ஸாமியர்களின் வாழ்க்கை மூங்கிலையும், பிரம்பையும் சுற்றியே சுழன்று வருகிறது. இவை இரண்டும் இங்கு ஏராளமாகப் பயிராவதால் பெரும்பாலான வீட்டு உபயோகப் பொருள்கள், கருவிகள், உதிரிப் பொருள்கள் யாவும் இவற்றைக் கொண்டே உற்பத்தி செய்யப்படுகின்றன. மூங்கிலினால் அமைக்கப்படும் பாரம்பரிய நிழற்கூரையான ஜாப்பி மிகவும் முக்கியமான மூங்கில் பொருளாகும். கி.மு.642இல் இங்கு வந்த சீனப்பயணி யுவான் சுவாங்கை வரவேற்பதற்கு இந்த கூரை அமைக்கப்பட்டிருந்தது.

தரைவிரிப்புகள் தரைவிரிப்புகள் நெய்யும் பழங்கால முறையை சிக்கிமில் நீங்கள் பார்க்கமுடியும். ‘பூட்டியா’ இனத்தவர்கள் இதனைச் செய்கின்றனர். தரைவிரிப்புகளில் சிக்கலான வடிவங்களை அமைப்பதற்காக மிகவும் கடினமாக இவர்கள் உழைக்கின்றனர். அருணாசலப்பிரதேசத்தில் மூன்று முக்கியமான பிரிவினர் இக் கைவினைகளில் ஈடுபட்டு வருகின்றனர். ஒவ்வொருவரும் தனித்தனி விதமான கலை வடிவங்களை உருவாக்குகின்றனர். பிரகாசமான வண்ணமயமான பூ வடிவங்களும், டிராகன் உருவமும் கொண்ட தரைவிரிப்புகள் அருணாசலப் பிரதேசத்தைச் சேர்ந்தவை. அண்மைக் காலங்களில் இவை அதிகம் ஏற்று மதியாகின்றன. இது பெண்களுக்கு வாழ்வாதரமாக அமைகிறது.

மரம், உலோகப்பொருள்கள் இந்தியாவின் உண்மையான கலை வடிவ அடையாளமாக இவை இருக்கின்றன. சிக்கிம் மரசிற்ப வேலைப்பட்டுகளில் சிறந்து விளங்குகிறது. சிக்கிமில் அழகிய புத்த மத மடங்கள், பாரம்பரிய கட்டடங்கள், ஆலயங்கள், கட்டடக்கலை அமைப்புகள் மிகவும் அதிகமான எண்ணிக்கையில் இருக்கின்றன. இவற்றில் குறியீடுகளும், உருவங்களும் மரங்களின் செதுக்கப்பட்டுள்ளன.

மர சிற்பங்கள் அருணாசல பிரதேசத்தின் உள்ள பல்வேறு பழங்குடியின மக்களின் பண்பாடு, பாரம்பரியம் இவைகளுடன் தொடர்புடையதாக இருக்கிறது. இங்கு இவைகளுக்கு தனிப்பட்ட சிறப்பிடம் உண்டு.

மிகச் சிறப்பான மர வேலைப்பாடுகளில் சில நாகாலாந்தின் வான்சோ, கொன்யாக், போம் இனப் பழங்குடியினரிடமிருந்து வந்திருப்பவை. மனித உருவங்கள், யானை, இருவாச்சி குருவி, புலி ஆகியவற்றின் உருவங்களும் நுட்பமாக செதுக்கப்பட்டுள்ளன. பொருத்தமான மரங்களைத் தேர்ந்தெடுப்பதற்கு இவர்கள் மிகவும் கடினமான முயற்சிகளை மேற்கொள்கின்றனர். மர வேலைப்பாடுகள் இவர்களின் மதம், நம்பிக்கைகள் ஆகியவற்றுடன் தொடர்புடையவையாக இருக்கின்றன. ஈட்டி போன்ற ஆயுதங்களுடன் நாகர்களுக்கு இருக்கும் தொடர்பு காரணமாக நாகர்களின் கலை, கைத்திறன்கள் உலோக வேலைப்பாடுகளில் சிறப்பாக வெளிப்படுகின்றன. ரெங்காமா பழங்குடியினர் மிக சிறந்த வேலைப்பாடுகளுடன் கூடிய அலங்காரமான அம்புகளையும், பிற வகை உலோகக் கருவிகளையும் உருவாக்குகின்றனர்.

பலவிதமான பாத்திரங்கள், நவீன பாணியில் அமைந்த பொருள்கள் அஸ்ஸாமில் உருவாகின்றன. தங்கம், வெள்ளி, செம்பு ஆகிய உலோகங்களில் வேலைப்பாடுகள் செய்யப்படுகின்றன. சமீப காலங்களில் பல புதிய பகுதிகளும், புதிய மனிதர்களும் இக்கலைகளில் ஈடுபட்டு வருகின்றனர். அழகிப் போட்டிகளில் மணிப்பூரைச் சேர்ந்த வடிவமைப்பாளர் உருவாக்கிய கைவினை நகைகளை அணிந்து பெண்கள் பங்கேற்றனர். சில வடிவமைப்பாளர்கள் உலகப் புகழ் பெற்று விளங்குகின்றனர். புது பாணி வடிவமைப்புகளை உருவாக்கிவரும் அத்சு செகோஸ் என்பவர் பழங்குடியினர் உடைகள், அவற்றின் நிறங்கள், வடிவங்களைத் தழுவி நவீன முறையில் வடிவமைப்புகளை செய்து வருகிறார்.

வடகிழக்கின் அனைத்து மாநிலங்களிலும் கைவினைக் கலைத் தொழிலில் மிக அதிகமான வரவேற்பைப் பெற்று வருகிறது. இந்தியாவின் மற்ற மாநிலங்களை ஒப்பிடும் போது சாதகமான முன்னேற்றங்கள் தெரிகின்றன. வளர்ச்சிக் கதையின் தொடக்கம் தான் இது. இந்த வளர்ச்சிக்கு ஆதாரமாக ஆடைத் தொழில் இருக்கப்போவது நிச்சயம். ●

- **ஜே.வி.மணிஷா பஜாஜ்**, 30 ஆண்டுகளுக்கும் மேலாக தொலைக்காட்சியில் பணிபுரிந்தவர், எழுத்தாளர்.

# மீநுண் அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

- ஜே. குமார்


அறிவியல் மற்றும் தொழில் நுட்ப வளர்ச்சி ஒரு தேசத்தின் பொருளாதாரம் மற்றும் மக்களின் அடிப்படைத் தேவைகளை முன்னற்றுவதில் மிக முக்கிய பங்கு வகிக்கிறது. 1958இல் ரிச்சர்ட் பைமன் என்னும் நோபல் பரிசு பெற்ற ஒரு இயற்பியல் பேராசிரியர் ஒரு குண்டுசி முனையில் 10 கிறிஸ்துவ பொதுமறையையும் சேமித்து வைக்க இயலும் என அறிவித்தார். இந்த அறிவிப்பு முறையான அறிவியல் கோட்பாடுகளுக்குள் அவர் மேற்கொண்ட கணக்கீடு ஆகும்.


நானோ என்கின்ற சொல்லை ஒரு ஜப்பானிய அறிவியல் வல்லுநர் உலகுக்கு அறிமுகப்படுத்தினார். அதாவது நம் தலை முடியின் விட்டம் கிட்டத்தட்ட 100 மைக்ரான் அந்த விட்டத்தை ஒரு இலட்சமாகப் பிரித்தால் அந்த அளவீடு ஒரு நானோ மீட்டர் எனப்படும் ($10^9$ மீட்டர்). நானோ தொழில்நுட்பம் சமீப காலங்களில் மின்னணுவியல் (Electronics), இயந் திரவியல் (Mechanical), மருத்துவம் (Medical), உயிரியல் (Biotechnology) என்ற அளவில் மிக முக்கியமான பங்களித்துள்ளது.

20 வருடங்களுக்கு முன்பு ஒரு கணினி சேகரித்த தகவல்கள் அதன் செயல்பாடு மக்களின் தொழில் நுட்பத்தை சார்ந்து அமைந்தது. இன்று நாம் அன்றாடம் பயன்படுத்தும் கணினிகளின் ட்ரான்ஸிஸ்டர்களின் வாயில் அகலம் (gate width) நானோ மீட்டர் எனப்படும் மீநுண் அளவில் உள்ளது. இதே போல் இயந்திரவியல் சார்ந்த பொருள்களை வடிவமைக்க ஒரு உலோகம் அல்லது அலோகத்தின் வெளிப்பரப்புகளின் நானோ தொழில் நுட்பம் சார்ந்த இலகுவாக கடினமான பொருள்களாக மாற்றி அமைக்க முடியும்.


உதாரணமாக ஒரு மீள் மீட்டர் கன பரிமாணம் கொண்ட ஒரு உலோகம் அல்லது அலோகத்தை நானோ தொழில்நுட்பத்தின் மூலம் ஒரு கோடி துகள்களாக மாற்றும்போது ஒரு மீள் மீட்டர் க்யூப் என்பது (6 மில்லி மீட்டர் சதுரம்) மேற்பரப்பிலிருந்து 6 கோடி நானோ மீட்டர் என்கின்ற அளவாக மாறுவதால் மேற்பரப்பு மற்றும் ஒரு பொருள் கனபரிமாணத்தின் விகிதாச்சாரத்தில் 6 கோடி அளவில் உயர்கின்றது. எனவே ஒரு சாதாரண துகளின் கடினத்தன்மை மிக உயர்ந்த அளவில் கடினத்தன்மை வாய்ந்ததாக மீநுண் தொழில் நுட்பம் வாயிலாக மாற்றியமைக்க ஏதுவாகிறது.

மேலும் (Biotechnology) உயிரியல் தொழில் நுட்பத்தில் மீநுண் தொழில் நுட்பம் மிக முக்கிய பங்கு வகிக்கிறது. ஒரு மூலக்கூறினை வடிவமைத்து அதனுடைய வேதியியல் பங்குகள் குறிப்பிட்ட உடலின் பகுதிக்கு செல்ல வழி வகை செய்கிறது. இதனால் இலக்குகள் நோக்கிய மருந்து செல்லும் முறை (Target Drug Delivery) என அழைக்கின்றனர். உதாரணமாக இருதயம் தொடர்பான ஒரு நோய் ஏற்படும் பொழுது, அதற்கு மாத்திரைகள் உட்கொள்ளும் பொழுது, அது ஒரு சில இடங்களுக்குச் சென்று பக்க விளைவுகளை ஏற்படுத்துகின்றது. மேலும் சிறுநீரகம் தொடர்பான பிரச்சினைகள், சர்க்கரை நோய் போன்றவற்றிற்கு நாம் உட்கொள்ளும் மாத்திரைகள் / மருந்துகளின் அளவு சரியான முறையில் இல்லாமல் அதிக மாக உட்கொள்ளும்பொழுது அது உடலின் தேவையற்ற பகுதிகளுக்குச் சென்று பல்வேறு விளைவுகளை ஏற்படுத்துகிறது. இத்தகைய தேவையற்ற மருந்து உட்கொள்ளும் முறையை தவிர்ப்பதற்காக மீநுண் தொழில் நுட்பம் மூலமாக மூலக்கூறுகளை வடிவமைத்து அதனை மிக குறைந்த அளவில் உடலில் செலுத்த குறிப்பிட்ட உடல் பாகத்தினுள் சென்று அடையாமல் செயல்படுகிறது. இதனை செய்ல்பாட்டு பொருள்கள் (Functional Materials) என்றும் அழைக்கிறோம். இந்த தொழில் நுட்பம் உயிரியல் வழி முறை மட்டுமன்றி பல்வேறு தொழில்





நுட்பத்தில் பயன்படுத்தப்படுகிறது. உதாரணத்திற்கு சூரிய ஒளியிலிருந்து மின் உற்பத்திக்கென சூரியத் தகடுகள் (Solar Panel) தொழில் நுட்பத்தில் உருவாக்கப்படுகிறது. இதன் வாயிலாக குறைந்த அளவில் தேவையான பொருள்கள் பயன்படுத்தி செயல் திறன் வாய்ந்த சூரிய தகடுகள் உருவாக்கப் படுகிறது. மேலும் இத்தொழில் நுட்பத்தின் வாயிலாக பல்வேறு அடுக்குகளாக உருவாக்கப்படும் மின் தகடுகள் விண்வெளிக் கலன்களில் செயலாக்குவதற்கு பயன்படுத்தப் படுகிறது. நம்முடைய அன்றாட வாழ்வில் சந்திக்கும் பல்வேறு சவால்களுக்கு சூரியத் தகடுகள் நல்ல சாதனங்களை அளிக்கிறது. இன்றைய வானளாவிய கட்டிடங்களுக்கு வெளிப்புறத் தோற்றத்திற்கு கண்ணாடி பொருள்கள் பயன்படுத்துகிறார்கள். இதில் கட்டிடங்களில் வெறும் கண்ணாடிகள் மட்டுமல்லாமல் மீநுண் தொழில் நுட்பம் செயல்படுத்தி மின் சாரம் உருவாக்கப்படுகிறது. இதற்கு முக்கிய காரணம் மீநுண் தொழில் நுட்பம்.



இதே அளவில் கட்டிடத்தின் வெளிப்புறத் தோற்றத்தில் இருக்கும் சாதாரண கண்ணாடிகளில் ஏற்படும் தூசு மற்றும் மாசு கட்டிடங்களுக்குள் ஏற்படும் சிதைவுகளை தடுக்க மீநுண் தொழில் நுட்பம் சார்ந்த டைட்டானியம் டையாக்சைடுகள் என்ற வேதியியல் பொருள் பூசப்படுகிறது. இந்த பொருள்கள் மீநுண் அளவியல் கொண்டு பூசப்படுவதால் தூசு மற்றும் மாசு இதன் மேல் படிய இயலாது. மேலும் மழை நீர் மற்றும் புகை சார்ந்த பொருள்கள் இதன் மீது ஒட்டுவது தவிர்க்கப்படுகிறது. இந்த தொழில் நுட்பம் தாமரை இலையின் மீது எவ்வாறு நீர் ஒட்டுவது இல்லை என்பதை ஒரு அடிப்படை அறிவியலாக புரிந்து கொண்டதால் சாத்தியமாயிற்று.

இதனைச் சார்ந்த தொழில் நுட்பம் மூலம் ஒரு பொருளின் ஒளி பிரதி பளிக்கும் தன்மையை மாற்றியமைக்க இயலும். ஒரு துகளின் வர்ண நிலையை மாற்றி அமைக்க இயலும். எவ்வாறு ஒரு பட்டாம்பூச்சி பல்வேறு வர்ணங்களை வெளிப்படுத்துகிறதோ அதே போல் மீநுண் தொழில் நுட்பத்தில் ஒரு குறிப்பிட்ட வேளையில் பொருளை மீநுண் தொழில் நுட்பத்தினால் மாற்றுவதன் மூலமாக அதனுடைய ஒளியியல் பண்புகளை மாற்ற இயலும். மீநுண் தொழில் நுட்பம் சார்ந்த உயிரியல் பண்புகள் மிகக் குறிப்பிட்ட லேசர் மற்றும் LED (Light Emitting Diode) துறையில் ஒளி உமிழ்வான்கள் என்ற தொழில் நுட்பமாகப் பயன் படுத்தப்படுகிறது. இதன் வாயிலாக போக்குவரத்து சமிக்கைகள் (Traffic Signal) இடையூறின்றி தொடர்ந்து செயல்படுத்தப்படுகிறது. மேலும் ஒளி உமிழிகள் சார்ந்த அந்த ஒளி மூலம் (Light Source) மிகக் குறைந்த அளவில் மின்சாரம் பயன்படுத்தப்படுகிறது. இத்தகைய முறையில் ஒரு பங்கு மின்சாரத்தில் ஒரு குழல் மின் விளக்கு கொடுத்து வந்த இதே ஒளி அளவினால் அநேக LED சார்ந்த விளக்குகள் ஒளி தருகிறது.

மேலும் சூரிய மின் தகடுகளில் பூசப்பட்டு வந்த பாதரசம் சார்ந்த பூச்சு வர்ணங்கள் முற்றிலுமாக தவிர்க்கப்பட்டு விட்டது. மேலும் LED சார்ந்த விளக்குகள் மற்ற விளக்குகள் போல் இல்லாமல் 20 முதல் 25 ஆண்டுகளுக்கு எவ்வித பிரச்சினையுமின்றி வேலை செய்ய வல்லது. இது போன்று குறுந்தகடுகள் (Compact Disk) சேகரிக்கும் தகவல்கள் இன்றைய Digital Versatile Disk (DVD) DVD எனப்படும் வகையில் தகடுகளாக மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. பத்து ஆண்டுகளுக்கு முன்பு பயன்படுத்தப் பட்ட குறுந்தகடுகளில் ஒரு முழு திரைப்படத்தைப் பார்க்க இயலாது. ஆனால் இன்றைய DVD-க்களின் மூலம் அதிலுள்ள அளவில் மூன்று திரைப்படங்கள் வரை வார்க்க இயலுகிறது. இதற்கு காரணம் அத்தகடுகளில் உள்ள துகள்களை படிக்கவும் செயல்படுத்தவும் மாற்றி அமைக்கவும் ஊதா வர்ணம் (Laser Blue Ray) கொண்டு ஒரு குறிப்பிட்ட அலை நீளத்தில் அமைக்க இயலுகிறது. இதன் மூலமாக குறைந்த இடைவெளிகளில் அதிக தகவல்களை சேகரிக்க இயல்கிறது. இதன் முக்கிய காரணம் மீநுண் தொழில்நுட்பம் ஆகும். ●

- **ஜே.குமார்,** பதிவாளர் (பொறுப்பு), அண்ணா தொழில்நுட்பப் பல்கலைக் கழகம், சென்னை.

# வடகிழக்கின் ஆடைகள்

சிவப்பு வெள்ளைப் பட்டைகளைக் கொண்டிருக்கும் கார்பி பழங்குடியினரின் 'என்டி' ஆடைகளையோ அல்லது கருநிற பருத்தி 'பாணி கம்ச்சா' ஆடைகளையோ அல்லது மேத்தி பெண்களின் பருத்தி துண்டுகளையோ நீங்கள் பார்க்க நேர்ந்தால் வடகிழக்கு மாநிலங்களில் இருந்து வந்திருக்கும் இந்த ஆடைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு கதையைக் கூறுகின்றன என்பதை நீங்கள் உணர்வீர்கள். துடிப்புள்ள தொன்மங்கள், புரானக்கதைகள், நாட்டுப்புற மரபுகள், இயற்கை நிகழ்வுகள், அன்றாட வேலைகள் ஆகியவற்றின் மீது இவை வெளிச்சம் பாய்ச்சுகின்றன.

கலை, பண்பாடு பற்றிய கூகுள் இணைய தளத்தில் வடகிழக்குப் பகுதியின் ஆடைப் பாரம்பரியம் பற்றிய ஆர்வமூட்டும் கட்டுரையைக் காணலாம். கொல்கத்தா இந்திய அருங்காட்சியகத்தில் உள்ள தொகுப்புகள் இங்கு காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. "ஆடைகளும், துணி வகைகளும் கலாசாரங்களை அடையாளப்படுத்தக் கூடியவையாக இருக்கின்றன. இனக் குழுக்களின் பாரம்பரிய உடைகள் இனக்குழுக்களை அடையாளப்படுத்துவதில் முக்கியமான பங்கினை வகிக்கின்றன. ஒவ்வொரு இனக்குழுவிற்கும் அதற்கே உரித்தான தனிவகைப்பட்ட வடிவமைப்புகளும், நிறச்சேர்க்கைகளும் இருக்கின்றன. ஆடை வகைகள் வெளிப்படுத்தும் வெவ்வேறு மையக் கருத்துகளும், வடிவமைப்புகளும் வடகிழக்கில் வாழும் மக்களின் வாழ்க்கைச் சடங்குகள், ஆன்மிகம் இவற்றுடன் தொடர்புடையனவாக உள்ளன" என்று இந்தக்கட்டுரை தெரிவிக்கிறது.

"சடங்குகளுக்கு உரிய சால்வைகளை நாங்கள் துவைப்பதில்லை. அவற்றை வெறுமனே வெயிலில் உலர வைக்கிறோம். பிறகு பயன்படுத்துகிறோம், மீண்டும் உலர வைத்து பாதுகாத்து வைக்கிறோம்" என்று நாகலாந்தில் நான் பயணித்த போது ஒரு பெண் என்னிடம் சொன்னார்





என்று இந்திய அருங்காட்சியகத்தின் காப்பாளர் டாக்டர். மிட்டா சக்ரவர்த்தி தெரிவிக்கிறார். இவர் வடகிழக்கின் ஆடைகள், அவர்கள் கூடிச் செயலாற்றும் விதம் பற்றிய கண்காட்சிக்கு ஏற்பாடு செய்துதிருந்தார். எனவே, அஸ்ஸாமின் எரி சால்வைகள், நாகா சால்வைகள் போன்றவை நூறு நூறு ஆண்டுகளாக பாரம்பரியமாக இருந்து வருங்கின்றன என்பது தெரிகிறது. சில வகை சால்வைகளை அந்தப் பழங்குடி இனத்தின் தலைவன் மட்டுமே அணிந்துகொள்ளமுடியும். எனவே இத்தகைய சால்வைகள் ஒரு நபரின் அந்தஸ்து பற்றியும் எடுத்துக் காட்டுகின்றன.

அருணாசலப் பிரதேசத்தின் ஆதி கல்லாங்க் பழங்குடி இனத்தவர் மலைப்பாம்பை தங்களது அடையாளக் குறியாகக் கொண்டுள்ளனர்.

மிசோரமில் லூஷை, லாய் ஆகிய முக்கியமான இரண்டு பழங்குடியினரின் பாரம்பரிய ஆடைகளில் இவ்விரண்டு இனத்தவரிடையே குறிப்பிட்ட சில ஒற்றுமைகள் காணப்படுகின்றன. ஆனால் ஆடை தயாரிக்க பயன்படுத்தும் மூலப்பொருள்களில் வேறுபாடுகள் உள்ளன. ●

# Indiastat

PRESENTS

Mobile App

## Key Economic Indicators of India

The Key Economic Indicators of India app assists one to track the newest economic information of India with an unrivalled range of economic sectors which are being updated on a weekly basis. This app, which is supported in 19 languages, is a one-stop-app for the economists, financial market professionals, academics, marketers and every single person who always hanker after the up-to-date economic data of India.

AVAILABLE ON




Available in 12 Indian and 7 International languages

Updated weekly


With comparative data

DATANET INDIA INITIATIVES

Indiastat.com | DistrictsofIndia.com | ElectionsinIndia.com | Indiastatgraphics.com | DatanetIndia-eBooks.com

18 years of serving socio-economic & electoral research fraternity in India and abroad


ஆண்டு நிகழ்வுகள் பற்றிய தொகுப்பு நூலான பாரத் 2019 (இந்தி), இந்தியா 2019 (ஆங்கிலம்) ஆகிய இரண்டு நூல்களும் வெளிவந்துவிட்டன. இந்திய அரசின் வெளியீட்டுப் பிரிவின் 63 ஆவது பதிப்பான இந்த நூல் அதிகம் வாசிக்கப்படும் பிரபலமான நூலாகும். அரசாங்கத்தின் கொள்கைகள், சாதனைகள், துறைதோறும் காணப்படும் வளர்ச்சிப் போக்குகள் ஆகியவை பற்றிய நம்பகமான தகவல்களை இந்தப் புத்தகம் கொண்டிருக்கிறது. போட்டி தேர்வுகளுக்கும், நடப்பு பற்றி அறிந்து கொள்வதற்கும் இந்த நூல்கள் துணைபுரியும். இந்தியா 2019 ஆண்டு நிகழ்வு ஆங்கில நூல் சென்னை ராஜாஜி பவனில் உள்ள வெளியீட்டுப் பிரிவின் விற்பனை மையத்தில் விலைக்குக் கிடைக்கும். bharatghosh epayment gateway மூலமாக இணையம் வழியாகவும் நூலைப் பெறலாம். Amazon, Google Play ஆகியவற்றில் மின் நூலாக இதனைப் பெறமுடியும். ஆங்கில நூலின் விலை ரூ.350/- ஆகும்.




# வாக்குப்பதிவு சரிபார்ப்புக் கருவி - VVPAT

**தா**ங்கள் வாக்களித்த வேட்பாளருக்கே தங்களது வாக்கு பதிவாகியுள்ளதா என்பதை சரிபார்க்க VVPAT எனப்படும் (Voter Verifiable Paper Audit Trail) இயந்திரங்கள் உதவுகின்றன. வாக்காளர்கள் தங்களுக்கு விருப்பமான வேட்பாளருக்கு வாக்கைப் பதிவு செய்ய வாக்குப்பதிவு இயந்திரத்தில் பட்டனை அழுத்தியவுடன், இந்த VVPAT இயந்திரம் ஒப்புகைச் சீட்டு ஒன்றைக் காட்டும். அதில் வாக்காளர் தேர்வு செய்த வேட்பாளரின் பெயர், அவரது தேர்தல் சின்னம் இடம்பெற்றிருக்கும். அந்த ஒப்புகைச் சீட்டு ஏழு விநாடிகளுக்கு மட்டுமே வாக்காளருக்கு காண்பிக்கப்படும். பிறகு முத்திரை வைக்கப்பட்ட ஒரு பெட்டியில் அது விழுந்துவிடும். இந்த இயந்திரம் வாக்காளர் மட்டுமே பார்க்கக்கூடிய வகையில் வைக்கப்பட்டிருக்கும்.



2014 நாடாளுமன்ற தேர்தலில் இந்த VVPAT இயந்திரங்கள் பயன்படுத்தப் பட வேண்டும் என தேர்தல் ஆணை யத்திடம் உச்சநீதிமன்றம் 2013ஆம் ஆண்டு கோரியது. ஆனால் சில தொகுதிகளில் மட்டுமே அப்போது இது பயன்படுத்தப்பட்டது. வாக்குப்பதிவு முறை துல்லியமாக செயல்பட VVPAT இணைக்கப்பட்ட வாக்குப்பதிவு இயந்திரங்கள் உதவுகின்றன. வாக்குப் பதிவில் வெளிப்படைத்தன்மை நிலவு வதற்கும், வாக்காளர்களின் நம்பிக் கையைப் பெறவும் வாக்குப்பதிவு இயந்திரங்களுடன் VVPAT இயந்திரங் கள் இணைக்கப்பட வேண்டும். என உச்சநீதிமன்றம் தெரிவித்தது

வாக்குப்பதிவு இயந்திரத்தின் நம்பகத்தன்மை மீது பல குற்றச்சாட்டு கள் எழுந்துவரும் நிலையில், நேர்மை யாகவும், வெளிப்படைத்தன்மையுடன் தேர்தல் நடப்பதை உறுதி செய்யும் முயற்சிகளில் ஒன்றாக இந்த VVPAT இயந்திரங்கள் பார்க்கப்படுகின்றன. வாக்குப்பதிவு இயந்திரங்களின் நம்பகத்தன்மை குறித்து கேள்வி எழுப்புவோர் VVPAT இயந்திரங்கள் அவசியமான ஒன்று என்று கூறுகின்றனர். இந்தமுறை நடைபெறவிருக்கும் மக்களவை தேர்தலில், அனைத்து வாக்குச் சாவடிகளிலும் VVPAT இயந்திரங்கள் பயன்படுத்தப்படும் என தலைமைத் தேர்தல் அதிகாரி சுனில் அரோரா தெரிவித்தார்.




இந்த VVPAT முறை 2015ஆம் ஆண்டு முதல், சட்டமன்றத் தேர்தல் களில் பின்பற்றப்பட்டு வருகிறது. இது முதன்முறையாக கோவா சட்டமன்ற தேர்தலில் பயன்படுத்தப்பட்டது. சுமார் 1,500 வாக்குப்பதிவு இயந்திரங்களுடன், ஒப்புகைச் சீட்டு வழங்கும் இயந்திரங்கள் இதுவரை இணைக்கப்பட்டு சோதனை செய்யப்பட்டுள்ளன. வாக்குப்பதிவு செய்யப்பட்ட சின்னத்துக்கு மாறான சின்னத்தில் வாக்குகள் இதுவரை ஒரு முறை கூட பதிவாகவில்லை என்றும் கூறப்படுகிறது. ●

# Employment News

## Leading Weekly Journal on Job Opportunities










**Subscribe e-version at**
**www.e-employmentnews.co.in**

**For details to book a copy**
**visit us at: www.employmentnews.gov.in & www.rojgarsamachar.gov.in**

facebook page
facebook.com/director.employmentnews

follow us @Employ_News

**Publications Division**
Ministry of Information & Broadcasting
Government of India

**Employment News**
7th Floor, Soochna Bhawan
C.G.O Complex, Lodhi Road, New Delhi-110003
Ph. 24367453
E-Mail: enewscirculation@gmail.com

ISSN 0971 - 8362
THITTAM (YOJANA - TAMIL)

Published on: 1st Week of Every Month
Posted on : 3rd April 2019

Registrar of Newspapers for India No.24495/74
"Registration" No.TN/CC(S)DN//566/18-20/2018-20
WPP No.: TN/PMG (CCR) WPP No. 150/2018-20


**மகாத்மாவின் 150-ஆவது பிறந்த ஆண்டை மகாத்மா காந்தியின் நூல்களுடன் கொண்டாடுவோம்**

150 YEARS OF CELEBRATING THE MAHATMA




உங்கள் பிரதிக்கு முந்துங்கள்...

Publications Division


Published by Shri Sanjay Ghosh, Editor/Asst. Director on behalf of DG, Publications Division, Ministry of Information and Broadcasting, Govt. of India.
and Printed by N.K.Narayanamurthy at YUVA SAKTHI PRINTS (P) LTD., No.2, 8th Street, Dr.Subbarayan Nagar, Kodambakkam, Chennai - 600 024. Ph: 2372 4901.
Published at 'A' Wing, Ground Floor, Rajaji Bhavan, Chennai - 600 090. Ph: 2446 5382. Chief Editor: Shamima Siddiqui